# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 32

சுடர் 33 கதிர் 129 பங்குனி 21ஆம் நாள் புதன்கிழமை 04 ஏப்ரல் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


### யாழ்ப்பாணத்தில் மருத்துவக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.4
யாழ்ப்பாணம் மருத்துவ பீடத்தில் இன்று முதல் நான்கு தினங்கள் மருத்துவக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள் >> 06

### இரவு 9.30க்கு முடிவு வரும்

கொழும்பு, ஏப். 4
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மகிந்த அணியால் >> 06

### கூட்டமைப்பின் 10 கட்டளைகள்

தமிழ் மக்களின் நீண்டகால அவலமும் உடனடித் தேவைகளாக >> 27

## நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில்
# கூட்டமைப்பு இன்று ரணிலை ஆதரிக்கும்
## அதை நோக்கியே நகர்வுகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று நாடாளுமன்றத்துக்கு வரவுள்ள நிலையில் அவரைக் காப்பாற்றி அரியணையில் தொடர வைப்பதற்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. >> 04

### சோதனை செய்த இராணுவத்திடம்
## துப்பாக்கியைப் பறித்துத் தப்பியோடிய மூவருக்கும் தொடர்ந்து மறியல்

முல்லைத்தீவு, ஏப்.4
இராணுவத்திடம் இருந்து துப்பாக்கியைப் பறித்துச் சென்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.
வழக்கின் முதலாம் மற்றும் இரண்டாம் சாட்சிகளான இராணுவத்தின >> 04

## கிளிநொச்சியில் சந்திரிகாவால் அபிவிருத்தித் திட்டங்கள் திறப்பு

கிளிநொச்சி, ஏப்.4
கிளிநொச்சிக்கு நேற்றுச் சென்ற முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அங்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்தார். இந்த அபிவிருத்தித் திட்டங்கள் தேசிய நல்லிணக்க செயலகத்தின் நிதி உதவியில் மேற்கொள்ளப்படுகின்றன. >> 04

### கூட்டமைப்பின் முடிவு இன்று
## 5 மணிநேரம் பேசியும் தீர்க்கமான முடிவில்லை

கொழும்பு, ஏப். 4
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் >> 28

## கூட்டமைப்பின் கோரிக்கைக்கு ரணில் இன்று பதிலளிப்பார்

கொழும்பு, ஏப். 4
அரசியல் தீர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நேரில் முன்வைத்தனர். இந்தக் கோரிக்கைகளுக்கு தலைமை அமைச்சர் ரணில் எழுத்துமூலம் பதில் >> 06

## அரசியல் நெருக்கடிகளால் பாதிக்கப்படக்கூடாது தீர்வு
### தந்த வாக்குறுதிகளை நினைவிருத்துமாறு மைத்திரியிடம் உரைத்தது கூட்டமைப்பு

கொழும்பு, ஏப்.4
நீண்டகாலமாக இழுத்தடிக்கப்படும் முக்கியபிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கூட்டு >> 06

## புறமுதுகு காட்டாது சவாலை வெல்வேன்
### *பதவி விலகக் கேட்ட சு.கவினருக்கு பொட்டிலடித்தால் போல் ரணில் பதில்*

கொழும்பு, ஏப். 4
தலைமை அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ரணில் விக்கிரமசிங்க >> 06

## கூட்டு அரசே அவசியம் என்பதை மைத்திரிக்கு எடுத்துரைத்தோம்
*சந்திப்புத் தொடர்பில் மாவை எம்.பி. கருத்து* >> 06

## பல்கலை. ஊழியர்கள் போராட்டம் தொடரும்

யாழ்ப்பாணம், ஏப். 4
பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டபோதும் போராட்டம் முடியவில்லை. கடிதம் ஒன்றைப் பரிமாறுவதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.
10 வீத சம்பள அதிகரிப்புக்கு யாழ்ப்பா >> 27

## றேசிங் ஹோமர்ஸ் புறா கடத்திய இருவர் கைது




யாழ்ப்பாணம், ஏப். 4
றேசிங் ஹோமர்ஸ் புறாக்களைக் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 26 புறாக்கள் >> 06

## நம்பிக்கை இல்லையெனில் பிறிதொரு நீதிபதியை நியமித்துக் கொள்ளுங்கள்
### *வவு. மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் விசனம்*

வவுனியா, ஏப் 4
என்னில் நம்பிக்கை இல்லை எனில் வேறு ஒரு நீதிபதியை நியமித்து தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கை நடத்துங்கள் என்று விசனித்தார் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன்.
தமிழ் அரசியல் கைதிகள் மூவருடைய வழக்கு நேற்று வவுனியா மேல் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. வவுனியாவைச் சேர்ந்த அரச சட்டத்தரணி >> 04

## ஒருவாக்குவித்தியாசத்தில் தமிழ்க் கூட்டமைப்பு ஆட்சி

யாழ்ப்பாணம், ஏப்.4
கரவெட்டிப் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது தமிழ் தேசிய கூட்டமைப்பின் 9 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும் தங்கவேலாயுதம் ஐங்கரனுக்கு வாக்களித்தனர். கூட்டமைப்பு 11 வாக்குகளைப் பெற்றது.
சுதந்திரக் கட்சி சார்பில் தவிசாளராக >> 06

## பரு. சபை கூட்டமைப்பிடம் தாமரை மொட்டும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப் 4
பருத்தித்துறைப் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக்கான முதல் அமர்வின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட அரியரத்தினம் சார்ள்ஸ் அரியகுமாருக்கு ஆதரவாக ஈ.பி.டி.பி, ஐ.தே.க. என்பவற் >> 29

## கூட்டு அரசின் ஆயுள் இன்றோடு முடிகிறது

யாழ்ப்பாணம், ஏப். 4
நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெற்றாலும், தோல்வியடைந்தாலும், தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க விலகாவிடின், கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறவுள்ளது. >> 06

## வாக்குகள் சிதறக்கூடாது என்பதற்காகவே நடுநிலை
### முன்னணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 4
கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் தெரிவின் போது, வாக்குகள் சிதறடிக்கப்படக் கூடாது என்பதற் >> 28

## நீதிமன்றை நாடுவேன் என்கிறார் சு.க. போட்டியாளர் இராமநாதன்
>> 06

## ஈ.பி.டி.பி, சு.கட்சியின் ஆதரவின்றி கரவெட்டியில் கூட்டமைப்பு ஆட்சி
### மக்கள் முன்னணி, கூட்டணி நடுநிலை

யாழ்ப்பாணம், ஏப்.4
கரவெட்டிப் பிரதேச சபையில் நேற்று இடம்பெற்ற தவிசாளர் தேர்வுக்கான அமர்வில் ஈ.பி.டி.பி. சு.க வின் ஆதரவின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியது. ஐக்கிய தேசியக் கட்சி கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கியது.
கரவெட்டிப் பிரதேச சபையின் முதல் அமர்வு நேற்று உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமை >> 04




# சூழலை மாசுபடுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## காத்தான்குடி நகர சபைத் தலைவர் அஸ்வர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஏப் 4

வியாபார நிலையங்களில் சேரும் கழிவுகளை நகரசபையின் திண்மக் கழிவகற்றல் வாகனத்தினரிடம் ஒப்படைக்காது சூழலை மாசுபடுத்தும் வகையில் செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு காத்தான்குடி நகர சபையின் தலைவர் எஸ்.எச்.அஸ்வர் தெரிவித்தார்.

காத்தான்குடி நகர சபையின் தலைவரான எஸ்.எச்.அஸ்வர் பதவியேற்ற மறுதினமான நேற்று நகரைத் தூய்மைப்படுத்தும் நோக்கில் நகரின் கடைத் தெருவுக்குச் சென்று குப்பைகளைப் புகைப்படம் எடுத்தார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வியாபார நிலையங்களில் சேரும் கழிவுகளை தரம் பிரித்து நகரசபையின் திண்மக் கழிவகற்றல் வாகனம் வரும் போது ஒப்படைக்க வேண்டும். இதுவே நகர சபையின் ஒழுங்கு விதியாகும். இதனை சிலர் கருத்திலெடுக்காது செயற்படுகின்றனர். வியாபார நிலையங்களிலுள்ள ஒரு சிலரின் செயற்பாடுகள் தடுக்கப்பட வேண்டும். சூழலை மாசுபடுத்தியதற்காக அந்த வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நிலைமையை மாற்றியமைத்து நகரையும் சூழலையும் தூய்மை மாறாது பேணுவதோடு நகருக்கு வரும் மற்றும் அங்கு வாழும் மக்களின் சுகாதாரத்தையும் சௌகரியத்தையும் உறுதிப்படுத்துவது அனைவரின் பொறுப்பாகும் - என்றார். (ற,ரி4)



யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட தேசியப் பாடசாலையில் கல்விபயிலும் மாணவிக்கு சைக்கிள் நேற்று வழங்கப்பட்டது. பாடசாலை அதிபர் அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் மற்றும் உப அதிபர் ஆகியோரின் முன்னிலையில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் என்.கனகரட்ணம் விந்தனின் நிதி ஒதுக்கீட்டில் இந்தச் சைக்கிள் வழங்கப்பட்டது.(ற,ரி4)

## விபத்தில் உயிரிழந்த மாணவனுக்கு இழப்பீடு

தென்மராட்சி,ஏப்.4

ஹொரவப்பொத்தானையில் வாகன விபத்தில் உயிரிழந்த மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை மாணவன் நகுலகுமார் துஷிகரனுக்கான இழப்பீட்டுத் தொகை நேற்று வழங்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கான சுரக்ஸ இலவச காப்புறுதித் திட்டத்தின் கீழ் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன சாவகச்சேரி கிளையின் முகாமையாளர் கே.பிரதீபனால் மாணவனின் தந்தையிடம் இந்தத் தொகை வழங்கப்பட்டது. (ற,ரி4,9)

## சிகரெட் கொண்டு வந்தோருக்கு அபராதம்

கொழும்பு,ஏப்.4

சட்ட விரோதமாக சிகரெட் தொகையொன்றை நாட்டுக்குக் கொண்டுவந்தோம் என்ற குற்றத்தை ஒப்புக் கொண்ட மூவருக்குமினுவாங்கொடை நீதிவான் நீதிமன்று நேற்று அபராதம் விதித்தது.

ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

அந்தச் சந்தேகநபர்கள் வத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் கொண்டு வந்த சிகரெட் தொகையை அரசுடமையாக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற,ரி4)



## தீப்பரவலால் வீடு முற்றாகச் சேதம்

ஹற்றன்,ஏப்.4

உஹனகோணகலயில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீப்பரவலில் வீடு முற்றாக எரிந்து சேதமடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

வீட்டில் உள்ள மின்சார உபகரணங்கள் மற்றும் பிள்ளைகளின் பாடசாலைப் புத்தகங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருள்களும் தீக்கிரையாகியுள்ளன.

வீட்டு உரிமையாளர் தமது பிள்ளைகளை அழைத்து வர பாடசாலைக்குச் சென்றிருந்த வேளையிலேயே இந்த தீப்பரவல் இடம்பெற்றது எனக் கூறப்பட்டது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற,ரி4)

## இலத்திரனியல் நிறுவன பதிவுத் திட்டம் அறிமுகம்

புதிய நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான இலத்திரனியல் நிறுவனப் பதிவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. என்று தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இலத்திரனியல் நிறுவனப் பதிவுகள் தொடர்பாக இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட நிறுவனப் பதிவுத்திட்டத்தின் உத்தியோகபூர்வ வெளியீட்டு நிகழ்வு நேற்று கொழும்பில் இடம் பெற்றது.அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

3 தொடக்கம் 6 மாதங்களில் இறைவரித்திணைக்களம் மற்றும் தொழிலாளர் சேமலாப நிதியங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நிறுவனப்பதிவு இலத்திரனியல்மயமாக்கல் தொடர்பான பின்னூட்டல் காப்பு முறைமையின் செயற்பாடு மந்த நிலையில் காணப்படுகின்றமை முழு செயற்பாட்டையும் பாதிப்பதாக அமையும் - என்றார். (ற,ரி4)

## கோழிக் குஞ்சு வழங்கும் நிகழ்வு

நுவரெலியா,ஏப்.4

பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் தோட்ட பெண்களுக்கு கோழிக் குஞ்சு வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. பொகவந்தலாவ தோட்டப் பகுதிகளில் உள்ள 46 குடும்பங்களுக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்கில் 2 இலட்சத்து 28 ஆயிரத்து 500 ரூபா செலவில் கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமானின் பணிப்புரைக்கு அமைய இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ற,ரி4)

## மைத்திரிக்குச் சோதிடம் கூறிய விஜிதவுக்கு காலம் சரியில்லை

கொழும்பு,ஏப் 4

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன உயிரிழப்பார் என்று பொய்யாக கணித்துக் கூறிய சோதிடரான விஜித ரோஹண விஜயமுனிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட மா அதிபரிடம் ஆலோசனை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இரகசியப் பொலிஸார் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இது தொடர்பான மனு இன்று கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில் விசாரணைக்கு எடுத்த போது இது தொடர்பான விசாரணைகள் தற்போது நிறைவடைந்துள்ளன என்று இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அதன்படி இந்த மனுவை எதிர்வரும் ஜூலை மாதம் 09 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்க உத்தரவிட்ட நீதிபதி அன்றைய தினம் விசாரணையை முன்னெடுக்க அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (ற,ரி4)



## தேயிலைத் தோட்டத்தில் சிறுத்தைக் குட்டி மீட்பு

மஸ்கெலியா,ஏப்.4

மஸ்கெலியா கவரவில தேயிலை மலையிலிருந்து சிறுத்தைக் குட்டியொன்று உயிருடன் நேற்று மீட்கப்பட்டது. அந்தப் பிரதேசத்து மக்களால்பொலிஸாருக்கும் நல்லதண்ணீர் வனஜீவ அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்ட தகவலையடுத்து இந்தச் சிறுத்தை குட்டி மீட்கப்பட்டது.

பராமரிக்கக் கூடிய நிலையில் இந்தச் சிறுத்தைக் குட்டி காணப்படாததனால் இதனை உட்வல மிருக மருத்துவமனையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நல்லதண்ணீர் வனஜீவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடந்த சில வார காலமாக அந்தத் தோட்டத்தில் சிறுத்தையின் நடமாட்டம் காரணமாக பொது மக்கள் அச்சத்துடன் வாழ்வதாகவும் கூறப்பட்டது. (ற,ரி4)



## பொதுநலவாய மாநாட்டுக்கு மட்டக்களப்பு பெண் தெரிவு

மட்டக்களப்பு,ஏப்.4

லண்டனில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்பு மாவட்டம் கோரளைப்பற்று பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த செல்வி.தாட்சாயினி நிமலேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வோர் சைலட் கொலன்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு எஸ்கோ நிறுவனம் கடந்த நான்கு வருட காலமாக நடைமுறைப்படுத்தி வந்த சிறுவர் பங்களிப்பு மற்றும் சிறுவர் உரிமைகளுக்காக பரிந்துரை செய்தல் திட்டங்களில் இருந்து இவர் தெரிவுசெய்யப்பட்டார்.

இவரை அந்தப் பகுதி பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் மற்றும் உதவி பிரதேச செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு அந்தப் பயணம் தொடர்பாக நேற்று எடுத்தியம்பி ஆலோசனைகளையும் வழங்கினர். (ற,ரி4,46)



# ரணிலை ஆதரித்தால் எதிர்காலத்தில் சிக்கல்

## கூட்டமைப்பை எச்சரிக்கிறார் பந்துல

கொழும்பு, ஏப்.4

**நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையைப் பாதுகாக்க முனையுமாயின் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரவுள்ள மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுடன் பேச்சு நடத்தி தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது எப்படி என்ற பிரச்சினை எழும் என்று கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

கண்டி கலவரத்தின்போது சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து குறித்த அசம்பாவிதம் பரவாது தடுப்பதற்கு அரசு தவறியுள்ளது என்ற காரணமும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் பிரதமருக்கு ஆதரவு தெரிவித்து விட்டு எவ்வாறு மக்கள் மத்தியில் செல்வதென்ற சிக்கலும் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பு வஜிராஷர்ம பௌத்த நிலையத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சிறி லங்கா சுதந்திரக் கட்சி பிரதமரை பதவி விலகுமாறு கேட்டுக்கொண்டுள்ளது. ஆகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெறுவது உறுதி. பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை (இன்று) விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. எனினும் ஏற்கனவே நிறைவேற்றிக்கொண்ட சட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறன.

ஏப்ரல் முதலாம் திகிதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ள புதிய வருமான வரிச்சட்டத்தினூடாக 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வரி அறவிடுவது குறித்த எழுத்து மூலமான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. 18 வ்யதுக்கு மேற்பட்டவர்கள் காணி, வாகனம் உட்பட சொத்துகள் கொள்வனவு செய்யும்போது வரி செலுத்த வேண்டிவரும்.

30 வருட காலம் நாடு போரால் பாதிக்கப்பட்டிருந்தது. போரை நிறைவுசெய்த பின்னர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு இவ்வாறு வரி அறவிடவில்லை. மாறாக மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக வரிச் சலுகை வழங்கப்பட்டது.

கூட்டரசு சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கு அமைவாகவே இவ்வாறான வரிச்சுமைகளை விதிக்கிறது. மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு ஆட்சிக்கு வரும்போது புதிய வருமான வரிச் சட்டத்தை மக்களுக்கு சலுகை வழங்கும் வகையில் திருத்தியமைப்போம் - என்றார். (ற-31)

## அரசை நம்பாவிட்டால் பதவியைத் தூக்கி வீசுக

### சு.கவுக்கு ஐ.தே.க. பதிலடி

கொழும்பு, ஏப். 4

அரசு மீது நம்பிக்கையில்லாதவர்கள் பதவிகளைத் துறந்துவிட்டு வீட்டுக்குச் செல்லுங்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க பதவி துறக்காவிடின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்போம் என்று எச்சரிக்கை விடுத்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறு கூறியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இராஜாங்க அமைச்சர் ஹர்ச டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பொது எதிரணியால் நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிக்க கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி ஒன்றிணைந்திருந்த அனைத்துச் சக்திகளும் கைகோர்த்துள்ளன.

அரசு மீது நம்பிக்கையில்லாதவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தோற்கடிக்கும் வரை பதவிகளில் தொடராது பதவிகளைத் துறந்துவிட்டு வீட்டுக்குச் செல்லுங்கள். உறுதியாக நாளைய தினம் (இன்று) நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிப்போம் - என்றார். (ற-5)

## இந்தியாவுக்குப் பயணிக்க கருணாசேகரவுக்கு தடை

கொழும்பு, ஏப். 4

தேசிய பாதுகாப்பு கல்வி பீடத்தின் கட்டளைத் தளபதியும் இராணுவத்தின் முன்னாள் அலுவலகப் பிரதானியுமான மேஜர் ஜெனரால் அமல் கருணாசேகரவுக்கு இந்தியாவுக்கு செல்ல வழங்கப்பட்ட அனுமதியை கல்கிசை மேலதிக நீதிவான் லோச்சனா அபேவிக்ரம நேற்று இல்லாமல் செய்தார்.

ஊடகவியலாளர் கீத் நொயாரைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்து தாக்கியமை தொடர்பில் மேஜர் ஜெனரால் அமல் கருணாசேகர சந்தேக நபராகப் பெயரிடப்பட வாய்ப்புள்ளதால் அவரின் வெளிநாட்டுப் பயணத்தைத் தடை செய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவு ஏற்கனவே கல்கிசை நீதிவான் நீதிமன்றில் கோரிக்கை முன்வைத்தமைக்கு அமைய அவர் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டது. (ற5,71)

## மைத்திரியின் ஆலோசகருடன் சீனாவில் கோத்தபாய பேச்சு

கொழும்பு, ஏப்.4

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அங்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் முக்கிய ஆலோசகர்கள் சிலருடன் பேச்சு நடத்தியுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சீனா அரச தலைவர் சிறிசேனவுக்கு நெருக்கமான ஐவர் கொண்ட குழுவொன்றையும் கோத்தபாய ராஜபக்சவையும் தனித்தனியாக தனது நாட்டுக்கு அழைத்துள்ளது. அங்கு அவர்கள் சந்திப்பதற்கு சீனா ஏற்பாடுகளை செய்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க உட்பட ஐவர் கொண்ட குழுவை சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் சீனா செல்லவில்லை. மார்ச் 28 ஆம் திகதி சீனாவுக்குச் சென்ற சிறிசேனவின் ஆலோசகர் சிரால் லக்திலக தலைமையிலான குழுவினர் அங்கு கோத்தபாய ராஜபக்சவுடன் பேச்சு மேற்கொண்டுள்ளனர்.

இருதரப்பும் மேற்கொண்ட பேச்சு தொடர்பான விவரங்கள் வெளியாகாதபோதிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொது எதிரணிக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் இடம்பெற்றிருக்கலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

## கட்சியைப் புதுப்பிக்க கூடுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஏப். 4

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதம் வாக்கெடுப்பு முடிவடைந்த கையோடு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அதிரடி மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடி இறுதி முடிவை எடுப்பதற்காக எதிர்வரும் 7, 8 ஆம் திகதிகளில் சிறிகொத்தவில் கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முக்கிய கூட்டங்கள் நடைபெறவுள்ளன. இந்தக் கூட்டங்களில் கட்டாயம் பங்கேற்குமாறு கட்சியின் மையச் செயற்குழு உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-5)

## தற்சமயம் தமிழ்க் கூட்டமைப்புக்கு எந்த உறுதியும் கொடுப்பார் ரணில்

### கூட்டு எதிர்க்கட்சி கூறுகின்றது

கொழும்பு. ஏப்.4

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க எவ்வகையிலான நடவடிக்கைக்கும் தயாராவார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதற்கு அவர்களுக்கு எவ்வகையிலான உறுதிமொழியையும் வழங்கலாம். அதில் அரசியலமைப்பு சீர்திருத்தம் முக்கிய இடம் வகிக்கும் என கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பு வஜிராஷர்ம பௌத்த நிலையத்தில் நடைபெற்றது. அதில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகலாம். அவ்வாறு அமையுமாயின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி என்ற அந்தஸ்த்தை இழக்க நேரிடும் நாட்டுக்கும் தேசியத்துவத்துக்கும் எதிரான அரசாகவே கூட்டரசு உள்ளது. வெசாக் மற்றும் பொசன் தோரணங்களுக்கும் தடைவிதித்துள்ளது. இது பௌத்த கலாசாரத்தை அவமதிக்கும் விடயமாகும்.

அதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கு அமைவாக நாட்டின் பொருளாதாரம் திருப்பப்படுவதை தடுப்பதற்கும் எதிர்பார்க்கிறோம். 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வரிச்சுமை நூறு சதவீதமாக அதிகரித்துள்ளது. அதனையும் தடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

வெளிநாட்டுக்கொள்கையிலும் மாற்றம் ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறோம். தற்போதைய கொள்கையினால் யுத்தத்தை வெற்றிகொண்ட இராணுவத்தினர் நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். நாரம்மல பிரதேசத்தில் குரங்கு பிடிக்கும் பணிக்கும் இராணுவத்தினரையே உட்படுத்தியுள்ளனர். நாட்டின் உள்ளக விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் இளவரசர் சையிட் அல் ஹூஸைன் தலையிடுகிறார். சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு இணங்கவே நாட்டில் சகல விடயங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டுக்கு பாதகம் ஏற்படுத்தும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களை மகிந்த ராஜபக்சவின் ஆட்சியின் போது விலக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்போம். - என்றார். (ற-61)

## பரபரப்புக்கும் மத்தியில் பேச்சுக்கள் தொடர்கின்றன

### சபையிலும் எம்.பிக்கள் மந்திராலோசனை

கொழும்பு, ஏப். 4

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாகவும், எதிராகவும் நேற்றுக் காலை முதல் இரவு வரை சந்திப்புகள் நடைபெற்றன. இன்றும் இரவு 8 மணிவரை இறுதிக்கட்ட பேச்சுகள் தொடரவுள்ளன. நம்பிக்கையில்லாத் தீர்மான விவகாரத்தில் இறுதிநேரத்தில்கூட முடிவுகள் மாறலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. அதன்பின்னர் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் பேச்சு நடைபெற்றது.

இதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரச தலைவர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளும் நேற்று முக்கியத்துவமிக்க சந்திப்புகளை நடத்தியிருந்தன. சபைக்குள்ளும், நாடாளுமன்ற வளாகத்திலும் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம், கூட்டமாகக் கூடி நின்று ஆலோசனை நடத்திக் கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. குறிப்பாக சபைக்குள் வந்திருந்த ஆளும், எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூடி நின்று பேசிக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. (ற-5)

## ‘கம்பம் கடலமுதம்’ நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 4
மு.சிவநேசனின் கம்பம்கடலமுதம் நூல் வெளியீடு வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் வசந்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நூலின் முதல்பிரதியை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வெளியிட்டு வைக்க மாகாண கல்வி பணிப்பாளர் செ உதயகுமார் பெற்றுக்கொண்டார்.



## கிளிநொச்சியில்..

பளை இந்து ஆரம்பப் பாடசாலையின் வகுப்பறைக் கட்டடம், இத்தாவிலில் அமைக்கப்பட்ட விற்பனை நிலையம், கரைச்சி தெற்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உணவு பதனிடல் நிலையம் என்பவை முன்னாள் அரச தலைவரால் திறக்கப்பட்டன.
வட்டக்கச்சி, முழங்காவில் பிரதேசங்க ளில் தேசிய நல்லிணக்க செயலகத்தின் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் அவிருத்தித்திட்டங்களையும் மக்கள் பாவ னைக்குக் கையளித்தார்.
“போரால் பாதிக்கப்பட்ட வடக்கில் பல அபிவிருத்தித் திட்டங்களை நாம் முன்னெடுத் துள்ளோம். வடக்கு மற்றும் வடமத்திய மாகாண மக்களுக்காக எதிர்காலத்தில் 50 ஆயிரம் முதல் 8 லட்சம் ரூபா வரையான சிறப்புக் கடன் திட்டங்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தொழில் முயற்சியாளர்கள் திட்டங்களை வகுத்துத் தயாராக இருக்க வேண்டும். 6 வீத வட்டி அடிப்படையில் இந்தக் கடன்கள் வழங்கப்படும்.
கடந்தகாலங்களில் வங்கிகளில் பெறப்பட்ட 50 ஆயிரத்துக்குக் குறைவான கடன்களைச் செலுத்த முடியாது சிரமப்படுபவர்கள் 6 மாதங்கள் அவற்றைச் செலுத்தாது இருக்கும் வகையில் விசேட சலுகைகளை வழங்கியுள்ளோம்.” என்று முன்னாள் அரச தலைவர் சந்திரிகா தெரிவித்தார். (ற-6,35,9)

# சட்ட மருத்துவ அதிகாரி இல்லாததால் காத்திருந்து சடலத்தை பெறும் நிலை

சாவகச்சேரி ஏப். 4
**சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நிரந்தர சட்ட மருத்துவ அதிகாரி இல்லாததால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணியாற்றும் சட்ட மருத்துவ அதிகாரியே பதில் கடமையாற்றி வருகிறார்.**

இந்த நிலையில் பொதுமக்கள் பொறுமைகாத்து, உடற்கூற்றுப் பரிசோதனை செய்தபின்னர் இறந்தோரின் உறவினர் சடலங்களைப் பெற்றுச் செல்லுங்கள் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.
மருத்துவமனையின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
விபத்துக்கள் உள்ளிட்ட திடீர் இறப்புகள் கட்டாயம் உடற்கூற்றுப் பரிசோதனை செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. 60 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மக்களும் தென்மராட்சிக்கு அப்பால் முதன்மைச் சாலை மற்றும் ஏ 32 சாலை போன்றவற்றில் இடம்பெறும் விபத்துகள் போன்றவற்றால் உயிரிழப்போரின் சடலங்களும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.
மருத்துவமனையில் கடமையாற்றிய சட்ட மருத்துவ அதிகாரி உயர்கல்வி பெற அண்மையில் கொழும்பு சென்றுள்ளார். நிரந்தர சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவமனைக்கு நியமிக்கப்படும் வரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியின் பணி தேவையாக உள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனை செய்வது மட்டும் மருத்துவமனை நிர்வாகமும் சட்ட மருத்தவஅதிகாரியும் இணைந்து மேற்கொள்வதாகும். பாதிக்கப்பட்ட ஒருவர் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டபின்னர் உயிரிழந்தாலோ அல்லது மருத்துவமனையில் சேர்க்கும்போது உயிரிழந்தாலோ உடற்கூற்றுப் பரிசோதனை செய்யப்படல் வேண்டுமென்பது நடைமுறை.
ஒருவர் உயிரிழந்தால் பொலிஸாருக்கு அறிவிக்கவேண்டியதே மருத்துவமனையின் கடமை. அதன் பின்னர் பொலிஸார் நீதித்துறையினரின் நடவடிக்கையின் பிரகாரம் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டால் மட்டும் உடற்கூற்றுப் பரிசோதனை செய்து சடலத்தை வழங்க வேண்டிய பொறுப்பு சட்ட மருத்துவ அதிகாரிக்கும் மருத்துவமனை நிர்வாகத்துக்கும் உரியது.
சடலத்தை உடனடியாக வழங்குவதற்கு மருத்துவமனை நிர்வாகம் ஒத்தழைக்கவில்லையென குற்றஞ் சாட்டுகின்றனர். நீதிமன்ற நீதிவானின் அல்லது திடீர் இறப்பு விசாரணை அதிகாரியின்பணிப்புரைகிடைத்தபின்னரே உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளவேண்டுமென்பது மக்கள் அறிந்திருக்க வேண்டிய விடயம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,9)



## ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு

அனலைதீவு, ஏப்ரல் 4
அனலைதீவு தெற்கு சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராம பனையோலை பயிலுநர்களின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு அனலைதீவு மனோன்மணி அம்பாள் ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. ‘இந்த நிகழ் வுக்கு முதன்மை விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் மஞ்சுளா தேவி சதீசனும், சிறப்பு விருந்தி னர்களாக ஊர்காவற்றுறை சமுர்த்தி அலு வலர் கருணாகரன், கிராம அலுவலர் சி.வினேஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

## துப்பாக்கியைப்...

ரும், மூன்றாம் நான்காம் சாட்சிகளாக வனவளப் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர்களும் சந்தேகநபர்கள் மூவரையும் நீதி பதி முன்னிலையில் அடையாளம் காட்டினர்.
சந்தேநகர்கள் மூவரையும் எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

**பின்னணி**
முல்லைத்தீவு ஆண்டான்குளத்தில் கடந்த 26ஆம் திகதி மரம் கடத்தப்படுகின்றது என்று இராணுவத்தினருக்குத் தகவல் கிடைத்தது. வனவளப் பாதுகாப்புப் பிரிவு இந்தத் தகவலை வழங்கியிருந்தது. இராணுவத்தினர் வீதிச் சோதனையில் ஈடுபட்டனர்.
மரங்களுடன் வந்த வாகனம் ஒன்றை மறித்துச் சோதனையிட்டுள்ளனர். வாகனத்தில் வந்தவர்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. வாகனத்தில் வந்த இருவரும் இராணுவத்தினரின் துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு காட்டுப் பகுதிக்குள் ஓடித் தப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.
27ஆம் திகதி பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து அந்தப் பகுதியில் தேடுதல் நடத்தினர். சிலரிடம் விசாரணை நடத்தியதில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்தியவிசாரணைகளில் துப்பாக்கி மதகின் கீழ் இருந்து மீட்கப்பட்டது. எனினும் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்படவில்லை.
பிரதான சந்தேகநபர் தேடப்பட்டுவந்த நிலையில் அவர் 28ஆம் திகதி நீதிமன்றில் சரணடைந்தார்.
இராணுவத்தினரின் பணிக்கு இடையூறு விளைவித்தமை, ஆயுதத்தைப் பறித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
இது தொடர்பான வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேக நபர்கள் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். (ற-ரி3)

## கூட்டமைப்பு...

கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் அவரது அலுவலகததில் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் ரணிலை ஆதரிக்கக்கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தீவிரமாகக் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் கட்சித் தலைமையோ நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிக்கவேண்டும் என்கிற எதிர்பார்ப்புடனேயே காய் நகர்த்தி வந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். கூட்டமைப்பு நடுநிலை வகிக்க வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருக்கிறது.
ரணிலுக்காக அல்ல கூட்டு அரசு பதவியில் இருக்கவேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என்றும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளிப்பதன் மூலம் மகிந்தவின் அடுத்தடுத்த காய் நகர்த்தலுக்குள் சிக்குண்டு கடைசியில் மகிந்தவிடமே ஆட்சியை ஒப்படைப்பதாக அமையக்கூடாது என்றும் கூட்டமைப்புத் தலைமை திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளது.
மூன்று நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலை ஆதரிக்கும் முடிவுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தபோதும் அதனையும் பொருட்படுத்தாமல் இன்று இது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கூட்டமைப்புத் தலைமை அறிவித்தது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.
“ரணிலை ஆதரிப்பதற்கு அவர்கள் முடிவெடுத்துவிட்டனர். அதனை மற்றையவர்களைக் கொண்டு செயற்படுத்துவதற்காகவே இந்தக் கூட்டம். நாம் என்ன காட்டுக் கத்துக் கத்தினாலும் அது பற்றி அலட்டிக் கொள்பவர்களாக அவர்கள் இல்லை. நாளை (இன்று) காலையில் எப்படியும் ரணிலை ஆதரிக்கும் முடிவையே கூட்டமைப்பு எடுக்கும்.” என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார். (உ-5,26,105)

## ஈ.பி.டி.பி...

யில் கூடியது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தங்கவேலாயுதம் ஜங்கரனைத் தவிசாளராக முன்மொழிந்தது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி சதாசிவம் இராமநாதனைத் தவிசாளராக முன்மொழிந்தது. பகிரங்க வாக்கெடுப்பா? இரகசிய வாக்கெடுப்பா? என்பதற்கான வாக்கெடுப்பையே இரகசியமாக நடத்த வேண்டும் என்று சுதந்திரக் கட்சியினர் கேட்டுக் கொண்டனர். சட்டத்தில் அவ்வாறு நடத்த இடமில்லை என்று தெரிவித்து பகிரங்க வாக்கெடுப்பா? இரகசிய வாக்கெடுப்பா? என்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
பகிரங்க வாக்கெடுப்புக்குப் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
தமிழ் தேசிய கூட்டமைப்பின் 9 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும் தங்கவேலாயுதம் ஜங்கரனுக்கு வாக்களித்தனர். ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் 3 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 7 உறுப்பினர்களும் சதாசிவம் இராமநாதனுக்கு வாக்களித்தனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏழு உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூன்று உறுப்பினரும் நடுநிலமை வகித்தனர். தவிசாளராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முன்மொழியப்பட்ட தங்கவேலாயுதம் ஜங்கரன் தெரிவு செய்யப்பட்டார்.
உப தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கந்தர் பொன்னையா முன்மொழியப்பட்டார். வேறுகட்சிகள் எவரையும் முன்மொழியாததால் அவர் போட்டியின்றி உபதவிசாளராகத் தெரிவானார். (ற-21)

## நம்பிக்கை...

எஸ்.சி.பகீம் வழக்கு விசாரணைகளை எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதிக்கு மாற்ற வேண்டும் என்று மன்றில் கோரினார். சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரி வராததைக் காரணம் காட்டியே வழக்கை திகதி மாற்ற வேண்டும் என்று அவர் கோரினார். அப்போதே நீதிபதி சசிமகேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
“தமிழ் அரசியல் கைதிகளுடைய வழக்கு விசாரணைகள் வெவ்வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றப்படுகின்றன. தற்போது விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. என்னில் நம்பிக்கை இல்லை என்றால் இந்த வழக்குக்கு வேறு ஒரு நீதிபதியை நியமித்து வழக்கை நடத்துங்கள்” என்று அவர் குறிப்பிட்டார்.
அரச சட்டத்தரணி கேட்டுக் கொண்ட திகதியன்று கட்டாயம் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகள் இடம்பெறும் என்றும் உத்தரவிட்டார்.
கடந்த 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்த அனுராதபுரம் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் வழக்கு விசாரணைகள் 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதிக்குப் பின்னர் அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.
தமது வழக்குகளை மீண்டும் வவுனியாவுக்கு மாற்றுமாறு கோரி மதியரசன் சுலக்சன், இராசதுரை திருவருள், கணேசன் தர்சன் ஆகிய மூன்று அரசியல் கைதிகளும் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டதை அடுத்து அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர். சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்கு வவுனியாவுக்கு மாற்றப்பட்டது.
வழக்குவிசாரணைகள் வவுனியாவில் இடம்பெறுவதற்கான கட்டளையை வவுனியா நீதிமன்று அனுப்பியது. அரசியல் கைதிகள் மூவரும் நேற்று வவுனியா மேல் நீதிமன்றுக்கு விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். (ற-21)

## மகளிர் தின விழா

யாழ்ப்பாணம், ஏப். 4
யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சண்டிலிப்பாய் சமாசத்தின் மகளிர் தின விழா பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தலைவி ஜெபமணி ஜோசவ் தலைமையில் நடைபெறவுள்ளது.

## வாழ்வாதார உதவிப்பொருள்கள்; காசோலைகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 4
சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, மறுவாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சினால் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் வாழ்வாதார உதவிப்பொருள்கள் வழங்கல், வறுத்தலைவிளான் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 25 வீடுகள் கையளிக்கும் நிகழ்வு மற்றும் நடேஸ்வர கல்லூரியில் புதிய கட்டடம் திறப்பு ஆகிய நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
ஆள்களையும், ஆதனங்கைளயும், கைத்தொழில்கைளயும் சீரமைப்புச் செய்யும் அதிகாரசபையால் வன்செயலினால் சொத்து இழப்பு ஏற்பட்ட மக்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு யாழ் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் 11.30 க்கும் அமைச்சின் செயலாளர் பொன்னையா சுரேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த இரு நிகழ்வுகளுக்கும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேதினாராஜா பங்குபற்றவுள்ளார்.
ஆள்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் சீரமைப்புச் செய்யும் அதிகாரசபையினால் சொத்து இழப்பு ஏற்பட்ட மக்களுக்கான காசோலை வழங்கல் மற்றும் வாழ்வாதார உதவிப்பொருள்கள் வழங்கும் நிகழ்வும் நாளை 5 ஆம் திகதி மாலை 3 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்விற்கு யாழ் .மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டைப்பிராய் ஆரம்ப சுகாதார நிலையம் திறப்புவிழா

யாழ்ப்பாணம்.ஏப். 4
சுதந்திர சுகாதார சேவையை வலுப்படுத்தும் நோக்கத்தை முன்மாதியாகக் கொண்டு பிஎஸ்டிஜி நிதி மூலத்தில் புதிதாக அமைக்கபட்டுள்ள கட்டைப்பிராய் ஆரம்ப சுகாதார நிலையத்தின் திறப்பு விழா இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது
வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ஞானசீலன் குணசீலனின் அழைப்பின் பேரில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனின் பிரசன்னத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் வைபவரீதியாகத் திறந்து வைக்கப் படவுள்ளது.



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் பத்தாவது குருதிக் கொடை முகா மும் கொடையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இளவாலை சனசமூக நிலையத்தில் அண்மையில் இடம் பெற்றது.





## வேலணையில் பலவகை பறவையினங்கள்

யாழ்ப்பாணம்.ஏப். 4
யாழ்ப்பாணம் வேலணை பகுதியில் உள்ள கரையோரப் பகுதிகளில் வெவ்வேறு வகையான பறவையினங்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இந்த பகுதியில் வழமையாக கொக்கு, ஆட்காட்டி பறவைகளே பெரிதும் காணப்படுகின்ற நிலையில் தற்போது வெவ்வேறு வகையான பல வர்ண நிறங்களில் அதிகளவான பறவையினங்கள் நீர் நிலைகளில் மீன்களை பிடித்து உண்பதை காண முடிகிறது.
கோடை காலங்களில் இவ்வாறான பறவைகள் அதிகளவில் வேறு பிரதேசங்களில் இருந்து அங்கு வந்து செல்வதா கப் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (7)

### உயர்தரத்துக்குத் தெரிவானோர்

# சிறந்த பாடங்களையே தெரிவுசெய்யவேண்டும்

### உடற்கல்வி சங்க தலைவர் அறிவுரை

**யாழ்ப்பாணம், ஏப். 4**
**ஜி.சி.ஈ.சாதாரணதரத்தில்சித்திபெற்றமாணவர்கள் ஜி.சி.ஈ.உயர்தரத்தில்சிறந்தபாடங்களைத் தெரிவு செய்ய வேண்டும். அப்போது தான் எதிர்காலம் சிறப்பானதாக அமையும்.**

இவ்வாறுஉடற்கல்விடிப்புளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன்தெரிவித்தார்.
உயர்தரத்துக்குத் தெரிவான மாணவர்களின் சிறந்த பாடத்தெரிவு தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:
சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் உயர்தர பிரிவுக்கு சிறந்த பாடங்களைத் தெரிவுசெய்ய வேண்டும். அதற்குப் பாடசாலைச் சமூகமும், பெற்றோரும், கல்விப்புலம் சார்ந்தவர்களும்முன்வரவேண்டும். உதவ வேண்டும்.
இன்றையகாலகட்டத்தில்உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பாடம் கற்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது. உயர்தரத்தில் சித்தி பெறுகின்ற வீதமும் குறைந்து வருகின்றது.
இதனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கணித, விஞ்ஞான பிரிவுக்குத்தமிழ்மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றது.
கல்வியியற் கல்லூரிகளிலும் கணித, விஞ்ஞான பாடத்துக்குத் தெரிவாவோரும்மிகக்குறைவாக உள்ளனர். இந்த நிலை தொடர்ந்தால் வெளிநாடுகளிலிருந்துதான் ஆசிரியர்களை அழைக்க வேண்டிவரும்.
இதனைகருத்தில்கொண்டுதகுதியும்-திறமையும்கொண்டமாணவர்களை உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பாடத்தை தெரிவு செய்ய ஊக்கமளிக்க வேண்டும்.
பல பாடசாலைகளில் இரண்டு, மூன்று மாணவர்களே கல்வி கற்கும் நிலை புள்ளிவிவர ரீதியாக எடுத்துக்காட்டுகின்றது.
எனவே மாணவர்களுக்குக் கணித, விஞ்ஞான பாடங்களில் பயப்பீதியை ஏற்படுத்தாது மாணவர்களின் நன்மை கருதியும் வடக்கு மாகாணத்தின் எதிர்கால கல்வியின்நிலைகருதியும்விழிப்புணர்வை சம்பந்தப்பட்டவர்கள் வழங்கவேண்டிய கட்டாய சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளோம்.
எதிர்காலத்தில் விஞ்ஞானம் கற்கும் மாணவர்களுக்கும் சிறப்பான கல்வி ஊக்குவிப்பை மாணவர்களுக்குவழங்ககல்விக்கொள்கைகளில்மாற்றம்பெறவேண்டும் என்பதுடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சும் பிரத்தியேகமான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் - என்றார். (4.50)

## ஓட்டிசம் விழிப்புணர்வு தினம்

யாழ்ப்பாணம்.ஏப். 4
உலக ஓட்டிசம் விழிப்புணர்வு தின நிகழ்வு யாழ்ப்பாணம் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.பாலராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் சிறப்புரையை யாழ்ப்பாண போதனா மருத்துவமனை குழந்தை மருத்துவ நிபுணர் கீதாஞ்சலி சத்தியதாஸ் நிகழ்த்தவுள்ளார். அனைவுரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக சிறப்பு கல்விப்பிரிவு தெரிவித்துள்ளது. (113)

## அரச புகைப்பட விழா

யாழ்ப்பாணம்,ஏப். 4
கலாசார அலுவல்கள் திணைக்களம் கலைஞர்களின் புகைப்படக் கலையை ஊக்குவிக்கும் நோக்குடன் மூன்றாவது முறையாக அரச புகைப்பட விருது விழாவை ஏற்பாடு செய்துள்ளது.சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட புகைப்படக் கலைஞர்கள் இந்தவிருதுவிழாவுக்கானசுற்றறிக்கையைப் பெற்று விண்ணப்பப் படிவத்தையும் பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்றுபுகைப் பட்த்தையும் விண்ணப்பப்படிவத்தை யும் பூர்த்தியாக்கி மே மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார பிரிவில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

## மழலைகளின் விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம்.ஏப்.4
தொல்புரம் மத்திய சனசமூக நிலைய சக்தி முன்பள்ளி மழலைகளின் விளையாட்டுவிழா முன்பள்ளி மைதானத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை மதியம் 2 மணிக்கு தலைவர் ந.யசிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தின ராக யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (113)

# ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் 2017

**யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்**
ம.அஜித்-7ஏ பி சி, ஜெ.இசையழகி-2ஏ,2பி,4சி,எஸ்,வி.கஜந்தினி-2ஏ பி 4சி எஸ்,ச.பகீரதன்-ஏ பி சி 5 எஸ்,ச.தக்ஷி-2 பி 3சி 3 எஸ்,ம.விதுஷன்-பி 3 சி 4 எஸ்.

**யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்**
கு. சஞ்சயன் -9ஏ கே.கருணாகரன் -9ஏ,ச.சுபிதா -9ஏ, த.சிந்துஜா -7ஏ 2பி, அ.சோபிகா. -6ஏ 2பி சி, சி. கீர்த்திகா -5ஏ 2பி 2சி

**கைதடி முத்துக்குமார சுவாமி வித்தியாலயம்**
ப.விதுர்ஷன் 9ஏ, சி.சுபாங்கன் 8ஏ பி, த.தவவாசன்- 8ஏ பி, து.பிரவீனா8ஏ பி, பா.லாவணிசா 6ஏ 3பி, கு.கயோதினி 6ஏ 2பி சி, இ.அபிநயா 5ஏ4பி, அ.இசாளினி5ஏ3பிசி,தி.கோணேஸ்வரன் 5ஏ 3பி எஸ் ,அ.சௌமிகன் 5ஏ 3பி எஸ், இ.திலக்சன் 4ஏ 4பி சி (9)

**மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்**
ஜே.ரம்சிகா 8ஏ பி சி, ரா.மிதுலா 5ஏ பி 2சி எஸ், த.ஜனனி 4ஏ 3பி சி எஸ்,ப.அர்ச்சனா 3ஏ பி 2சி எஸ்,சி.வித்தியா 3ஏ 3சி 2 எஸ்(9)

**யா/ ஆவரங்கால் இராமலிங்க வித்தியாலயம்**
ஸ்ரீ .கம்சுயா -8ஏ,1சி, ச.யோகநந்தேஸ்வரா சர்மா -5ஏ 3பி 1சி, வி.யெனிஸ்டரன் -5ஏ 3சி, சு.சுதர்சன் -4ஏ 3சி எஸ், சிவரமணி.சி -3ஏ,4பி,சி,எஸ், த.கேமிசா -3ஏ 2பி 3சி எஸ்,செ.சாமினா -3ஏ 2பி 2சி 2எஸ், ச.சமினா-3ஏ பி 2சி 2எஸ்ஈ த. தலக்சனா -3ஏ பி சி,2எஸ்

**மாதகல் சென்.யோசப் மகா வித்தியாலயம்**
க.மதுசா - 9ஏ, ர.டினுஷா - 7ஏ, 2பி, அ.நிவோல்ரா - 7ஏபிசி, க.ஜெனார்த்தனன்- 7ஏபிசி, கி.கிறிஸ்ரிக்கா- 7ஏ,சிஎஸ், ச.ஜெனனி- 6ஏ2பிசி, க.விஷ்ணுவர்த்தனன்- 6ஏபி2சி, ஜீ.ஜீவனா- 6ஏபிசி, வி.மேரிவிதுஷா- 5ஏ4பி, ந.சுகன்யா- 5ஏபி3சி, ஜெ.மேரி பௌஸ்ரீனா- 4ஏ2பி3சி, பா.கேமலதா- 4ஏ2பி3சி, க.டிலக்சன் - 4ஏ4பி, சு.அஜித்குமார் - 4ஏ2பி2சி, த.திருக்குமார்- 3ஏ4பி2சி, கு.தர்சன்- 3ஏ3பி2சிஎஸ், செ.கஜானன் - 3ஏ2பி2சி2எஸ்.

**யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி**
ஜெ.வைஸ்ணவி- 8ஏபி, சு.பிருந்தாதரன்- 8ஏஎஸ், சி.விதுசன்- 8ஏஎஸ், த.சுகன்யா- 6ஏ2பிசி, அ.திவ்யா- 6ஏபிசிஎஸ், ஜெ.அலெக்சனா- 6ஏபிசிஎஸ், ப.கோகுல்ராஜ்- 5ஏ3பிசி, ப.சுரேகா - 5ஏபி3சி, பா.கிருத்திகா- 5ஏபி2சிஎஸ், த.யதுசா-4ஏ4பிஎஸ், வி.பிந்துஜன்- 4ஏபி2சி, சி.தேனுசன்- 4ஏ2பி3எஸ், கி.அஜித்தன்- 4ஏ2பி,2சி, பா.சங்கீர்த்தனன்- 3ஏ2பி3சி, இ.வைஸ்ணவி- 3ஏபி3சிஎஸ், உ.பிரதீபன்- 2ஏ4பி2சி, ஜெ.அபிஷாளினி- 2ஏ3பி2சிஎஸ்.

## யாழ்ப்பாணத்தில்...

ளது. யாழ்ப்பாணம் மருத்துவபீடத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த மருத்துவக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4,5,6,7ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பி.ப. 7 மணிவரை கண்காட்சி நடைபெறவுள்ளது. அடிப்படை விஞ்ஞானம், மருத்துவத் துறையின் முன்னேற்றங்கள், நிகழ்கால சுகாதார சவால்கள், சுகாதார தொழில் வாய்ப்புக்கள், சிறுவர் ஆரோக்கியம், யௌவன பருவ ஆரோக்கியம், வயது வந்தோர் சுகாதாரம், முதியோர் சுகாதாரம் ஆகிய எட்டுத் தொனிப்பொருள்களில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழப்பாணம் மருத்துவபீடமும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டு மக்கள் பயன்பெற வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற-35)

## அரசியல்...

அரசை நம்பி நாங்கள் எங்களது மக்களுக்கு சில வாக்குறுதிகளை வழங்கியுள்ளோம். அந்த நம்பிக்கைக்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது தலைவர்களான உங்களது பொறுப்பும் கடமையும் கூட. தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி தமிழருக்குத் தீர்வு தரும் விடயங்களை பாதித்துவிடக் கூடாது.

இவ்வாறு அரச தலைவரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடியாகத் தெரிவித்தது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மற்றும் தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா ஆகியோர் நேற்றுப் பேச்சு நடத்தினர்.

அரச தலைவர் செயலகத்தில் அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் இந்தச் சந்திப்பு நடந்தது. அதில் கூட்டமைப்பினர் கட்சியின் நிலைப்பாட்டை நேரடியாக அரச தலைவரிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தன் தெரிவித்ததாவது: தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமை நீடிக்காமல் கூட்டாட்சித் தத்துவம் பேணப்பட வேண்டும். தமிழர் பிரச்சினை தீர அரச தலைவரும், தலைமை அமைச்சரும் பன்னாட்டுச் சமூகத்தின் முன்னாலும் உள்நாட்டிலும் அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற ஒன்றுபட்டு செயற்படவேண்டியது அவசியம். யாரையும் அரசியலில் வெற்றியடையச் செய்வதோ அல்லது அரசியலில் இருந்து ஒதுங்கச் செய்வதோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேலையல்ல. ஆனால், தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதற்கு முறையான அரசியல் சூழ்நிலை இருக்க வேண்டும்.

அரசமைப்புத் திருத்தம் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகள் குறித்து நல்லாட்சியின் இரண்டு தலைவர்களும் கவனம் செலுத்தி பிரச்சினைகளை சுமுகமாக முடித்துக்கொள்ள வேண்டும்.

அரச தலைவராகிய நீங்கள் ஆட்சியில் தொடர வேண்டும். மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவாவது இரு தலைவர்களும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டோம்' என்று சம்பந்தன் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவகாரத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எடுக்கும் முடிவுகளில் தாம் எதுவித தலையீடுகளையும் செய்யப்போவதில்லை என்றும், மனச்சாட்சியின்படி அவர்கள் வாக்களிப்பார்கள் என்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பதிலளித்தார் என்று அறியமுடிந்தது. (ற-5)

## புறமுதுகு...

நேற்று நிராகரித்தார். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முறியடிப்பதற்குத் தேவையான ஆதரவு தன்னிடம் உள்ளது என்றும் அவர் இடித்துரைத்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்துக்கு வருவதற்கு முன்னர் தனது பதவியை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க துறக்கவேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் தீர்மானிக்கப்பட்டது.

இந்த முடிவை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்காக தலைமை அமைச்சர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களை, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் சிலர் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்றுச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்றனர்.

சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பிடம் எடுத்துரைத்தார். இந்த முடிவை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமது கட்சி ஏற்காது என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். அதற்கு ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளைச் சுட்டிக்காட்டி நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடைபெற்றால் அது வெற்றிபெறுவதற்குரிய சாத்தியம் உள்ளது என்று சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்துள்ள தலைமை அமைச்சர் ரணில், பதவி விலகுவதென்பது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அங்கீகரிப்பதுபோலாகிவிடும். சுதந்திரக் கட்சியின் முடிவுடன் இணங்கமுடியாது.

எங்கும் ஓடி ஒளியாமல் சவாலை வெற்றிகொள்ளமுடியும் என்று நான் நம்புகின்றேன். நடப்பதை நாளை (இன்று) பார்த்துக்கொள்ளலாம் என்று கூறியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களும் ரணிலின் கருத்துக்கு உடன்பட்டுள்ளனர்.

இதையடுத்து சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மீண்டும் கூடி ஆராய்ந்துள்ளனர். ரணிலுக்கு எதிரான தீர்மான விவகாரத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மூன்று அணிகளாகப் பிரிந்து நிற்கின்றது. மகிந்த தரப்புடன் ஒரு குழுவும், ரணிலுடன் மற்றுமொரு குழுவும், வாக்கெடுப்பில் பங்கேற்காமலிருக்க உத்தேசித்துள்ளன. (ற-5)

## கூட்டு அரசே...

யாழ்ப்பாணம், ஏப். 4

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் இரண்டு கட்சிகளும் பிளவுண்டுள்ளது. இந்தப் பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்படுவது நாங்களே. இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும். இதுதான் எங்களின் விருப்பம். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அழுத்தமாக எடுத்துரைத்தோம் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

அரச தலைவருடன் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பில் மாவை.சோ. சேனாதிராசாவிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எங்களைச் சந்திக்கவேண்டும் என்று விரும்பியிருந்தார். அதற்கு அமைவாக இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் பிளவுண்டு இருக்கின்றன. இந்தப் பிரச்சினையால் நாங்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். இரண்டு கட்சிகளும் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என்று கோரினோம். அதற்கு அரச தலைவர் இணக்கம் தெரிவித்தார். ஆனால் நாளை (இன்று) எப்படிச் செயற்படுவார்கள் என்று தெரியவில்லை.

அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சருடன் இன்று (நேற்று) நடத்திய சந்திப்புக்களில் பேசப்பட்ட விடயங்களை நாடாளுமன்றத்தில், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் உரையாற்றும்போது வெளிப்படுத்துவோம் என்றார். (ற-5)

## கூட்டு...

அதனால் கூட்டு அரசின் ஆயுள் இன்று இரவு 9.30 மணியுடன் முடிவுக்கு வரும்.

உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டு அரசின் பிரதான இரண்டு பங்காளிக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பெரும் பின்னடைவைச் சந்தித்திருந்தன. மகிந்த அணி எழுச்சி பெற்றிருந்தது. தேர்தல் முடிவுகள் வெளிவந்த ஒரு வாரத்துக்குள்ளேயே கூட்டு அரசு உச்சக்கட்ட முரண்பாடு எழுந்தது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகவேண்டும் என்று, அரச தலைவர் மைத்திரிபால உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் வலியுறுத்தியிருந்தனர்.

இந்த விவகாரத்தில் மேற்குலக இராஜதந்திரிகள் தலையிட்டதைத் தொடர்ந்து நிலைமை சுமுகமானது. அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சுப் பதவிகள் மாற்றியமைக்கப்பட்டன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சுப் பதவிகள் மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்ட போதும் இடம்பெறவில்லை.

இவற்றுக்கிடையே மகிந்த அணியால் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதையடுத்து தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விலகவேண்டும் என்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் குரல் எழுப்பத் தொடங்கினர்.

இந்த நிலையில் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது இன்று வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இந்த வாக்கெடுப்பில் ரணில் வெற்றி பெற்றாலும், கூட்டு அரசு நீடிக்காது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சர் பதவியிலிருந்து விலகாவிடின், கூட்டு அரசிலிருந்து இன்று இரவு 9.30 மணிக்கு சுதந்திரக் கட்சி வெளியேறும் என்று அந்தக் கட்சி முன்னரே அறிவித்திருந்தது. தலைமை அமைச்சர் ரணிலுடனான நேற்றைய சந்திப்பும் திருப்தியளிக்காத நிலையில், சுதந்திரக் கட்சி கூட்டு அரசிலிருந்து வெளியேறும் முடிவில் உறுதியாக உள்ளது என்று தெரியவருகின்றது. (ற-5)

## கூட்டமைப்பின்...

வழங்கவேண்டும் என்றும் கோரினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து நாடாளுமன்றக் குழுவினர், தலைமை அமைச்சர் ரணிலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று மாலை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

அரசியல் தீர்வு, காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட தமிழர் தரப்பினர் உடனடி மற்றும் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தனர்.

கூட்டமைப்பினரின் கோரிக்கைகளைப் பார்வையிட்ட தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவற்றை நிறைவேற்றலாம் என்று வாய்மூலம் பதிலளித்துள்ளார். அவற்றை எழுத்தில் வழங்கவேண்டும் என்று கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர். அத்தோடு தான் நிறைவேற்றுவதாக ஏற்றுக்கொண்ட வாக்குறுதிகளை நாடாளுமன்றத்தில் தான் உரையாற்றும்போது வெளிப்படையாகவே குறிப்பிடவேண்டும் என்றும் கூட்டமைப்பினர் வலியுறுத்தினார். ஆனால், அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள தலைமை அமைச்சர் மறுத்துவிட்டார். தான் அவ்வாறு செய்தால் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரினதும் கோபத்துக்கு ஆளாகநேரிடும் என்று அவர் அச்சம் வெளியிட்டார். கூட்டமைப்பினரின் கோரிக்கைக்கான பதிலை நாளை (இன்று) வழங்குவதாக தலைமை அமைச்சர் ரணில் குறிப்பிட்டார். (உ-5-105)

## இரவு...

முன்வைக்கப் பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது இன்று வாக்கெடுப்பு நடக்கவுள்ளது. தலைமை அமைச்சர் பதவியில் ரணில் தொடர்வாரா? இல்லையா? என்பது இன்று இரவு 9.30 மணிக்குத் தெரியவரும்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மகிந்த அணியால் சமர்ப்பிக்கப்பட்டது. இன்று காலை 9.30 மணிக்கு தீர்மானம் மீதான விவாதம் ஆரம்ப்மாகும். அதனால் நாடாளுமன்றத்தின் பாதுகாப்பும் பன்மடங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது. காலையில் ஆரம்பமாகும் விவாதத்தின் மீது இரவு 9.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் பெயர்களையும் அழைத்து, பகிரங்கமான வாக்கெடுப்பாக நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 106 உறுப்பினர்களும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சிலவேளைகளில், ஐ.தே.க. அதிருப்தி உறுப்பினர்களான அதுரலிய ரத்ன தேரர், விஜயதாச ராஜபக்ச, வசந்த சேனநாயக்க, பாலித ரங்கே பண்டார உள்ளிட்டோர், ஆதரவாக வாக்களிக்கலாம் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் 95 பேரில், மகிந்த அணி உறுப்பினர்கள் 53 பேரும் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில், துமிந்த சில்வா உள்ளிட்ட சிலரே தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்றும் ஏனையோர் மகிந்த அணியுடன் இணைந்து தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பாலும் வாக்கெடுப்பில் பங்கேற்காது விடும் முடிவையே இன்று எடுக்கக் கூடும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைவிதி இன்று இரவு 9.30 மணிக்குத் தெரியவரும். (ற-5)

## றேசிங்...

கைப்பற்றப்பட்டுள்ளன. அவை சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தலைமன்னார் கடலில் படகு ஒன்றில் புறாக்களுடன் பயணித்த இருவரையும் கடற்படையினர் நேற்றுக் கைது செய்தனர். அவர்கள் சுங்கத் திணைக்களத்தின் தெல்லிப்பழையிலுள்ள கிளையின் அலுவலக உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதிகாரிகள் விசாரணை நடத்தினர். புறாக்களைக் கடத்திய இருவரும் தலைமன்னாரைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. விசாரணையின் பின்னர் இருவருக்கும் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டு, படகுடன் விடுதலை செய்யப்பட்டனர்.

புறாக்கள் கொழும்பிலுள்ள திணைக்களம் ஒன்றுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெல்லிப்பழையிலுள்ள சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தப் புறாக்களைப் பல மைல்கள் தூரத்துக்குக் கொண்டு சென்று விடுவித்தாலும் மீண்டும் தமது இடங்களுக்குச் சென்றுவிடும் தன்மை வாய்ந்தவை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

## நீதிமன்றை...

யாழ்ப்பாணம், ஏப்.4

உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் தெரிவுகளுக்கான வாக்கெடுப்புக்கு முன்னர் பகிரங்க வாக்கெடுப்பா இரகசிய வாக்கெடுப்பா என்று ஒரு வாக்கெடுப்பு நடத்தப்படும். கரவெட்டிச் சபையிலும் நேற்று அவ்வாறு ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

சிறி லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் சதாசிவம் இராமநாதன் பகிரங்க வாக்கெடுப்பா?. இரகசிய வாக்கெடுப்பா? எனத் தீர்மானிக்கும் வாக்கெடுப்பையே இரகசிய முறையில் நடத்தப்பட்டு இருக்க வேண்டும் என்று கோரினார். அதற்கு மறுப்புத் தெரிவித்த உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன்சட்டத்தின் பிரகாரமே இவ்வாறு நடத்தப்படுகிறது என்று தெரிவித்தார். எனினும் சட்டத்தில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை எனத் தெரிவித்த இராமநாதன் அது தொடர்பில் தான் நீதிமன்றை நாட உள்ளேன் என்றார்.

அதற்கு ஆணையாளர் " நீதிமன்றை நாடுவதற்கான முழு சுதந்திரமும் உரிமையும் உங்களுக்கு உண்டு " எனப் பதிலளித்தார்.

தவிசாளர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பாக நடத்தப்பட வேண்டும் என பெரும்பான்மையான உறுப்பினர்கள் கோரியதால் பகிரங்க வாக்கெடுப்பின் மூலம் தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. (ற-21,37)

## ஒரு வாக்கு...

முன்மொழியப்பட்ட சதாசிவம் இராமநாதனுக்கு ஈழ மக்கள் ஜனநாய கட்சியின் 3 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 7 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர். இராமநாதன் 10 வாக்குகளைப் பெற்றார். ஒரு வாக்கு வித்தியாசத்தில் கரவெட்டிப் பிரதேச சபையை கூட்டமைப்பு கைப்பற்றியது. (ற-21)

# நம்பிக்கையில்லா தீர்மானம் 58 வாக்குகளால் வெல்லும்

## கணக்குச் சொல்கிறார் கம்மன்பில

கொழும்பு, ஏப். 4

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றியடைவது உறுதியாகியுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரு வழிமுறைகள் உள்ளன. நாடாளுமன்றில் நடைபெறவுள்ள 12 மணி நேர விமர்சனங்களைச் செவிமடுத்துக்கொண்டு வாக்கெடுப்பில் தோல்வியடைந்து பதவி துறப்பது அல்லது தற்போதே தனது பதவியிலிருந்து விலகுவது என்பதாகும். குறித்த வழிமுறைகளில் ஒன்றை அவர் தெரிவு செய்துகொள்ளலாம்.

இவ்வாறுமகிந்தஅணிநாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த செய்தியாளர் சந்திப்பு பொரளை என்.எம். பெரேரா நிலையத்தில்நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.



அவர்மேலும்தெரிவித்ததாவது: நாடாளுமன்றில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 96 ஆசனங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 107 ஆசனங்களும், மக்கள் விடுதலை முன்னணிக்கு ஆறு ஆசனங்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 16 ஆசனங்களும் உள்ளன. நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் இருவர் எதிர்ப்புத் தெரிவிப்பர் என்று நாம் சந்தேகிக்கின்றோம். அவர்களின் ஆதரவையும் பெறுவதற்கு முயற்சி எடுக்கிறோம்.

தற்போதைக்கு அவ்விருவரினதும் ஆதரவு இல்லையென வைத்துக்கொண்டாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளிப்பவர்களின் எண்ணிக்கை 94 ஆகக் குறைவடையும். தீர்மானத்துக்கு எதிரான வாக்குகள் 109 ஆக அதிகரிக்கும்.

மக்கள் விடுதலை முன்னணி தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. அவ்வாறெனின் தீர்மானத்துக்குஆதரவானவாக்குகள் நூறாக அதிகரிக்கும். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் 27 பேர் ஆதரவாக வாக்களிப்பதாகத் தெரிவித்துள்ளனர். அவர்களில் 15 பேர் ஆதரவாக வாக்களிப்பது உறுதியாகும். அந்த 15 உறுப்பினர்களுடன் ஆதரவான வாக்குகள் 115 ஆக அதிகரிக்கும். அதேவேளை தீர்மானத்துக்கு எதிரான வாக்குகள் 109 இலிருந்து 94 ஆகக் குறைவடையும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நான்கு கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவரைக்கொண்ட இரண்டு கட்சிகள் வாக்கெடுப்பிலிருந்து விலகியிருப்பதற்குத் தீர்மானித்துள்ளன. அவ்விரு கட்சிகளிலுமுள்ள 11 உறுப்பினர்களும் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தாலும் தீர்மானத்துக்கு எதிரான வாக்குகள் 105 ஆக அதிகரிக்கும். எனவே தீர்மானம் ஏழு வாக்குகளால் வெற்றியடையும்.

தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் 27 பேரும் ஆதரவாக வாக்களித்தால் ஆதரவான வாக்குகள் 115 தொடக்கம் 127 வரையில் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. எதிராக வாக்களிக்கும் எண்ணிக்கைய 94 இலிருந்து 82 ஆகக் குறைவடையும்.

ஜாதிக ஹெலஉறுமய மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பில் ரணிலை நேரடியாகச் சுட்டிக்காட்டியுள்ளதால் அந்தக் கட்சியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களும் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிக்க முடியாது. மேலும் கண்டி கலவரத்தின்போது பொலிஸாரின் செயற்பாடு தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் என்பன முன்வைத்த விமர்சனங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவ்விரு கட்சிகளிலுமுள்ள 11 உறுப்பினர்களாலும் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிக்க முடியாது. குறித்த மூன்று கட்சியையும் சேர்ந்த 13 உறுப்பினர்களும் தமது சுய மதிப்புக்களைப் பாதுகாக்கும் வகையில் வாக்களிப்பிலிருந்து விலகிக்கொள்வர்.

குறித்த 13 உறுப்பினர்களும் வாக்களிப்பிலிருந்து விலகியிருப்பார்களாயின் தீர்மானத்துக்கு எதிரான வாக்குகள் 82 இலிருந்து 69 ஆக குறைவடைவதுடன் ஆதரவான வாக்குகள் 127 ஆக அதிகரிக்கும்.

அவ்வாறெனின் 58 மேலதிக வாக்குகளினால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றியடையும் - என்றார். (ற5,61)

# நல்லாட்சி அரசின் இறுதி நாள் இன்று

## கூறுகிறது மகிந்த அணி

கொழும்பு, ஏப். 4

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையிலாத் தீர்மானத்துக்குக் கூட்டு எதிர்க்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள தரப்பொன்றும் ஆதரவு வழங்கவுள்ளன.

ரணிலும் அவருடன் இருப்பவர்களும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கு எவ்வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் அது வெற்றியளிக்கப்போவதில்லை. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் இறுதித்தினம் இன்றாகும் என்று மகிந்த அணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்ததாவது:

நாட்டு மக்கள் கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நல்லாட்சி அரசுக்கு எதிராகத் தமது ஆணையை வழங்கினர். அதனை அடிப்படையாகக் கொண்டு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கூட்டு எதிர்க்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைத்துள்ளது.

இன்று சூரியன் மறைவதும் ஐந்தாம் திகதி சூரியன் உதிப்பதும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் தோல்வியைப் பறைசாற்றிக்கொண்டாகும் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கிறேன் - என்றார். (ற5,61)

# கோத்தாவை ஆட்சியேற்ற தமிழ்க் கூட்டமைப்பு முயற்சி

## குற்றஞ்சுமத்துகிறது சு.க.

கொழும்பு, ஏப். 4



ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணிலைக் காப்பாற்ற முன்வருவதானது எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் கோத்தபாய ராஜபக்ச ஆட்சிக்கு வருவதற்கான பாதையை அமைப்பதாகவேஅமையும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சிதெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்ததாவது:

நாம் கூட்டு அரசைப் பாதுகாக்கவே முயற்சிக்கின்றோம். அதனூடாக மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் தேசிய பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை அடைய முயற்சிக்கின்றோம். ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் கூட்டமைப்பு ரணிலைக் காப்பாற்றுமாகஇருந்தால்நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழக்கும். அதன்பின்னர் சுதந்திரக்கட்சி எதிர்க்கட்சிக்கு சென்றுவிடும்.

தொடர்ந்து ஐக்கிய தேசியக்கூட்டமைப்பும் இணைந்து அமைக்கும் ஆட்சியில் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியாது. மாறாக எதிர்வரும் 2020ஆம் ஆண்டு கோத்தபாய ராஜபக்ச ஆட்சிக்கு வருவதற்கான பாதை அமைக்கப்படும். கூட்டமைப்பு ரணிலுக்கு ஆதரவு வழங்குவதற்கு முன்னர் இந்த விடயத்தை மனதில் கொள்ள வேண்டும்.

ரணில் தற்போது எங்கு சென்றாலும் தனக்குக் கூட்டமைப்பின் 16 பேரின் ஆதரவு இருப்பதாகவே கோரிவருகின்றார்.

காரணம் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்பட்டு வரவில்லை. மாறாக ஐக்கிய தேசியக்கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே செயற்பட்டு வருகின்றது. நான் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மற்றும் சுமந்திரனுடன் இதுதொடர்பில் பேச்சு நடத்தினேன். ஆனால் எமக்குத் திருப்தியான பதில்கிடைக்கவில்லை. எவ்வாறெனினும் கோத்தபாயவுக்கான பாதையை கூட்டமைப்பும்ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து திறந்து வைக்க முயற்சிப்பது தெளிவாகின்றது - என்றார். (ற5.61)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் மதிப்பீடு நாளை ஆரம்பம்

கொழும்பு, ஏப்.4

ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்மட்ட குழு நாளை முதல் 6ஆம் திகதி வரை இலங்கையில் மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்தக் குழு ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை தொடர்பான முதற்கட்டப் பெறுபேறுகளுக்கான மதிப்பீடுகளை மேற்கொள்ள உள்ளதுடன், எஞ்சியுள்ள சவால்கள் குறித்தும் இலங்கையுடன் பேச்சு நடத்த உள்ளது என்று கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

தெற்காசிய அறிக்கையாளர் உட்பட சர்வதேச வர்த்தகம் தொடர்பான ஐரோப்பிய நாடாளுமன்ற அங்கத்தவர்களும் இந்தக் குழுவில் உள்ளடங்க உள்ளனர் என்று தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

ஐரோப்பிய கன்சர்வேடிவ் மற்றும் மறுசீரமைப்பு உறுப்பினர் ஜென் சஹ்ராடில், அறிக்கையாளர் சஜ்ஜாட் கரீம், ஐரோப்பிய மக்கள் கட்சி உறுப்பினர் போல் ருபிக், பொதுவுடமை மற்றும் ஜனநாயகவாதிகள் உறுப்பினர் டேவிட் மார்ட்டின், ஐரோப்பாவின் சுதந்திரம் மற்றும் நேரடி ஜனநாயகம் தொடர்பான உறுப்பினர் டிஸினா பெக்கின், நாடுகள் மற்றும் சுதந்திரம் தொடர்பான ஐரோப்பிய நாடுகளின் உறுப்பினர் ப்ரன்ஸ் ஒபர்மயர் ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்கியுள்ளனர். (ற)

# ரணில் மீதான தீர்மானத்தால் தமிழ்க் கூட்டமைப்பில் பிளவு

## மகிந்தானந்த கூறுகின்றார்

கொழும்பு, ஏப். 4

ரணிலுக்கு எதிராகக் கூட்டு எதிர்கட்சியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத்தீர்மானத்தால்தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவுகள்ஏற்பட்டுள்ளதுஎன்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்துதமிழ்த் தேசிய்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சிறந்த தீர்மானத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளார். கட்சிக்குள் தற்போது தோற்றம் பெற்றுள்ள கருத்தொற்றுமை இன்மையே இதற்கு முக்கிய காரணியாகக் காணப்படுகின்றது.

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பது சுமந்திரனின் கருத்தாகக் காணப்படுகின்றது. மறுபுறம் ரணிலுக்கு எதிராகத் தமது அபிப்பிராயத்தைக் கட்சி ரீதியாக வெளிப்படுத்த வேண்டும் என்பது கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்தாகக் காணப்படுகின்றது. கட்சியின் இரு வேறுப்பட்ட



கருத்துக்களையும் கட்சியின் தலைவர் என்ற ரீதியில் இரா. சம்பந்தன் நுணுக்கமாக அவதானித்து வருகின்றார். கட்சியின் தலைவர் என்ற வகையில் வாக்கெடுப்புக்குச் சமூகம்தராமல் இருப்பது இவரது எண்ணமாகக் காணப்படுகின்றது. ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தமது அரசியல் நோக்கங்களைக் காரணம் காட்டாமல் சாதாரண குடிமக்கள் என்ற நிலையில் இருந்து செயற்பட வேண்டும். தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள நம்பிக்கையில்லாத்தீர்மானத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகடைகாயாகப் பயன்படுத்தக் கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியின் பெருமைகளைக் கடந்த கால அரசின் ஊடாக எதிர்கட்சித் தலைவர் அறிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ற5,61)

# அங்கொடவுக்கு நெருக்கமானவர் கைக்குண்டுடன் நேற்றுக் கைது

கொழும்பு,ஏப்.4

பிரபல பாதாள உலகக் குழுத்தலைவரான அங்கொட லொக்காவுக்கு நெருக்கமான ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

எலவலகே சரத்குமார எனப்படும் சீட்டி என்பவரே, கொட்டிகாவத்தை பிரதேசத்தில் உள்ள அவரின் வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து, கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர் இதற்கு முன்னரும் பல தடவைகள் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் என்று தெரிய வந்துள்ளது.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இவர் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர்ருவன் குணசேகர தெரிவித்தார். சந்தேகநபர் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட பின்னர் திட்டமிட்ட குற்றச் செயல் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் கூறினார்.

(ற.ரி2)

# திருமலை.பொலிஸாருக்கான பரீட்சார்த்த நடவடிக்கைகள்



திருகோணமலை,ஏப்.4

திருகோணமலை மாவட்டத்தின் பொலிஸ்பிரிவுகளுக்கான வருடாந்த பரீட்சார்த்த நடவடிக்கைகள் நேற்றுக் காலை இடம்பெற்றன.

11 பொலிஸ் பிரிவுகளுக்குமான இந்த நிகழ்வு திருகோணமலை நகர்க் கடற்கரைக்கு முன்பாக நடைபெற்றது. திருகோணமலை பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் பெரேரா தலைமை தாங்கி பரீட்சார்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். பொலிஸ் அதிகாரிகளின் அணிவகுப்பும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து வாகனங்களைப் பார்வையிட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அதன் நிறை குறைகளைக் கேட்டறிந்து கொண்டு அவற்றில் திருத்த வேலைகள் ஏதும் இருப்பின் அவற்றைத் திருத்தி அமைக்குமாறும் கட்டளையிட்டார். இதனால், திருகோணமலை நகர கடற்கரைப் பகுதியில் உள்ள காந்தி சிலையில் இருந்து கோட்டை வாசல் வரையான பொது மக்களது போக்குவரத்தும் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

(ற.ரி2)

# மூன்று மாதக் குழந்தை சாவு

மட்டக்களப்பு,ஏப்.4

காத்தான்குடி, மஞ்சந்தொடுவாய்ப் பகுதியில் 3 மாதங்களேயான குழந்தை ஒன்று நேற்று உயிரிழந்துள்ளது. அதே பகுதியைச் சேர்ந்த பாத்திமா ஷெய்னப் (3 மாதங்கள்) என்னும் குழந்தையே உயிரிழந்தது. சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் குழந்தை சாவடைந்ததாகக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குழந்தை எந்த நோயினால் பீடிக்கப்பட்டிருந்தது என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ற.ரி2)

# குளிப்பதை ஏணியில் நின்று காணொலி எடுத்தவர் கைது

கொழும்பு,ஏப்.4

இளம்தாய் ஒருவர் குளிக்கும் காட்சியை தனது கைப்பேசியில் வீடியோ எடுத்த குற்றச்சாட் டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

முந்தல் பத்துளு ஓயா பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை ஒருவரே கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் அப்பெண் ஆரச்சிக்கட்டு பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். தனது வீட்டுக்கு அருகாமையில் குளித்துக் கொண்டிருந்த போது, தான் குளிக்கும் காட்சியை ஏணி ஒன்றில் ஏறி நின்று கொண்டு சந்தேகநபர் தனது கைப்பேசியில் வீடியோ எடுத்துக் கொண்டிருந்ததாக அப்பெண் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

எனினும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து குறித்த கைப்பேசி மீட்கப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் ஆரச்சிக்கட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ற.ரி2)



# கட்டுநாயக்கவில் பெரும் பதற்றம்

## வானூர்தி நிலைய ஊழியர்களின் ஆர்ப்பாட்டத்தால்



கொழும்பு,ஏப்.4

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தின் ஊழியர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக பன்னாட்டு வானூர்தி நிலையத்தை அண்டிய பகுதியில் நேற்று பதற்றமான நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வானூர்தி நிலையத்தின் அனைத்து நுழைவாயில்களையும் பெக்கோ இயந்திரங்கள் மற்றும் வாகனங்களைக் கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் மூடினர். வானூர்தி நிலையத்துக்கு உள்ளேயும், வெளியேயும் நூற்றுக்கணக்கான பயணிகள் பாதிக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

வானூர்திப் போக்குவரத்து சேவைகள் நிறுவனம் மற்றும் வானூர்தி நிலையத்தினருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொழிற்சங்கத்துக்கும் இடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததை அடுத்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் வானூர்தி நிலையத்தின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் சிறப்பு அதிரடிப்படையினரும் வரவழைக்கப்பட்டனர். ஊழியர்களுக்கான சம்பளத்தை 10 ஆயிரத்தால் அதிகரிப்பது தொடர்பில் கடிதம் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்காத நிலையில், இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. வானூர்தி நிலையம் மற்றும் வானூர்தி சேவைகள் நிறுவனம் ஆகியன கடந்த ஆண்டில் 11 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டியுள்ளதாகவும், இந்த சம்பள அதிகரிப்பினால் அதில் 0.98 வீத அளவு மேலதிக செலவினமே ஏற்படப் போவதாகவும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். மூன்று வருடங்களாக அதிகரிக்கப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பை வழங்குமாறு கோரி ஊழியர்கள் வேலையிலிருந்து விலகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து சிலமணித்தியாளங்களின் பின்னர் 10ஆயிரம்ரூபா சம்பள அதிகரிப்பு வழங்க அரச தரப்பால் இணக்கம் தெரிவிக்கப்பட்டதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

(ற.ரி2)



# பேருந்து விபத்தில் 35 பெண்கள் காயம்

புத்தளம்,ஏப்.4

புத்தளம் - சிலாபம் பிரதான வீதி ஆராச்சிகட்டுப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் 35 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த பெண்கள் சிலாபம் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஆடைத் தொழிற்சாலைக்குப் பணியாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்தொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியில் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது பேருந்தில் சுமார் 40 பெண் பணியாளர்கள் இருந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டதோடு, ஆராச்சிகட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ற.ரி2)

# ஐ.ம.சு.மு. உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம்

திருகோணமலை,ஏப்.4

திருகோணமலை மாவட்டத்தில் வெற்றி பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சபை கேட்போர் கூடத்தில் சேருவில தொகுதியின் பிரதான அமைப்பாளர் நளின் குணவர்த்தன தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில், திருகோணமலை. மாவட்டத்திலுள்ள மொறவெவ,சேருவில,கோமரங்கடவெல,கந்தளாய்,

வெருகல்,பதவிசிறிபுர மற்றும் தம்பலகாமம் போன்ற பிரதேச சபைகளுக்குத் தெரிவான 21 உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்கள்.

இதில், கிழக்கு மாகாண ஆளுநர்செயலாளர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன, கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம். அஸீஸ். கிழக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச்செயலாளர் நிமால் சோமரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற.ரி2)

# உதயங்கவை நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை

கொழும்பு,ஏப்.4

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவை இலங்கைக்கு கொண்டுவருவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப்பொலிஸ்நிதிமோசடி விசார ணைப் பிரிவு தெரிவித்துள் ளது.

தற்போது டுபாயில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவரை அயலுறவு அமைச்சின் ஊடாக நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு நேற்று கோட்டை நீதிவான் நீதிமன்றில் அறிவித்துள்ளது.

மிக் விமானக் கொடுக்கல் வாங்கல்களின்போது 7.833 மில்லியன் டொலர்களை மோசடி செய்த குற்றச்சாட்டில் உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக கடந்த 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட் டமை குறிப்பிடத் தக்கது.

(ற.ரி2)

# போர்க் காரணங்கள் திட்டமிட்டு மீண்டும் உருவாக்கப்படுகின்றன

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் அறிவுறுத்து

**யாழ்ப்பாணம், ஏப். 4**

**நாட்டை சின்னாபின்னமாக்கிய கொடூரமான போர் உருவாக ஏதுவாயிருந்த மூலகாரணங்கள் மீண்டும் ஒரு சுற்றுவட்டத்தில் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். அதன் பாதகமான விளைவுகளை நன்கு தெரிந்து வைத்துக்கொண்டுதான் இவை முன்னெடுக்கப்படுகின்றன என்பதுதான் எமது நாட்டின் ஆட்சிமுறைமையின் மிகப்பெரிய மன்னிக்கமுடியாத சோகமும் கேவலமுமாகும்.**

இவ்வாறு கூறி தேசிய நல்லிணக்க மற்றும் சகவாழ்வு செயலக தலைவரும் முன்னாள் அரச தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

வடக்குமாகாணவிவசாய அமைச்சர் க.சிவனேசன் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார் என்று அவரது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னரான ஆட்சி வரலாற்றில் புதுமையாக, நல்லாட்சி எனும் பெயரில் உருவாக்கப்பட்ட தேசிய கட்சிகளினது கூட்டாட்சி, அதனை நம்பிய சிறுபான்மை மக்களினது நம்பிக்கைகளை மெல்ல மெல்ல சிதைத்து வருகின்றது.

முப்பது வருட அறவழிப் போராட்டத்துக்கு வித்திட்ட, முப்பது வருட ஆயுதப் போராட்டத்துக்கு நியாயமான முறையில் வலுச்சேர்த்த தமிழின விரோத நடவடிக்கைகள் அனைத்துமே தேசிய நல்லிணக்கம் என்ற போர்வைக்குள் கபடமாக அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

போர்க் காலத்தில் மந்த கதியில் இருந்த இவ்வாறான நடவடிக்கைகள் தற்போது எமது கொல்லைபுறத்திலும், நடுமுற்றத்திலும் பரவலாக, வேகமாக எந்தவிதமான தடைகளும் இன்றி, கேட்பாரின்றி தொடர்ந்த வண்ணமுள்ளன.

மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் மேற்கொள்ளப்பட்ட எந்த திட்டங்களும் தமிழர்களுக்கென நடைமுறைப்படுத்தப்பட்டவையல்ல. இவை தமிழர்களுக்கு பயன்பட்டதுமில்லை. மாறாகத் தமிழர்களை அவர்களின் சொந்த நிலங்களில் இருந்து விரட்டி வெளியேற்றியுள்ளது.

மகாவலி அபிவிருத்தி, வனப்பாதுகாப்பு, பறவைகள் மற்றும் விலங்குகள் சரணாலயம், இயற்கை ஒதுக்கிடம் மற்றும் கடலும் கடல் சார்பாதுகாப்புப் பிரதேசங்கள் என்கின்ற பெயர்களில் தமிழர்களின் வாழ்விடங்கள் அவற்றின் உரிமையாளரின் அனுமதிகளின்றி கபளீகரம் செய்யப்படுகின்றன.

குறிப்பாக 2006ஆம் ஆண்டு சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் மூலம் மன்னார் நகரையும் தாண்டி எடுக்கப்பட்ட ஒரு லட்சத்து 20ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட இயற்கை பாதுகாப்பு திட்டம், 3 மீற்றருக்கு உயரமான மரங்களை கொண்ட வனபாதுகாப்பு அறிவித்தல், சுண்டிக்குளம், யாழ் கடலேரி, இரணைதீவு, ஆனையிறவு, குஞ்சுப்பரந்தன் பிரதேசங்களை உள்ளடக்கிய பாதுகாப்பு வலயம், மடு இயற்கை பாதுகாப்பு பிரதேசத்தில் இராணுவ முகாமும் அதன் செயற்பாடுகளும், அரச அதிபருக்கும், மாகாண அதிகாரிகளுக்கும் தெரியாமல் மத்திய அதிகாரிகளும் நிறுவனங்களும் செயற்படுதல் போன்றவற்றை கூறலாம்.

ஆற்றுநீரை விவசாய எழுச்சிக்கு பயன்படுத்துவதற்கோ, வளங்களைப் பாதுகாப்பதற்கோ, அன்றி விலங்குகளுக்கோ பறவைகளுக்கோ வாழ்விடங்களை உருவாக்கிகொள்வதற்கு தமிழ்மக்கள் எதிரான உணர்வுகளைக் கொண்டவர்கள் அல்ல. நீரையும், நிலத்தையும், இயற்கையையும், விலங்குகள் மற்றும் பறவைகளையும் நேசித்து வாழ்ந்த, வாழ்கின்ற இன மக்கள் நாங்கள்.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் பரப்பு வீச்சில் வனவளமும் நீர்வளமும் போர் காரணமாக பாவிக்காமல் நாட்டின் சேமிப்பாகவே உள்ளதையும் நாம் அறிவோம். அவை இயற்கை எம் அனைவருக்கும் அளித்த கொடையாகும். அதன் பயன்பாடுகள் அனைவருக்கும் பொதுவானவை. சமனானது. நிச்சயமாக நிலத்தின்மேல் உரிமைகொண்ட பூர்வீக மக்களுக்கு உரித்தானது.

இந்த நிலங்களை இன மத பேதமின்றி விவசாயிகள் பயன்படுத்துவது வரவேற்ககூடிய ஒரு செயற்பாடு ஆகும். ஆனால் திட்டமிட்ட இன வேறுபாடுபாடுகள் மற்றும் விரோத செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதும், இன்னொரு இனத்தின் வாழ்வியலினைத் திட்டமிட்ட வகையில் அழிக்கவும் அரச வளங்களையும் பயன்படுத்தி இனப்பரம்பலினை மாற்றியமைத்து வளங்களைச் சூறையாடுவதும் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

தமிழர் தரப்பின் ஆரோக்கியமான இணக்க அரசியல் எண்ணங்களும் செயற்பாடுகளும் தொடர்ந்து உதாசீனப்படுத்தப்படுமானால் அல்லது பலவீனமானதாகக் கருதப்படுமானால் அதன் விளைவுகளையும் இந்த நாடு அனுபவிக்கும் காலமும் வெகு தொலைவில் இல்லை.

சாதாரண சாமானிய சிங்கள மக்கள் நாட்டின் எந்த திசையிலும் நிலங்கள் வாங்கி குடியிருப்பதற்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் அரசு திட்டமிட்ட வகையில் கபட நோக்குடன் தமிழர்களின் இருப்பைச் சீர்குலைக்கும் வகையில் செயற்படுத்தும், உருவாக்கும் குடியிருப்பு திட்டங்களினை நாம் நிச்சயம் எதிர்ப்போம். வளமான எங்களின் வாழ்விடங்களை எங்களுக்கு மீண்டும் தாருங்கள். எங்களை எங்கள் நிலங்களில் தொழில்களில் ஈடுபட அனுமதியுங்கள். எங்கள் நாளாந்த வாழ்வாதாரத்தினைக் கொண்டு செல்ல, எங்கள் வளங்களின் ஆதாரத்தினை எங்களிடமே விட்டுவிடுங்கள். அதுவே எமது உறுதியான கோரிக்கையாகும்- என்றுள்ளது. (எ)

## ஆளுநரை சந்தித்தார் புதிய இந்திய துணைத் தூதுவர்

யாழ்ப்பாணம், ஏப். 4

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.பாலசந்திரன் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் றெயினோல்ட்குரேயைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதுவரை காலமும் பதவி வகித்த ஆ.நடராஜன் புதுடில்லிக்கு பதவி உயர்வு பெற்றுச் சென்ற நிலையில் யாழ்ப்பாண இந்தியத் துணைத் துவராக பாலசந்திரன் நியமிக்கப் பட்டுள்ளார்.

சந்திப்பின்போது இந்திய அரசால் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் முன்னேற்றத்தினை நோக்கிப் பயணிப்பதற்கு வேண்டிய வழிமுறைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (எ-8)



## சம்பூரில் முத்தமிழ் விழா

மூதூர், ஏப். 4

சம்பூர் தமிழ் கலாமன்றம் நடத்தும் முத்தமிழ் விழா சம்பூர் கலாசார மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைவரை மருத்துவ கலாநிதி அ.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு தமிழன்னையின் பவனியுடன் ஆரம்பமாகும் முதல்நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் தலைவர் க.அருள்சுப்பிரமணியம் கலந்து கொள்ளவுள்ளார்.

இரண்டாம் நாள் சனிக்கிழமை தென்கைலை ஆதீன அகத்தியர் அடிகளாரின் சிறப்பு ஆசியுரையுடன் விழா ஆரம்பமாகும்.

இந்த விழாவில் முதன்மை விருந்தினராக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.


இறுதிநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் வளர்மதி ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (எ)

### யாழ். போதனா வைத்தியசாலையில்

## முக தாடை வாய் சிறப்பு அறுவை சிகிச்சை

யாழ்ப்பாணம். ஏப்.4

யாழ்ப்பாணப்போதனாவைத்தியசாலையில் முகதாடை வாய் அறுவைச்சிகிச்சை இந்த மாதத்தின் பிற்பகுதியில் சிறப்புநிபுணர் குழாமால்நிகழ்த்தப்படவுள்ளது.



யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலையில் இயங்கிவரும் முகதாடைவாய்அறுவைச்சிகிச்சைப் பிரிவானது (Oral & Maxillo Facial Unit OMF unit) முகதாடை சம்பந்தமான நோய்களையும் குறைபாடுகளையும்கண்டறிவதுடன் அதற்குரியசிகிச்சைகளையும்மேற்கொண்டுவருகின்றது.

இதனடிப்படையில், பிறப்பிலிருந்து வருகின்ற குறைபாடுகள் (Congenital Craniofacial Malformations), முக அமைப்பு சீராக்கல், தாடை அமைப்பு, காது அமைப்பு, நெற்றியின் அமைப்பு, கட்டிகள், புற்றுநோய் கட்டிகள் அகற்றல், விபத்துக்களால் ஏற்படுகின்ற முகதாடை என்பு உடைவு களைச் சீரமைப்புச் செய்தல் (Post Traumatic Facial Reconstructions), பாரிசவாத நோயால் முகத்தசைகளில்ஏற்படுகின்றகுறைபாடுகளைசீராக்கல் (Facial ReAnimation) போன்றபல அறுவைச் சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு சேவையாக முக தாடை அறுவை சிகிச்சை நிபுணத்துவக் குழாம் பல பாகங்களில் இருந்தும் யாழ்ப்பாணம் வருகைதந்து ஏப்ரல் மாத பிற்பகுதியில் மேலதிக சிகிச்சைகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

இதில் பயன்பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை முக தாடை வாய் சத்திரசிகிச்சைப் பிரிவில் (OMF Unit) கிழமை நாள்களில் நேரடியாகத் தொடர்பு கொண்டோ அல்லது 021 222 2261 என்ற இலக்கத்துடன்தொடர்புகொண்டோ மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எ-114)

## வடக்கில் 246 ஆசிரியர்கள் வருடாந்த இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.4

வடக்கு மாகாணத்தில் 246 ஆசிரியர்கள் வருடாந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று மாகாணக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: வடக்கு மாகாணத்தில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு வருடாந்த இடம் மாற்றம் வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு பாடசாலையில் 5 வருடங்கள் அதற்கு மேல் சேவையாற்றியவர்களுக்கு இவ்வாறு வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்டு வருகின்றது. நடப்பு ஆண்டில் 246 ஆசிரியர்கள் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சி வலயம் 53, மடு வலயம் 35, மன்னார் வலயம் 14, முல்லைதீவு வளையம் 27, துணுக்காய் வலயம் 35, வவுனியா வடக்கு 38, வவுனியா தெற்கு 12, தீவகம் 29, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி வலயம் தலா1வீதம் 246 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். எதிர்வரும் 6ஆம் திகதிமுதல் இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படும். இது தவிர யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களும் இடம்மாற்றம் செய்யப்படவுள்ளனர் அவர்களுக்கான இடமாற்றல் தெரிவுகள் நடைபெற்று மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

வடக்கு மாகாணத்தில் உள்ள

# மருத்துவமனை அபிவிருத்திக் குழுக்களின் இயங்கு தன்மை உறுதிப்படுத்தப்படவேண்டும்

யாழ்ப்பாணம், ஏப்.4

வடக்கு மாகாண மருத்துவமனைகளில் அபிவிருத்திக் குழுக்களின் இயங்குதன்மை உறுதிப்படுத்தப்பட்டு சபை உறுப்பினர்களுக்குக் கடிதம் மூலமாக அறியத்தரப்படும் என்று மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டத்தின்கீழ் மாகாணத்திலுள்ள மருத்துவமனைககளில் அபிவிருத்திக் குழுக்கள் இருத்தல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கு அமைவாக அபிவிருத்திக் குழுக்கள் இல்லாத மருத்துவமனைகளில் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றுள்ளது. ஆகவே இது தொடர்பில் அமைச்சின் ஆலோசனைக் கூட்டங்களில் இது பற்றி அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது. எனினும் அபிவிருத்திக் குழுக்கள் உருவாக்கப்பட்டபோதும் அதன் இயங்கு தன்மைதொடர்பில்சபை உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

வடக்கு மாகாண மருத்துவமனைகளில் அபிவிருத்தி குழுக்கள் செயற்படுகின்றன. குழு ஊழியர்கள், பௌதீக வளங்கள் சார்பில் அபிவிருத்திகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. சில மருத்துவமனைகளில் அபிவிருத்திக் குழு, ஆரம்பிக்கப்பட்டு இயங்கு தன்மை அற்றதாகக் காணப்படுகின்றது. இதனால் மருத்துவமனைகளின் அபிவிருத்தியும் பின்னடைவு நிலையை நோக்கி செல்கின்றது. பல்வேறு செயற்றிட்டங்களை இந்த குழுக்களின் ஊடாகச் செயற்படுத்துவதால் சிறப்பான விளைத் திறனை பெறமுடியும்.

ஆகவே இது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

## நிதிசாரா வணிகர்களுக்கு வலுவூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 4

வடக்கு மாகாணத்தில் உள்ள நிதிசாரா வணிகர்களுக்கு துறைசார்ந்த சட்டம் சம்பந்தமான வலுவூட்டல் வழங்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள நிதிசாரா வணிகங்கள் நடத்துபவர்கள் தொடர்பான விவரங்களை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய முகாமையாளர் பா.சிவதீபன் தெரிவித்துள்ளார். இதற்கான விவரங்களை உடன் வழங்கி உதவுமாறு வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளிடம் கோரப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிரதேச அலுவலகம் வடக்கு மாகாணத்தில் உள்ள நியமிக்கப்பட்ட நிதிசாரா வணிகர்களான காணி கட்டட, சொத்து, விற்பனை முகவர்கள், வணிகர்கள், தங்க ஆபரண வியாபாரிகளுக்கு சட்டம் தொடர்பான வலுவூட்டல் வழங்கப்படவுள்ளது.

மேலதிக விவரங்களை 021 228 5916 என்ற இலக்கத்தில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். (எ-50)

பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்க

## மாகாண மகளிர் அமைச்சுக்கு 10மில்லியன் ரூபா சிறப்பு நிதி

யாழ்ப்பாணம், ஏப்.4

வடக்கு மாகாணத்தில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு மாகாண மகளிர் விவகார அமைச்சுக்கு 10மில்லியன் ரூபா சிறப்பு நிதி செயலாளர் கிடைத்துள்ளது என்று அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சுக்கு நடப்பு வருடத்தின் ஒதுக்கீடுக்காக 77 மில்லியன் கிடைத்தது. இதில் சமூக சேவைகள், கூட்டுறவு, தொழிற்றுறை ஆகியவற்றின் ஊடாக செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதுதவிர அமைச்சின் ஊடாக வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு 10 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது.

இந்த நிதியில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன. அவர்களின் தேவை அளவுக்கு ஏற்ப 50 ஆயிரம் தொடக்கம் 75 ஆயிரம் ரூபா வரையிலான உதவித் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

கிடைத்த நிதியின் அளவுக்கேற்ப 200 பேர் வரையில் உதவிகளை வழங்க முடியும். ஏற்கனவே தேவை அதிகமாக உள்ள பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்களுக்கு கடந்த ஆண்டில் உதவிகள் வழங்கப்படவில்லை. ஆகவே அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் உதவிகள் வழங்கப்படவுள்ளன என்றார். (எ-7)

பனைவளத்தை நம்பிய

# வடக்கு மக்களின் மேம்பாட்டுக்கு ரூ.1000 மில்லியன் நிதி ஒதுக்கீடு

அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஏப் 4

**வடக்கு மாகாணத்தில் பனைவளத்தை நம்பிய மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு கிராம சக்தித் திட்டத்தின் கீழ் ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்படும். சந்தை வாய்ப்புக்கான வழிவகைகளும் ஏற்பாடு செய்யப்படும் என இலங்கை நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.**



பனைஅபிவிருத்தித் துறையினருடனான கலந்துரையாடலில் மங்கள சமரவீர கலந்து கொண்டபோதே இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். இந்த நிகழ்வு கைதடி பனை வள ஆராய்ச்சி நிறுவகத்தில் நேற்றுமுன்தினம் முதலாம் திகதி பனை அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் சபையின் முகாமையாளர்களுடன், வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் போது, பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் நிதி அமைச்சரிடம் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. போரால் சங்கங்களினதும், சங்க அங்கத்தவர்களினதும், உயிர் துறப்பு, உடமைகள், சொத்துக்கள் பாதிப்புக்குள்ளாகி அழிவடைந்துள்ளன. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன. இவற்றுக்கான நட்டஈடு பெற்றுக் கொள்ள ஆவன செய்ய வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள 08 பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கங்களின் பணம் மக்கள் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.



போரின்போது ஆவணங்கள் அழிந்துவிட்டமையால்பணத்தை மீளப் பெறமுடியாமல் உள்ளது. இதனை பெற்றுத் தர வழிவகை செய்ய வேண்டும். சங்கங்களின் உற்பத்திகளுக்கு வெளிநாட்டுச் சந்தைவாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும். பனை சார் மது உற்பத்திக்கான வரியைக் குறைப்பதற்கு வழிவகுக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. கோரிக்கைகள் தொடர்பில் நிதி அமைச்சர் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாகத்தெரிவித்தார் என்று பனைஅபிவிருத்தி சபை விரிவாக்க முகாமையாளர் கே.கோபாலகிருஷ்ணன் தெரிவித்தார். (எ-112)

## வடக்கில் மேலும் இரண்டு அம்மாச்சி உணவகங்கள்

யாழ்ப்பாணம்,ஏப் .4

பல்கலைக்கழக மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு வடக்கில் மேலும் இரு அம்மாச்சி உணவகங்கள் அதிவிரைவில் அமையவுள்ளன.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின்மூலம் கிளிநொச்சி அறிவியல் நகரிலும், வவுனியா பம்பைமடுவிலும் 24.6மில்லியன் தொகையில் அமைக்கப்படவுள்ளன என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

குறித்த இரு இடங்களிலும் உள்ள பல்கலைக்கழகங்களைக் கருத்தில் கொண்டு அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் போசாக்கு நலத்தை கவனத்தில்கொண்டு இரு உணவகங்கள் அமையவுள்ளன. அதனைவிட உணவகங்களை நிறுவுவதன் மூலம் பல்வேறு பெண்கள் வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.




இரண்டு பல்கலைக்கழகங்களிலும் கிட்டத்தட்ட 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளிமாவட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். அவர்களுடைய ஆரோக்கியத்தை பேணும் நோக்குடன் இயற்கையான பாரம்பரிய உணவுப் பொருள்களைக் கொண்டு உணவுகளைத் தயாரித்து விற்பனை செய்யும் வகையில் உணவகம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சி.சத்தியசீலன் மேலும் தெரிவித்தார். (எ-113)

போதைப்பொருள் வழக்கில்

## 154 பேரிடமிருந்து ரூ.110,000 தண்டம்

யாழ்ப்பாணம், ஏப். 4

இந்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து நேற்று வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மற்றும் தீவகப் பகுதியில் 154 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபா தண்டமாக அறவிடப்பட்டது என்று யாழ்ப்பாண மதுவரித் திணைக்களத் தின் பொறுப்பதிகாரி நா.கிருபாகரன் தெரிவித்தார்.

திணைக்களத்துக்கு கிடைத்த தகவலடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களின்கீழ் சட்ட விரோதமாக கள்ளு மற்றும் சாராய விற்பனையில் ஈடுபட்ட 99 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், புகையிலை மற்றும் மது பானம் அதிகார சபை சட்டத்தின்கீழ் பொது இடங் களில் சிகெரட் பிடித்தவர்கள், வெற்றிலையுடன் புகையிலை வைத்து விற்பனை செய்தவர்கள், 21 வயதுக்குட்பட்டவர்கள் சிகெரட் பிடித்தவர்கள் என 55 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். (எ-111)



# மண்மேடு சரிந்ததில் வீடு ஒன்று சேதம்

ஹற்றன், ஏப். 4

ஹற்றன் வில்பிரட்புரம்பகுதியில்அமைந்துள்ள வீடு ஒன்றின் மீது மண்மேட்டுடன் கட்டடம் ஒன்று சரிந்து வீழ்ந்ததால் வீடு ஒன்று சேதமடைந்தது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

இதில் வீட்டிலுள்ளவர்கள் காயங்களுக்குள்ளானர்.

இந்தச்சம்பவம்தொடர்பாக ஹற்றன் பொலிஸாருக்கும், கிராம சேவகருக்கும் அறிவிக்கபட்டுள்ளது என வீட்டு உரிமையாளர் தெரிவித்தார் தொடர் மழை பெய்து வருவதனாலேயே இந்த மண்திட்டு சரிந்து வீழ்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி5)

# கசிப்பு உற்பத்தி நிலையம் மடக்கப்பட்டது

திருகோணமலை, ஏப். 4

திருகோணமலை சம்பூர் கட்டைபரிச்சான் காட்டுப் பகுதியில் இயங்கி வந்த கசிப்பு நிலையம் நேற்று காலை பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

அதில் 54 வயது டைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

ஒரு இலட்சத்து 17ஆயிரத்து 750 மில்லி லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது என சம்பூர் பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பூர் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சம்பூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ரி5)

# துப்பாக்கி உற்பத்தி நிலையம் முற்றுகை: ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 4

மஹியங்கனை - தம்பான பிரதேசத்தில் சட்டவிரோதமாக நடத்தப்பட்டுவந்த துப்பாக்கி உற்பத்தி நிலையம் ஒன்று நேற்று முன்தினம் சுற்றிவளைக் கப்பட்டது.

பதுளைக் குற்றத்தடுப்புப் பிரிவினரால்மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து இருந்து துப்பாக்கியொன்றும், துப்பாக்கி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பொருள்களும் கைப்பற்றப்பட்டன.

இந்தச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

(ற-ரி5)

# புதிய வருமான வரிச் சட்டம் பல நன்மைகள் கொண்டது

## நிதி அமைச்சர் மங்கள விவரிப்பு

கொழும்பு, ஏப்.4

சிக்கலான வரிச்சட்டம் புதிய வருமான வரிச் சட்டத்தின் மூலம் இலகுவாக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர.

வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்வோருக்கும் வரிச் சலுகை கிடைத்துள்ளது. 3 பில்லியன் டொலருக்குக் குறைவாக முதலிடுவோருக்கும் வரிச் சலுகை வழங்கப்படும். இந்த வரிச் சட்டத்தின் மூலம் நியாயமான வருமான வரி முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நிதியமைச்சில் நடந்த செய்தியாளர சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

வரி செலுத்தத் தவறுவதைக் கட்டப்படுத்த பன்னாட்டு நீதி நாட்டுக்கு ஏற்ற வகையில் வகுக்கப்பட்டுள்ளது. தற்போது 18 சதவீதமாக உள்ள வருமான வரியை 2020ஆம் ஆண்டு 40 சதவீதமாக அதிகரிப்பது இதன் நோக்கமாகும்.

கடந்த முதலாம் திகதியுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த வரி முறைமையின் மூலம் எதிர்வரும் 2 காலாண்டுகளில் 30 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்ட எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்றவர்களிடம் இருந்து எந்த வரியும் அறவிடப்பட மாட்டாது. எனினும் வட்டி வருடத்துக்கு 15 லட்சம் ரூபாவுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகையாக இருக்குமானால் வரி அறவிடப்படும்.

ஏற்றுமதி செய்வோருக்குக் கூடுதலான சலுகை வழங்கப்பட்டுள்ளது. தெற்காசியாவில் சிறந்த வரிமுறைமை இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வரிப்பணம் முற்றுமுழுதாகச் சரியான முறையில் மக்கள் சேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றது. என்றார்.

(ற)



கல்விஅமைச்சின் கீழ் உள்ளதமிழ் மற்றும் இரு மொழிகல்விகற்பிக்கும் தேசியபாடசாலைகளின் அபிவிருத்திதொடர்பானகலந்துரையாடல் கல்வி இராஜாங்கஅமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் தலைமையில் நேற்று கல்வி அமைச்சில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பாடசாலை அதிபர்கள், அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# விருது வழங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.4

கூட்டுறவு காப்புறுதி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் போட்டியின் 2017 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

ஒவ்வெரு ஆண்டும் தேசிய ரீதியில் நடத்தப்பட்டு வரும் சந்தைப்படுத்தல் போட்டியில், மூத்த கிளை முகாமையாளர் பேணாட் அலன் கியூமர் தலைமையிலான யாழ் பிராந்தியம் அனைத்து பதவி நிலைகளிலும் முதன்நிலை விருதுகளைப் பெற்று முதல்முறையாக முதலிடத்தைப் பெற்றது.

(ற.ரி2)

# கசுனுக்கும் மனைவிக்கும் நீதிமன்று பிணை அனுமதி

கொழும்பு. ஏப். 4

தனியார் பேருந்தின் சாரதியொருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தென் மாகாணசபை உறுப்பினர் எம். கே. கசுன் மற்றும் அவரின் மனைவி ஆகியோர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்று கடுவலை நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவர்கள் ஒருவருக்குத் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டனர்.

தென்மாகாண சபை உறுப்பினர் கடந்த மாதம் 10 ஆம் திகதி சாரதி ஒருவருடன் ஏற்றட்ட பிரச்சினை காரணமாக அவரை தாக்கியதோடு, துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து இருவரும் பொலிஸ்நிலையத்தில் சரணடைந்ததை தொடர்ந்து கைது செய்யப்பட்டனர். கைத்துப்பாக்கி மற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் ரவைகளையும் பொலிஸாரிடம் கையளித்திருந்தனர்.

கடந்த 27 ஆம் திகதி இந்த வழக்கு கடுவலை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது போது இருவரையும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. (ற-ரி5)

# நாட்டின் அபிவிருத்தி இளைஞரின் கைகளில்

## கிழக்குப் பல்கலை அரசறிவியல் துறைப் பேராசிரியர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப்.4

கிராமங்கள், நகரங்களை உள்ளடக்கிய நாட்டின் அபிவிருத்திக்கு இளைஞர் யுவதிகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. அந்தப் பங்களிப்பு ஆக்கபூர்வமானதாக அமைவதற்கு, அரசியல், ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றில் இளையவர்கள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல்பீடத்தின் அரசறிவியல் துறை பேராசிரியர் வே.குணரட்னம் தெரிவித்தார்.

விழுது நிறுவனத்தால் இளைஞர் யுவதிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசியல் கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

" இந்த கற்கை நெறி சமகாலத்துக்கு அவசியமானது. இளைஞர்களை நல்லிணக்கச் செயன்முறையில் ஈடுபடுத்தும் நோக்கில் அவர்களுக்கு அரசியல், ஜனநாயகம் மற்றும் நிலைமாறுகால நீதி தொடர்பான விடய்ங்களை உள்ளடக்கிய பயிற்சி நெறி சார்ந்த கற்கைநெறியாக விழுது நிறுவனம் இதனை அமைத்திருப்பது, நிச்சயமாக இளைஞர்கள் மத்தியில் தர்க்கரீதியிலான சிந்தனையை வளப்படுத்துவதாக அமையும்.

அதற்கு எமது ஒத்துழைப்பும் உதவிகளும் நிச்சயமாக உண்டு.

கற்கை நெறியானது இளைஞர்களது காத்திரத் தன்மையினை அவர்களுக்கு உணரச் செய்ய வேண்டும். அது அவர்களது அரசியல் பசிக்கு தீனி போடுவதாக அமையும்.

சூழலுக்கு ஏற்ப அவர்களை அது வலுப்படுத்தி, சமூகத்தில் சிறந்த அரசியல்வாதிகள் உருவாகுவதற்கு வாய்ப்பாகவும் அமையும்.

ஒரு கிராமத்தின், ஒரு நகரத்தின் அபிவிருத்தி மட்டுமல்லாமல், முழு நாட்டின் அபிவிருத்தியும் இளைஞர் யுவதிகளிடத்திலேயே தங்கியுள்ளது.

இதில் பங்கேற்கும் இளைஞர்கள் தமது சமூகப்பொறுப்பை உணர்ந்து செயற்பட்டு நன்மை அடைய வேண்டும். - என்றார்.

(ற-ரி5)




அகில இலங்கை கம்பன் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கம்பன் விழா தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் நேற்று இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி5)



# இடைமறிப்பு ஏவுகணையை நேற்றுச் சோதித்தது ரஷ்யா



**மொஸ்கோ, ஏப். 4**

**எதிரிகளின் ஏவுகணைகளை இடைமறித்துத் தாக்கி அழிக்கும் அதிநவீன தடுப்பு ஏவுகணையை நேற்று வெற்றிகரமாகச் சோதித்தது ரஷ்யா. பிரிட்டன் உளவாளிக்கு நஞ்சூட்டப்பட்ட விவகாரத்தில் பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், கனடா உள்ளிட்ட 26 நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள நிலையில் இந்தச் சோதனையை நடத்தியது ரஷ்யா.**

200 தொன் எடையுடன் அதி வேகமாக பாய்ந்து சென்று திட்டமிட்ட இலக்கினை தாக்கி அழிக்கும் 'சர்மாட்' ஏவுகணையை ரஷ்யா வைத்துள்ளது. இந்த ஏவுகணையை 'சாத்தான்' என்றே உலக நாடுகள் குறிப்பிடுகின்றன. அந்தளவுக்கு அபாயகரமானது அது. இந்த ஏவுகணையின் மேம்பட்ட ரகத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை ரஷ்யா சோதித்திருந்தது. இதற்கு உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்திருந்த நிலையில் இந்த ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்ட வெறும் 48 மணி நேரத்துக்குள் மற்றொரு இடைமறிப்புச் சோதனையும் ரஷ்யாவால் மேற்கொள்ளப்பட்டது. (ம)

# காற்றுமாசு விழிப்புணர்வுக்காக பரிஸில் சிலைக்கு முகமூடிகள்

காற்றுமாசைக் கட்டுப்படுத்த வலியுறுத்தி பரிஸ் நகரில் உள்ள சிலைகளுக்கு முகமூடிகள் அணிவித்துப் போராட்டம் நடத்தப்பட்டது.

பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளில் அண்மைக்காலமாக காற்றுமாசு அதிகரித்துள்ளது. எனவே, காற்றில் மாசு ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடில் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இந்த நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது ஐரோப்பிய யூனியன். இந்த நிலையில் காற்று மாசைக் கட்டுப்படுத்த வலியுறுத்தி பிரான்சில் நேற்று பல்வேறு நகரங்களில் போராட்டம் நடந்தது. பரிஸ் நகரில் உள்ள பழமையான சிலைகளுக்கு முகமூடிகள் அணிவித்தும் போராட்டம் நடத்தப்பட்டது. (ம)



# ஏமன் துறைமுகத்தில் பற்றியது தீ; நிவாரணப்பொருள்கள் சாம்பராகின

சனா, ஏப். 4



ஏமனில் உள்ள ஹொடைடா துறைமுகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் அகதிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்ட ஏராளமான நிவாரணப் பொருள்கள் எரிந்து நாசமடைந்தன.

ஏமனில் கடந்த மூன்று வருடங்களாக நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரால் பல லட்சக்கணக்கான மக்கள் தங்களது வசிப்பிடங்களை விட்டு குடிபெயர்ந்து அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். உள்நாட்டிலும் அகதிகள் முகாம்களில் லட்சக்கணக்கானோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான உணவு, பால்மா, உடைகள், மருந்துப் பொருள்களை தொண்டு நிறுவனங்கள் அனுப்பி வருகின்றன.

செங்கடல் பகுதியில் அமைந்துள்ள ஹொடைடா துறைமுகத்துக்கு வந்துசேரும் இந்த நிவாரணப் பொருள்கள் அங்கிருந்து அகதிகள் முகாம்களுக்கு பிரித்து அனுப்பப்படுகிறன. சுமார் 2.2 கோடி மக்கள் வாழும் ஏமனில் நான்கில் மூன்று பேர் நிவாரணப் பொருள்களை நம்பி வாழ்கின்றனர் என்று ஐ.நா. சபை அண்மையில் தெரிவித்திருந்தது. இந்த நிலையில், ஹொடைடா துறைமுகத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில், அகதிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்ட ஏராளமான நிவாரணப் பொருள்கள் நாசமடைந்தன என்று ஏமன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)





# தமிழ்மொழி திருவிழா சிங்கப்பூரில் அற்புதம்

சிங்கப்பூர், ஏப். 4

சிங்கப்பூரில் தமிழ்மொழி திருவிழா கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி ஆரம்பமானது. இந்த விழா எதிர்வரும் 29ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இதில் 58 நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

சிங்கப்பூரின் 4 அதிகாரபூர்வ மொழிகளில் தமிழும் ஒன்று. அந்த நாட்டில் தமிழ் செழித்தோங்க அரச ஆதரவுடன் கடந்த 2000ஆம் ஆண்டில் 'தமிழ் மொழிச் சபை' தொடங்கப்பட்டது. அந்த அமைப்பு சார்பில் கடந்த 2007ஆம் ஆண்டுமுதல் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் முழுவதும் தமிழ் மொழி திருவிழா நடத்தப்படுகிறது. இந்த வரிசையில் இந்த ஆண்டுக்கான திருவிழா தற்போது நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 29ஆம் திகதி நடத்தப்படும் இந்த

> “
> சிங்கப்பூரின் 4 அதிகார பூர்வ மொழிகளில் தமிழும் ஒன்று. அந்த நாட்டில் தமிழ் செழித்தோங்க அரச ஆதரவுடன் கடந்த 2000ஆம் ஆண்டில் 'தமிழ்மொழி சபை' தொடங்கப்பட்டது.

விழாவை முன்னிட்டு நடைபெறும் இலக்கியம், பேச்சுப் போட்டி, கலை மற்றும் கலாசார நிகழ்ச்சிகளில் தமிழர்கள் பங்கேற்கலாம். இது 'தமிழை நேசிப்போம், தமிழில் பேசுவோம்' என்ற தொனிப் பொருளில் நடத்தப்படும். இந்தத் திருவிழாவில் தமிழகம், இலங்கை உட்பட உலகம் முழுவதும் இருந்தும் பல்வேறு தமிழ் அறிஞர்கள் பங்கேற்க உள்ளனர்.

இதுகுறித்து தமிழ்மொழி சபையின் தலைவர் ராஜாராம் “இளைய தலைமுறையினர் தமிழில் பேசுவதை ஊக்குவிக்கும் விதமாக தமிழ் மொழி சபை செயற்பட்டு வருகிறது. ஒரு மாத காலத்துக்கு நடைபெறும் இந்த விழாவில் தமிழ் மொழி ஆர்வலர்கள், இளைஞர்கள் உற்சாகமாகப் பங்கேற்பதை பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. வருங்கால சந்ததியினருக்காக தமிழ் மொழியைப் பாதுகாப்பதிலும் ஊக்குவிப்பதிலும் தமிழ்ச் சமுதாயம் ஒன்றிணைந்து பாடுபடும் என்று நம்புகிறேன்” என்றார். (ம)

# பூனைக்கு மாற்றுச் சிறுநீரகம்

அமெரிக்காவின் மேரிலாண்ட் பகுதியில் வசிக்கும் 'ஸ்டான்லி' என்று பெயரிடப்பட்ட பூனையொன்றுக்குச் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது.

17 வயது ஸ்டான்லிக்கு இலங்கை மதிப்பில் சுமார் 30 லட்சம் ரூபா செலவு செய்து, வெற்றிகரமாகச் சிகிச்சையை நடத்தி முடித்திருக்கிறார் பெட்ஸி பாய்ட். இவர் பகுதி நேரப் பேராசிரியராக இருக்கிறார்.

2016ஆம் ஆண்டு பூனையின் உடல் நிலை சரியில்லாமல் போனது. மருத்துவப் பரிசோதனை செய்ததில் சிறுநீரகப் பாதிப்பு தெரிந்தது. ஸ்டான்லி 3 மாதங்கள் மட்டுமே உயிருடன் இருக்கும் என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டனர். இருக்கும் நாள்களில் நன்றாகக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தார் பெட்ஸி. மருத்துவர் சொன்ன கெடுவையும் தாண்டி ஸ்டான்லி வாழ்ந்துகொண்டிருந்தது.

“என்னிடம் இருக்கும் பூனைகளில் ஸ்டான்லி ரொம்பவே தனித்துவமானவன். நாய்க்கு உள்ள அறிவும் மனிதர்களிடமிருக்கும் அன்பும் இதனிடம் உண்டு. கண்களால் சொல்வதைக் கூடப் புரிந்துகொண்டு, அதற்கேற்றவாறு செயல்படுவான். ஒருநாளும் எல்லை மீறியதில்லை. மிகவும் பொறுமையாக இருப்பான். தினமும் என் அறைக் கதவு திறக்கும்வரை காத்திருப்பான். மிகவும் புத்திசாலி. கெடு தாண்டியும் இவனால் உயிரோடு இருக்க முடிகிறதென்றால், இவனுக்குச் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து பார்க்கலாமே என்று தோன்றியது. மருத்துவர்களும் ஸ்டான்லியின் உடல், சிகிச்சைக்குத் தயாராக இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்னொரு பூனையிடமிருந்து சிறுநீரகம் நன்கொடை பெறுவதற்காகக் காத்திருந்தோம்.

5 மாதங்களுக்கு முன்புதான் ஒரு பூனையைத் தத்தெடுத்து, அதன்மூலம் சிறுநீரகம் பெற்று, ஸ்டான்லிக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டோம். சிகிச்சை வெற்றிகரமாக முடிந்து, 4 மாதங்களாகிவிட்டன. இரண்டு பூனைகளும் நன்றாக இருக்கின்றன. ஸ்டான்லி சக பூனைகளோடு சேர்ந்து விளையாடுகிறது. என்னுடன் வெளியில் வருகிறது. இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டது. இன்னும் இரண்டு மாதங்களுக்குப் பிறகு மருந்துகளும் தேவைப்படாது” என்கிறார் பாய்ட். (ம)





## வின்னி மண்டேலா நேற்றுமுன்தினம் சாவு

ஜொகன்ஸ்பேர்க், ஏப். 4

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவின் முதலாவது மனைவியும், மனித உரிமைகள் ஆர்வலருமான வின்னி மண்டேலா, முதுமை காரணமாக நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அவருக்கு வயது 81.

1936ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி தென்னாபிரிக்காவின் ஈஸ்டர்ன் கேப் நகரில் வின்னி பிறந்தார். சமூக சேவகரான அவர் 1958ஆம் ஆண்டில் நெல்சன் மண்டேலாவைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு 2 பெண் பிள்ளைகள் உள்ளனர். தென்னாப்பிரிக்கா சுதந்திரம் அடைந்து நாட்டின் முதல் அதிபராக 1994 மே மாதம் 10ஆம் திகதி நெல்சன் மண்டேலா பொறுப்பேற்றார். 1996ஆம் ஆண்டு இருவரும் விவாகரத்துப் பெற்றனர். 2013 டிசம்பர் மாதம் 5ஆம் திகதி நெல்சன் மண்டேலா காலமானார். வின்னி மண்டேலா தனது 81ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார். உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர் ஜோகன்ஸ்பேர்க் நகரில் உள்ள மருத்துவமனையில் உயிரிழந்தார் என்று அவரது குடும்பத்தினர் அறிவித்தனர். (ம)

## 16 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட விவகாரம்; ஐ.நாவின் விசாரணைக்கு இஸ்ரேல் மறுப்பு

டெல்அவிவ், ஏப். 4

இஸ்ரேல் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், 16 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குற்றம் சுமத்தியுள்ள நிலையில், இந்த விடயத்தில் விசாரணை நடத்துவதற்காக ஐ.நா. சபையால் விடுக்கப்பட்ட அழைப்பை இஸ்ரேல் நிராகரித்தது.

பலஸ்தீனர்களுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிவரும் ஹமாஸ் அமைப்பால் காசா பகுதியில் கடந்த வாரம் நடத்தப்பட்ட பேரணியின்போது, இஸ்ரேல் படையினர் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டதை அடுத்தே 16 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர் என்று சொல்லப்படுகிறது. இதையடுத்து, இஸ்ரேலின் தலையீட்டையும், தாக்குதலையும் கண்டித்து பல்லாயிரக் கணக்கான பலஸ்தீனர்கள் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



பலஸ்தீனர்களும் யூதர்களும் (இஸ்ரேலியர்கள்) செறிந்து வாழும் பகுதிகளான காசா, மேற்குக் கரை, ஜெருசலேம் உள்ளிட்ட இடங்களில் பதற்றம் நிலவுகிறது. இந்தப் பின்னணியிலேயே ஐ.நா. சபையால் விசாரணைக்கான அழைப்பு விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



அமெரிக்காவின் நியூயோர்க் நகரப் 'பஷன் ஷோ' நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட பெண்ணொருவரின் ஒளிப்படமே இது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நல்லிணக்கமும் சிறு குளங்களும்

முன்னாள் அரசதலைவர் சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்க அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். பல நிகழ்வுகளிலும் அவர் கலந்துகொண்டிருந்தார். 2015 ஆம் ஆண்டு தை மாதத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் தலைவர் அவர்.

யாழ். குடாநாடு உள்ளிட்ட வடக்கு கிழக்கில் உள்ள சிறு குளங்கள், குட்டைகள், வாய்க்கால்களை மறுசீரமைப்புச் செய்வதற்கான திட்டத்தை அவர் அராலியில் ஆரம்பித்து வைத்தார். இந்தத் திட்டத்தின் கீழ் 120 சிறிய நீர் நிலைகள் மற்றும் வாய்க்கால்கள் மறு சீரமைக்கப்படவுள்ளன. அதற்கு 500 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்படவுள்ளது.

வீணாகும் மழை வெள்ளத்தைச் சேமிப்பதன் மூலம் வடக்கு கிழக்கின் நிலத்தடி நீர்மட்டத்தைப் பேணுவதும் உயர்த்துவதும் இந்தத் திட்டத்தின் நோக்கம். திட்டத்தின் முதற்கட்டமாக 54 நீர் நிலைகள் மறு சீரமைக்கப்படவுள்ளன.

நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கான இந்த நடவடிக்கை மிகப் பயனுள்ளது; வரவேற்கத்தக்கது. அவசரமும் அவசியமுமானது. அதிலும் யாழ்ப்பாணத்திற்கு குடிதண்ணீர் ஒரு பெரிய பிரச்சினையாக உருமாறிக் கொண்டிருக்கும் நிலையில், இத்தகைய திட்டங்கள் தீர்க்கதரிசனம் மிக்கவை என்றுகூடச் சொல்லலாம்.

இந்தத் திட்டம் இத்தோடு நின்றுவிடக்கூடாது. ஏனெனில் வடக்கு கிழக்கில் இருந்த பல குளங்கள், குட்டைகள், கேணிகள் கடந்த 30 ஆண்டுகளில் மூடப்பட்டுவிட்டன. குறிப்பாக நகரப் பகுதிக்குள்ளும் அதனை அண்டிய பகுதிகளுக்குள்ளும் இருந்த இத்தகைய சிறிய நீர் நிலைகள் திட்டமிட்டு மூடப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை அரச அதிகாரிகள் திட்டமிட்டு மூடினர். சில ஆக்கிரமிக்கப்பட்டு மூடப்பட்டன. வேறு சில ஆக்கிமிப்பு நோக்கத்தோடு மூடப்பட்டன.

யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளிப்போடுவது போன்று, நாமும் தொழிற்படுகின்றோம் என்பது தெரியாமலேயே சிறிய நீர்நிலைகளை மூடிவிட்டும், தூர்ந்துபோக விட்டும், எம் தலையில் நாமே மண்ணை அள்ளிப் போட்டு விட்டு தண்ணீர் இல்லை, தண்ணீர் இல்லை என்று அழுது புலம்பிக்கொண்டிருந்தோம்.

இத்தகையதொரு நிலையில் யாழ்ப்பாணத்ததில் உப்பாறு அரண்களை உருவாக்குவதன் மூலம் மழை நீரைச் சேகரிப்பதற்கான திட்டம் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டு நிறைவை எட்டும் நிலையில் இருக்கின்றது. அதற்கு உதவிகரமாக இப்போது சிறிய நீர் நிலைகளை மறுசீரமைக்கும் இந்தத் திட்டமும் செயற்படுத்தப்படுவது வரவேற்பிற்குரியது.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்துடன் (ஓனூர்) சேர்ந்து நீர்ப்பாசனத் திணைக்களமும் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துகின்றது என்று ஓனூர் இணையத் தளம் தெரிவிக்கின்றது.

இந்தத் திட்டம் மிகச்சிறந்தது; பயனுள்ளது, தேவையானது என்றாலும் இது தொடர்பில் எழும் மிகப் பெரிய கேள்வி என்னவென்றால், இந்தத் திட்டத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் என்ன தொடர்பு என்பதுதான். தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகமான ஓனூர் உருவாக்கப்பட்டதன் நோக்கம் போராலும் முரண்பாடுகளாலும் பிளவுண்டு கிடக்கும் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதுதான்.

சிறிய நீர்நிலைகளை மறுசீரமைப்பதன் மூலம் அதுவும் நீர்ப்பாசனத் திணைக்களம் செய்கிற வேலையைப் பங்குபோட்டுக்கொண்டு செய்வதன் மூலம் நல்லிணக்கத்தை ஓனூர் எப்படி ஏற்படுத்தப்போகின்றது என்பது குறித்த விளக்கம் ஏதும் அதன் இணையத் தளத்தில் இல்லை.

நீண்ட கால நோக்கில் பயன் தரக்கூடிய திட்டம் இது என்றாலும் இனங்களுக்கு இடையே சரிசெய்யப்படாது தொடரும் உறவு நிலையை மேம்படுத்த் இத்தகைய திட்டங்கள் எவ்வளவு பயனுறுதித்தன்மை கொண்டவை என்பது கேள்விக்குறியே! இத்தகைய திட்டங்கள் நிச்சயம் செயற்படுத்தப்பட வேண்டியவை தான். ஆனால் நல்லிணக்கத்தின் பெயரால் அல்ல. நல்லிணக்கத்தின் பெயரால் உடனடியாகச் செய்ய வேண்டிய எவ்வளவோ வேலைகள் செய்யப்பட வேண்டி இருக்கையில் ஓனூர் போன்ற அலுவலகங்கள் அதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.



# தப்பித்துக் கொள்வாரா தலைமை அமைச்சர்?

எம்.எஸ். அமீர் ஹுசைன்

சுதந்திர இலங்கையின் 22 ஆவது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியின் ஒரு பகுதியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து தனிக்கூட்டாகச் செயற்படும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியால் 2018 மார்ச் 21ஆம் திகதி சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளிக்கப்பட்டது. அதன் மீதான விவாதம் இன்று 4ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிமுதல் இரவு 9.30 மணிவரை நடைபெறவுள்ளது. விவாதத்தின் முடிவில் வாக்கெடுப்பு இரவு 9.30 மணிக்கு இடம்பெறும்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டபோது கூட்டு எதிரணியைச் சேர்ந்த 51 உறுப்பினர்களும் சிறி.ல.சு.கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களுமாக 55 பேர் அதில் கையொப்பமிட்டிருந்தனர். ரி.பி.ஏக்கநாயக்க, நிஷாந்த முத்துஹெட்டிகம, சுசந்த புஞ்சிநிலமே மற்றும் காதர் மஸ்தான் ஆகிய நால்வருமே இந்தப் பிரேரணையில் கையொப்பமிட்ட சிறி.ல.சு. கட்சி உறுப்பினர்களாவர். எனினும், கூட்டு எதிரணியின் தலைவரும், முன்னாள் அரச தலைவருமான மகிந்த ராஜபக்ச நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பம் இட்டிருக்கவில்லை.

தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்கு வழிவகுத்த காரணிகள் யாவை? இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் வெற்றிபெற்றால் தலைமை அமைச்சரைப் பதவி நீக்கிவிட்டு, ஏற்படும் வெற்றிடத்துக்கு முன்னாள் அரச தலைவரும் கூட்டு எதிரணியின் தலைவருமான மகிந்தவை தலைமை அமைச்சராகக்கொண்ட புதிய அரசொன்றை நிறுவ வாய்ப்பமையுமா? அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டு கூட்டு அரசில் தலைமை அமைச்சர் ரணிலின் அரசியல் பயணம் மேலும் வலுவடையுமா என்றெல்லாம் நாட்டு மக்கள் மத்தியில் கேள்விகள் எழுந்துள்ளன.

### மத்திய வங்கி பிணைமுறி ஊழலின் முக்கிய தொடர்புபட்டிருந்ததாக ரணில் மீது குற்றச்சாட்டு

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி ஏலவிற்பனையில் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அர்ஜுன மகேந்திரனின் மருமகனான அர்ஜுன அலோசியஸின் பெர்பெச்சுவல் டிரஷரீஸ் நிதி நிறுவனம் சுமார் 1,300 கோடி ரூபாவுக்கு மேல் மோசடியாக இலாபம் ஈட்டியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்த நிதி மோசடிக்கு முக்கிய காரணமாக இருந்தவர் தலைமை அமைச்சர் ரணிலே என்ற அடிப்படையில், பிணைமுறி ஏலவிற்பனை மோசடி ஊழல் தொடர்பாக ஆராய்ந்த அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு, குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 13 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கண்டி மற்றும் திகன பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தின் போது சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் தலைமை அமைச்சர் முஸ்லிம் மக்களது சொத்துக்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்கி சிங்கள, முஸ்லிம் மக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டும் பிரேரணையில் அடக்கம்.

ஆனாலும் இந்தக் குற்றச்சாட்டுகளுக்குத் தலைமை அமைச்சர் பொறுப்புக்கூற கடமைப்பட்டிருக்கவில்லை என்றும், நம்பிக்கையில்லாப் பிரேரணையானது முற்றாக ஆட்சியைக் கவிழ்த்து மகிந்த அணியினர் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான சதி முயற்சி என்றும், ரணில் தலைமையிலான ஐ.தே.கட்சி மறுத்திருக்கின்றது. இதனால் குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் பெரும்பான்மைப் பலத்துடன் தோற்கடித்து எப்படியேனும் தலைமை அமைச்சர் ரணிலையும், அரசாங்கத்தையும் பாதுகாப்பதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சி கடந்த 21ஆம் திகதிமுதல் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அதேநேரம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள மகிந்தவுக்கு ஆதரவான கூட்டு எதிரணி, பிரேரணையை வெற்றிபெறச்செய்வதற்கு ஆதரவு தேடி பல தரப்பினர்களுடன் பேச்சுக்கள் நடத்திவருவதையும் அவதானிக்க முடிகின்றது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்துடன் சர்வதேசத்துக்கே முன்மாதிரி காட்டிவிட்டதாக தம்பட்டமடித்துக்கொண்டு ஆட்சியமைத்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தாம் பதவியேற்ற நாள்முதல் நல்லாட்சி என்ற பெயரில் உள்ளுக்குள் ஐ.தே.க. ஆட்சிக்கு உலைவைக்கும் வேலைகளை ஆரம்பித்து முன்னெடுத்ததன் உச்சக்கட்டமாக, கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் களம் அமைந்தது. அந்தத் தேர்தலில் நாட்டு மக்கள் அனைவரும் மைத்திரியின் சிறி.ல.சு.கட்சிக்கு வாக்குகளை அள்ளிக்கொடுத்து மைத்திரியின் அதிகாரத்தைப் பலப்படுத்துவார்கள் என்ற எதிர்பார்ப்பு சுக்குநூறாகியது.

இடம்பெற்ற தேர்தல் முடிவுகள் தலைகீழாக மாறியதால் மைத்திரிபால சிறிசேனவின் திட்டம் தவிடுபொடியாகிய நிலையில், அவருக்கு ஆதரவான அமைச்சர்கள் சிலரது ஆலோசனைக்கமைவாக இலங்கை மத்திய வங்கி பிணைமுறி ஏலவிற்பனை மோசடி விசாரணை அறிக்கையைக் காரணங்காட்டி தலைமை அமைச்சர் ரணிலை பதவியிலிருந்து வெளியேற்றிவிட்டு முழுமையாக தாம் ஆட்சியைக் கைப்பற்ற திட்டம் தீட்டிச் செயற்பட்டனர்.



### ஐ.தே.கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து ரணிலை வெளியேற்றும் எதிரணியினரது திட்டம்

இந்த நிலையில், ஐ.தே.கவுக்குள் உட்பூசல்களைத் தோற்றுவித்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக உள்ளிருந்தே எதிர்ப்பைக் கிளப்பினால், தமது மேற்குறித்த திட்டத்தை இலகுவாக வெற்றிகொள்ளமுடியும் என்ற அடிப்படையில், ரணிலின் தலைமைத்துவத்துக்கு எதிரான சர்ச்சையை ஏற்படுத்தினர். கூட்டு எதிரணியினரின் திட்டம், இழந்த ஆட்சியை எப்படியாவது மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்பதோடு, மகிந்தவை நாட்டின் தலைமை அமைச்சராக்கும் தந்திரோபாயமான முறையில் அமைந்தது. அதற்கேற்றவகையில் மைத்திரிபால தரப்பு அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, டிலான் பெரேரா, ஜோன் செனவிரத்ன, நிமல் சிறிபால டி சில்வா, திலங்க சுமதிபால, எஸ்.பி.திசாநாயக்கா போன்றவர்களை அவ்வப்போது பயன்படுத்தி வருகின்றனர்.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் முடிவுகளின் பின்னர் மகிந்த ஆதரவு பொதுஜன மக்கள் முன்னணி நாட்டில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று பெருமளவான உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைக் கைப்பற்றியிருப்பதால், தந்திரோபாயமான முறையில், அரச தலைவருக்கும் புரியாத முறையில், மகிந்தவுக்கு தலைமை அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் மைத்திரியின் அமைச்சரவைக்குள்ளிருக்கும் சில அமைச்சர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான ஒரு நிலையில், ஐ.தே.கட்சிக்குள்ளும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நிலைப்பாடு வலுவடைந்ததோடு, முக்கிய அமைச்சர் பதவிகளை எதிர்பார்த்து ஏமாந்து போன பாலித ரங்கே பண்டார, புத்திக பத்திரண உட்பட சில உறுப்பினர்கள்

தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்குத் தயாராகியதோடு அதனைப் பகிரங்கமாகவும் அறிவித்தனர்.
உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலின் பின்னர், நாட்டின் ஆட்சியதிகாரத்தை மகிந்தவிடம் கையளிக்கவேண்டும் என்று மகிந்த



ஆதரவு அமைச்சர்கள் ஊடாக, அரச தலைவருக்கு அழுத்தங்களைக் கொடுத்துக்கொண்டிருந்த மகிந்த ஆதரவு கூட்டு எதிரணிக்கும் இது சிறந்த வாய்ப்பாகமாறியது. ஆனாலும் ரணில் ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவியை அதன் உபதலைவர்களுள் ஒருவரான சஜித் பிரேமதாஸ வுக்கு விட்டுக்கொடுக்க முன்வந்ததோடு, சில மறுசீரமைப்புகளையும் மேற்கொள்வதற்கு இணங்கியதால், ஐ.தே.கவுக்குள்ளிருந்து வெளிப்பட்ட உள்வீட்டுப் பிரச்சினை தற்காலிகமாக முடிவுக்கு வரும் அறிகுறி தென்பட்டது.

**திட்டம் பிசுபிசுத்துப் போனதால் ஆத்திரமுற்ற எதிரணி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரத் தீர்மானிப்பு**

ஐ.தே.கட்சிக்குள் தற்காலிகமாக ஏற்பட்ட அமைதி நிலை, கூட்டு எதிரணியினருக்கு ஏமாற்றத்தை அளித்தது. ஐ.தே.கயின் உறுப்பினர்களே அதன் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தால், அதில் ஏறி சவாரி செய்யலாம் என்று கருதியிருந்த கூட்டு எதிரணித் தரப்பினர், முன்வைத்த காலை பின்வைக்காது கடந்த 21ஆம் திகதி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்தனர். அதன்படி இன்று 4ஆம் திகதி அந்தப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறவுள்ளது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதில்லை என்று மார்ச் 20ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறி.ல.சு.கட்சியினரின் மூத்த உறுப்பினர்கள் பங்குபற்றிய கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. ஆயினும், தற்போதைய நிலையில் அந்த முடிவில் மாற்றம் ஏற்பட்டு மகிந்த அணியினரோடு இணைந்து ஆதரவளிக்கவேண்டும் என்ற அழுத்தம் மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிகரித்திருக்கின்றது.

கடந்த மார்ச் 27ஆம் திகதி அது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மைத்திரி ஆதரவு சிறி.ல.சு.கட்சியின் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா கூறுகையில், "நாம் இவ்வாறு இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதே, தலைமை அமைச்சர் ரணிலின் ஆட்சியில் நாம் எதிர்பார்த்தவைகள் எதுவும் நடைபெறவில்லை. நாட்டின் பொருளாதாரம் பின்னடைவு கண்டிருக்கின்றது. அதனால் நம்பிக்கையில்லாப் பிரேரணையே பிரதமரைப் பதவி நீக்கிவிட்டு புதிய் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கான சிறந்த சந்தர்ப்பமாகும்" என்று கூறியிருக்கின்றார். இதற்கிடையில் தலைமை அமைச்சரிடமிருந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சில அதிகாரங்களையும் கடந்த வாரம் அரச தலைவர் தமது பொறுப்பின் கீழ் கொண்டுவந்துள்ளார்.
எவ்வாறாயினும் மைத்திரிபால சிறிசேன அவரது அரசாங்கத்தின் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாகச் செயற்படுவதில்லை என்று வெளியில் காட்டிக்கொண்டாலும், உள்ளே இருந்துகொண்டு மகிந்தவுக்கு மீண்டும்பதவிக்கு வரகளம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஒரு சில அமைச்சர்கள், மகிந்தவை திருப்திப்படுத்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கும் நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**பேராசிரியர் பீரிஸ் ரணிலுக்கு எதிராக அமைச்சர்களைத் தூண்டிவிட முயற்சி**

பொதுஜன மக்கள் முன்னணியின் தலைவரான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கடந்த 27ஆம் திகதி கருத்துத் தெரிவிக்கையில், "அமைச்சர்களான டிலான் பெரேரா, சுசில் பிரேமஜயந்த, ஜோன் செனவிரத்ன உள்ளிட்ட பலர் தலைமை அமைச்சரை வெளியேற்றிவிட்டு ஆட்சிமாற்றமொன்றை ஏற்படுத்தவேண்டும் என்று வெளிப்படையாகவே முயற்சிசெய்தனர். அவ்வாறாயின் அவர்கள் அப்படி கூறிக்கொண்டு சும்மா இருக்காது கூட்டு எதிரணியுடன் இணைந்து நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்து பிரேரணையை வெற்றிபெறச் செய்யவேண்டும். அதன்மூலம் தலைமை அமைச்சரை வீட்டுக்கு அனுப்பவேண்டும். புதிய தலைமை அமைச்சரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இந்த வேண்டுகோள், மைத்திரியுடன் இருந்துகொண்டு மகிந்தவுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களுக்கு அந்த ஆதரவை வெளிப்படையாக நிரூபித்து சாதிப்பதற்கான தகுந்த தருணம் கிடைத்திருக்கின்றது என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது.
அதனால் தற்போதைய நிலையில் மைத்திரிபால சிறிசேனவின் அமைச்சர்கள் குறைந்தது 12 பேராவது இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடிகின்றது. அவ்வாறே ஐ.தே.கட்சிக்குள் இருக்கும் பாலித ரங்கே பண்டார உள்ளிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்துக்கு எதிராகச் செயற்படும் 22 உறுப்பினர்கள் வரையானோர் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்து ரணிலுக்கு எதிரான செயற்பாட்டை வெளிப்படுத்துவார்கள் என்றே எதிர்பார்க்க முடிகின்றது.
எது எவ்வாறாயினும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையால் தலைமை அமைச்சர் ரணிலின் பதவிக்கு ஆபத்து ஏற்படும் சாத்தியம் இருக்கின்றதா, ஐ.தே.கட்சியால் பிரேரணையை தோற்கடிக்க முடியுமா என்று பார்த்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 வாக்குகளும் ஐ.தே.கட்சிக்கே கிடைக்கும் சாதகமான நிலைமை இருந்துவருகின்றது.
கடந்த மார்ச் 5ஆம் திகதிக்கு முன்னர் இருந்த நிலையில் கூட்டு எதிரணியின் 54 உறுப்பினர்கள், மைத்திரிபால சிறிசேனவின் சிறி.ல.சு. கட்சி ஆதரவான 41 உறுப்பினர்கள் மற்றும் ஐ.தே.கவிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகச் செயற்படும் 22 உறுப்பினர்கள் மற்றும் ஜே.வி.பியின் 4 உறுப்பினர்கள் உட்பட இன்னும் எதிர்பார்க்கப்பட்ட சிலஉறுப்பினர்களையும்இணைத்து ஆகக் குறைந்தது 115 பேரினது ஆதரவைத் திரட்ட முடியும் என்ற எதிர்பார்ப்பு கூட்டு எதிரணியினருக்கும் இருந்துவந்தது.
ஆனால், இப்போதைய நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாக, கடந்த பொதுத் தேர்தலில் தோல்வி கண்ட தரப்பாக இரண்டாகப் பிரிந்து செயற்படும் 51 உறுப்பினர்களுடனான மகிந்த ஆதரவு கூட்டணிக்கு எங்கிருந்து 114 ஆதரவு பலம் கிடைக்கும் என்ற கேள்வி எழுந்திருக்கின்றது. ஏற்கனவே 2015 ஒகஸ்டில் நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பார்த்தால் ஐ.தே.கட்சியின் பலம் 106 ஆக இருக்கின்றது. அதே நேரம், தற்போது மைத்திரிபால சிறிசேனவுடன் அமைச்சர்களாக இருக்கின்ற ஸ்ரீ.ல.சு.கட்சியினரையும் சேர்த்தால், மகிந்தவுக்கு 95 பேரினது ஆதரவு என்ற நிலை ஏற்படும். நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிபெற வைக்க மேலும் 20 பேரின் ஆதரவு மகிந்த அணிக்குத் தேவைப்படுகின்றது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் 17 உறுப்பினர்களது ஆதரவையும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவாகப் பயன்படுத்துவதாகத் தெரிவித்திருக்கின்றது.



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவே ரணிலின் வெற்றி, தோல்வியை முடிவு செய்யும்**

இந்த நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இருக்கும் 44 உறுப்பினர்களும், மகிந்தவுக்கு ஆதரவாக இயங்கும் கூட்டு எதிரணிக்கு ஆதரவாகச் செயற்படும் நிலை இல்லை. அவர்களில் 20இற்கும் குறைவானவர்களே நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பார்கள் என்ற நிலை உருவாகியிருக்கின்றது. எவ்வாறோ ஐ.தே.க. அதன் 106 உறுப்பினர்களதும் ஆதரவை உறுதியாகப் பாதுகாத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களது ஆதரவையும் பெற்றுக்கொண்டால், 122 உறுப்பினர்களது பலம் என்ற நிலையில், பிரேரணையைத் தோற்கடிக்கமுடியும். ஆனாலும் ஐ.தே. முன்னணியில் அங்கம் வகிக்கும் ஐ.தே.க. உறுப்பினர்களில் சிலர் வாக்களிப்பின்போது சபைக்கு வராமல் தவிர்த்தல் மகிந்த அணிக்குச் சாதகமாகவே முடியலாம்.
எவ்வாறாயினும், மகிந்த அணிக்கான உறுதியாக எதிர்பார்க்க முடிந்த உறுப்பினர்களது ஆதரவு 95 பேரே என்பதில் சந்தேகம் இல்லை. அந்த 95இலிருந்து 20 பேர் பக்கம் சாய்ந்தால் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி காணும். அத்துடன், மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி.) ஊழல் பற்றி என்னதான் பேசி வந்தாலும், இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தால் மகிந்தவின் ஆதரவுக் குழியில் விழுவதாக அதன் உறுப்பினர்கள் தெரிவித்து வருவதால், அதற்குத் தயாராக இல்லாத நிலையில் அவர்கள் வாக்களிப்பைப் புறக்கணிக்கலாம் என்ற நிலை இருந்துவருகின்றது. இவ்வாறானதொரு இக்கட்டான நிலையில் மகிந்த அணியும், ஐ.தே.க. அணியும் இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகங்கொடுக்க களத்தில் இறங்குகின்றன.
இன்றைய சத்தியசோதனை தலைமை அமைச்சருக்கு சாதகமாக அமையுமா என்பதே நாட்டின் எதிர்பார்ப்பாகும். ஏதோஒருவகையில்அது தலைமை அமைச்சருக்குப் பாதகமாக அமையுமானால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தொடர்ச்சியான அரசியல் நகர்வையும் அது கடுமையாகப் பாதிக்கும் என்பதோடு, அடுத்ததாக அவரும் புதிய சோதனைகளையும், அரசியல் நெருக்கடிகளையும் சந்திக்க நேரும் என்பதில் சந்தேகமில்லை.

## ஆசிரியருக்கான கடிதம்

# சபாஷ்,சரியானபோட்டிதான்!

எப்பாடுபட்டாவது, தலைமை அமைச்சர் பதவிக் கதிரையில் இருந்து ரணிலைத் தூக்கிவீசிவிட ஒரு புறத்தில் கங்கணம் கட்டிக்கொண்டு, மணலைக் கயிறாகத் திரிக்கும் முயற்சியில் ரணிலுக்கு எதிரான தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.
மறுபுறத்தில், என்னதான் பிரளயம் நேர்ந்தாலும் அந்தப் பதவிக் கதிரையை இறுகப் பற்றியிருக்கும் தமது பிடியை கைவிட்டு விடவே மாட்டேன் என அடம் பிடித்து வருகிறார் ரணில்.
தமிழ் மக்களைப் பொறுத்தவரை சிங்கள அரசியல்வாதிகளோ, ஆட்சியாளர்களோ எல்லோருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளைப் போன்றவர்கள்தான்.
இவற்றுக்கெல்லாம் புறம்பாக, இப்போது "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்க்கட்சித் தலைமை என்ற கிரீடம் பறிபோய் விடப் போகிறது. அதனைக் காப்பாற்றிக் கொள்ளும் விதத்தில் கூட்டமைப்பு செயற்படுவது புத்திசாலித்தனம். அதன் அடிப்படையில் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதா, எதிர்ப்பதா எனக் கூட்டமைப்பு முடிவு செய்ய வேண்டும்" என இந்த பெரும்பான்மையினப் பிரகிருதிகள் கயிறு விட்டு வருகின்றனர்.
கூட்டமைப்போ, அண்மைக்கால அரசியல் பின்னடைவுகளால் என்னத்தைச் செய்ய, ஏதைச் செய்ய என்று முடிவெடுக்க முடியாமல் திணறுவதாகக் கருத வேண்டியுள்ளது.
மொத்தத்தில் 'சபாஷ், சரியான போட்டி தான்!' என்ற சினிமாப்பாணி வசனத்தில் கூறுவதைத் தவிர, இந்த நாளைய இலங்கை அரசியல் நிலவரம் குறித்து வேறு என்னதான் கூற இயலும்?

**கா. கிருபாகரன்,** நல்லூர்.

## தோலிருக்கச் சுளை விழுங்கிகள் குறித்து அவதானம் தேவை

வாழைக்குலை, மாங்காய்கள் என்பவற்றை இரசாயன மருந்து விசிறிப் பழுக்கவைக்கும், நடைமுறை யாழ்.குடாநாட்டில் சில காலத்துக்கு முன்னர் பரவலாக உச்சமடைந்திருந்தமை சகலரும் அறிந்ததொன்றே. இப்போதும்கூட கண்டும் காணாமலும் இந்தத் திருவிளையாடல்கள் இடம் பெறுவதென்னமோ உண்மைதான்.
யாழ். குடாநாட்டில் உற்பத்தியாகும் பல்வேறு வகை மாம்பழங்கள் தலைநகர் கொழும்பையும் தாண்டி வெளிநாடுகளில்கூட பிரபல்யம்பெற்று விளங்கியமை வரலாறு. யாழ்ப்பாணத்து மாம்பழங்களின் நறுஞ்சுவை பல வெளிநாட்டு மக்களைப் பெருமளவில் கவர்ந்ததுண்டு. 'யாபனே அம்ப ' என்ற பெயரால் குறிப்புணர்த்தப்பட்ட யாழ்ப்பாணத்து மாம்பழங்கள் சிங்கள மக்கள் மத்தியிலும் பெரு விருப்புக்கு உரியதாயிருந்தன.
ஆனால் காலப்போக்கில் இந்த ' மருந்தடித்துப் பழுக்க வைக்கும் ' கைங்கரியத்தால் யாழ்ப்பாணத்துக்கே தனிச்சிறப்பாயமைந்த மாம்பழங்கள் மாம்பழ சுவைஞர்களால் புறமொதுக்கப்படும் அளவுக்கு, 'ஒறிஜினல்' தானா எனச் சந்தேகப்பட வைக்கும் அளவுக்கு இரசாயனக் கலவைகள் விசிறப்பட்டுப் பழுக்க வைக்கப்பட்டு அவற்றின் மதிப்பை இழக்க நேர்ந்தது.
ஒரு புறம் இத்தகைய தனது பிரபல்யத்தை இழந்தது மட்டுமல்லாமல், இரசாயனக் கலவைகளின் பாதிப்பால் அவற்றை உண்டோர் பல்வேறு வகை நோய்களுக்கு ஆளாக நேர்ந்தது.
இத்தகைய சமூக விரோதிகளை 'தோலிருக்கச் சுளை விழுங்கிகள்' எனக் கூறுவதில் தவறில்லை. இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு துறைசார்ந்த அதிகாரிகளுக்கு உதவ வேண்டியது எம் எல்லோரதும் கடமை ஆகும்.

**வ.ரத்தினம்**, கோப்பாய்.



# ரஜினி – விஜய் பாணியில் சிவகார்த்திகேயன்

ரஜினி விஜய் இருவரும் தமது படங்களில் கடைப்பிடிக்கும் கொள்கையைப் பின்பற்ற முடிவெடுத்திருக்கிறார் சிவகார்த்திகேயன்.

பெண்களைகேலிசெய்யும்பாடல்கள், அவர்களைசீண்டுவதுபோன்றவசனங்கள், நண்பர்கள் சேர்ந்து குடித்து கும்மாளமடிக்கும் காட்சிகள் இல்லாத திரைப்படங்களைப் பார்ப்பது இன்றைய காலகட்டத்தில் மிகவும் அபூர்வம்.

ரஜினி, விஜய் போன்ற முன்னணி நடிகர்கள் சமீபகாலமாக தங்கள் படங்களில் இதுபோன்ற காட்சிகள் வேண்டாம் என்று தவிர்த்து விடுகிறார்கள்.

அவர்கள் வழியில் இப்போது, சிவகார்த்திகேயனும் அந்த முடிவுக்கு வந்திருக்கிறார். “இனி தான் நடிக்கும் படங்களில் பெண்களை கலாட்டா செய்வது, புகைப்பிடிப்பது மற்றும் மது அருந்துவது போன்ற காட்சிகள் இடம் பெறாது” என அறிவித்திருக்கிறார்.

## சிலந்தி™ @nandhu_twitts



இன்னும் பச்சையாக சொல்ல போனால்..
பச்சை நிறமே அழிந்து வருகிறது என்றுதான் சொல்வேன்...!!

**டாக்டர் :** கணவர் உடம்பை சோதித்துவிட்டு “இன்னும் 8மணி நேரம் தான் நீங்கள் உயிரோடு இருப்பீர்கள், அதற்குள் உங்களுக்குப் பிடித்தமான விசயங்கள் எல்லாவற்றையும் செய்து கொள்ளுங்கள்...

**மாலை 5மணி:** கண்ணீர் மல்க விசயத்தை மனைவியிடம் பகிர்ந்தான் கணவன். துடித்தாள் அவள்.

**கணவன்:** எனக்கு உன் கையால வெங்காய தோசையும் சட்னியும் செஞ்சு குடும்மா இன்னும் 7 மணிநேரம் தான் இருக்கு...

**மாலை 7 மணி:** ராத்திரி சாப்பாட்டுக்கு மீன் குழம்பு வைச்சு தாம்மா... இன்னும் 5 மணிநேரம்தான் நான் இருப்பேன்.

**இரவு10மணி:** நல்லபசுப்பாலில் உன் கையால சக்கரை போட்டு எனக்கு குடும்மா இன்னும் மூணு மணிநேரம் தான் இருக்கு...

**இரவு 12 மணி:** தூங்கும் மனைவியை எழுப்புகிறான்..

மனைவி: பேசாம படுங்க காலையில எழுந்தவுடன் ஆயிரம் வேலை இருக்கு... சொந்தக்காரங்களுக்கு சொல்லி அனுப்பனும். ஐயருக்கு ஏற்பாடு செய்யனும். சுடுகாட்டில புக் பண்ணனும்.

உங்களுக்கு காலைல எழுந்திருக்கிற வேலை கூட இல்லை

**கணவன்:** !!!!!

**கடவுள்: உனக்கு என்ன வரம் வேண்டும்?**

**பக்தன்: அழகான மனைவி வேண்டும்**

**கடவுள்: நீ முஸ்லிமென்றால் கத்ரினா மாதிரிப் பொண்ணு கிடைக்கும். இந்துவென்றால் அனுஷ்கா மாதிரிப் பொண்ணு கிடைக்கும். கிறிஸ்தவனா இருந்தால் ஜெனிலியா மாதிரி பொண்ணு கிடைக்கும். உன் பெயர் என்ன?**

**பக்தன்: அப்துல் நாராயண பெர்னாட்டஸ்**

**கடவுள்: !!!**



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சோம்பலுக்கு ஆளாகலாம் கவனம். முக்கிய பணியை தாமதமின்றி நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமத்தைப் பிறரிடம் பேச வேண்டாம்.

**இடபம்:** மனதில் நல்ல சிந்தனை மலரும். பிறருக்கு இயன்ற உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதில் நிறைவேறும்.

**மிதுனம்:** செயலில் உற்சாகம் நிறைந்திருக்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும்.

**கடகம்:** பணிகளை கூடுதல் கவனத்துடன் நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** பயன் தராத விஷயங்களைப் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும்.

**கன்னி:** திட்டமிட்ட செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சி கண்டு பலரும் வியப்படைவர். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**துலாம்:** பிறருக்கு உதவும் போது கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். இலாபம் சுமார். திட்டமிட்டு செலவு செய்வது நல்லது.

**விருச்சிகம்:** பேச்சு, செயலில் வசீகரம் இருக்கும். நண்பர்களின் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரம் செழிக்க தகுந்த பணிபுரிவீர்கள். இலாபம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்மறையாக பேசுபவரை விட்டு விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சியுடன் இருக்கவும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் எதிர்ப்புக்கு ஆளாகலாம்

**மகரம்:** பேச்சில் தன்னம்பிக்கை வெளிப்படும். எதிரியால் இருந்த தொல்லை குறையும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். நிலுவைப்பணம் வசூலாகும்.

**கும்பம்:** உறவினரிடம் பெற்ற உதவிக்கு நன்றி சொல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும்.

**மீனம்:** முக்கியமான விஷயம் மறந்து போகலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

# தனிமை

தனிமை பலருக்கு பல எண்ணங்களின் பிறப்பு
அதுவே சிலருக்கு எண்ணங்களின் இறப்பு

தனிமை பலருக்கு ஏக்கத்தின் வாசல்
அதுவே சிலருக்கு ஏகாந்தத்தின் வாசல்

தனிமை பலரை தவிக்க வைக்கும்
அதுவே சிலரை தவத்தில் வைக்கும்

தனிமை பலருக்கு கனவுகளின் புது உலகம்
சிலருக்கு தன்னையறிய ஒரு சந்தர்ப்பம்



வீட்டில எனக்கு பொண்ணு பாக்க போறோம்னு கிளம்பினாங்க... குளிச்சிட்டு வந்து கேட்டா ‘ஏப்ரல் பூல்’ என்டுட்டாங்க..



குடும்பமாடா இது...

இப்போ போக வேணாம் மனுசங்க குறுக்க போயிடுவாங்க...



நாம போற வேலை உருப்படாது ஒரு எலி கூட மாட்டாது

உஷ்ஷ்ஷ்... அடிக்கிற வெயிலுக்கு இனிமே இப்படித்தான் இருக்கணும்



# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 9 | | | | 6 | 3 | |
| 5 | | | | | | | | 8 |
| 4 | | | | 8 | | | | 9 |
| | | | 4 | | 7 | | | |
| | | 2 | 6 | | | 9 | | |
| | | | 9 | | 3 | | | |
| 2 | | | | 6 | | | | 5 |
| 1 | | | | | | | | 3 |
| | 4 | 6 | | | | 7 | 1 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 4 | 3 | 2 | 7 | 9 | 8 | 1 |
| 8 | 7 | 2 | 5 | 9 | 1 | 4 | 3 | 6 |
| 1 | 9 | 3 | 8 | 4 | 6 | 2 | 5 | 7 |
| 6 | 2 | 9 | 4 | 3 | 5 | 7 | 1 | 8 |
| 7 | 1 | 8 | 2 | 6 | 9 | 5 | 4 | 3 |
| 4 | 3 | 5 | 7 | 1 | 8 | 6 | 2 | 9 |
| 3 | 5 | 1 | 9 | 7 | 4 | 8 | 6 | 2 |
| 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 1 | 9 | 4 |
| 9 | 4 | 6 | 1 | 8 | 2 | 3 | 7 | 5 |

நேற்றைய விடை

உதயன்
# புதன் பொய்கை
ஏப்ரல் 04 2018
Uthayan Print newuthayan.com @UthayanPrint

# குமிழ்முனை பேனாக்களின் கோட்டோவியங்கள்





ராஜேஸ்மணாளன்

சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்ற பழமொழிதான் ஞாபகத்திற்கு வருகின்றது. ஒரு திறமைசாலி எந்தச் சந்தர்ப்பத்திலும், என்னால் இதுதான் முடியும் என்று அடம்பிடிப்பதில்லை. தனக்குக் கையில் கிடைப்பதைக் கொண்டு வித்தைகள் செய்யும் மாயாஜாலம் அவனுக்குத் தெரியும். அதிலும் இன்னொரு கலைஞனைப் பின்பற்றாது, தனது பாணியில் கலைத் திறமையை வெளிப்படுத்தும் போது, அந்தக் கலைஞனின் படைப்புகள் தனித்துவம் பெறுவதோடு, எம்மைப் பிரமிக்கவும் வைக்கின்றன. இந்த வரிசையில் சிங்களச் சகோதரரான சந்தன ரணவீர என்பவரின் குமிழ் முனைப் பேனாக்கள் பிரசவித்த ஓவியங்கள் எம்மை ஆட்கொள்ளுகின்றன. இலங்கையின் தெற்கிலுள்ள உள்ள குருநாகல் என்னும் இடத்தில்தான் இவர் பிறந்தார். அளவ என்னுமிடத்தில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றும் இவர், தன் மனதிலோடும் மாறுபட்ட உணர்வுகளை தனது சித்திரங்களில் வெளிப்படுத்துகிறார். இவரது ஓவியங்கள் தூரிகை ஓவியமல்ல என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. பல வர்ணங்கள் கொண்ட குமிழ்முனைப் போனாக்களையே இவர் தனது தூரிகைகளாகக் கையாள்வது தனித்துவம் பெறுகின்றது. ஆண் பெண் தெய்வங்களை இவரது பேனாக்கள் பல வடிவங்களில் யாரும் இதுவரையில் வரையாத முறையில் எடுத்துக் காட்டுகின்றன. நாம் கோவில்களில் காணும் வழமையான தெய்வங்களின் உருவங்களை விட இவை மாறுபட்டு இருப்பது, இங்கு கவனிக்கத்தக்கது.

### ஐ.நாவுக்குச் சென்ற ரணவீரவின் படைப்பு

அதே போல இயற்கை மீதான இவர் பார்வையும் வித்தியாசமானதாக இருக்கின்றது. சந்திரனை வானத்தில் பார்க்காமல் இவர் கலைக் கண்கள் தண்ணீருக்கடியில் நோக்குகின்றன. பரம்பரையாக நாம் காணும் மேளக்காரர்களும், காவடி தூக்குவோரும் இவர் கவனத்தை ஈர்க்கின்றார்கள்.

1991ஆம் தொடக்கம், தான் வரைந்த ஓவியங்களை, வருடா வருடம் கண்காட்சி மூலம் பொதுமக்களுக்கு சென்றடைய வைத்து வருகிறார். வெளிநாடுகளில் தன் ஓவியக் கண்காட்சியை நடத்தும் அளவுக்கு பணபலம் இல்லாவிட்டாலும், இந்தியா, பங்களாதேஷ், ஜப்பான் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற ஓவியக் கண்காட்சிகளுக்கு இலங்கையின் பிரதிநிதியாக தன் ஓவியங்களை அனுப்பியிருக்கிறார். பிரான்ஸ், இங்கிலாந்து, சிங்கப்பூர், அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ளவர்கள், விரும்பி இவர் ஓவியங்களை விலைக்கு வாங்கியுள்ளார்கள். 1991ஆம் ஆண்டில் ஐ.நா. சபை இவரது ஓவியமொன்றை கண்காட்சிக்கு வைத்து மதிப்புறுத்தியது. இலங்கைப் பத்திரிகைகள் பல இவரைப் பற்றிய செய்திகளை, அடிக்கடி பிரசுரித்து, இவர் திறமையை ஊக்குவித்து வருவது இங்கே குறிப்பிடத்தக்கது.

### மகாவோவின் குகை ஓவியங்களை ஒத்ததாக ரணவீரவின் படைப்புகள்

சீனாவின் மகாவோ என்பவரின் குகை ஓவியங்களை ஒத்தவையாக இருக்கின்றன இவரது ஓவியங்கள் என்று டெய்லி நியூஸ் பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள். ஆத்மரீதியான தேடுதலை உருவாக்கும் என்று இதில் வர்ணிக்கிறார்கள். 'சித்தார் இசைப்பவர்கள்' என்ற ஓவியத்தில் கோடுகள் கொண்டு ஓவியம் வரையும் கலை பெரிதாக வெளிப்படுகின்றது. 'வௌவால்கள்', 'மழையும் கடல் அலைகளும்', 'வெசாக் ஜோடனை' என்ற பெயரில் வரையப்பட்ட ஓவியங்களும் இதையே வெளிப்படுத்துகின்றன. நட்சத்திரக் கூட்டங்கள் வானத்தை நிறைத்த இரவைப் பின்னணியாகக் கொண்டு, கறுப்பு நிறத்தில் இந்த மூன்று வௌவால்களும் வரையப்பட்டுள்ளன..

இவரது இந்தக் கலைத்திறன் இவர் தந்தையிடமிருந்து இவருக்கு வந்துள்ளது போலும். இவரது தந்தை ஓவியப் போதனாசிரியராக இருந்திருக்கிறார். குருநாகலை யிலுள்ள மல்லியதேவா பாடசாலையில் கற்கும்போதே, அப்போது இவரது ஓவிய ஆசிரியராக இருந்த எஸ்.எம்.. ஜயதிலக என்பவர் வழிநடத்தலில் இவர் திறமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலைக் கல்வியின் பின்னர், 'லங்கா கலாசங்கமய' என்ற அமைப்பில் இவர் 1989ஆம் ஆண்டு இணைந்து ஓவியம் சம்பந்தமான ஒரு வருடக் கல்வியை மேற்கொண்டுள்ளார். தனது முதல் ஓவியக் கண்காட்சியை, கொழும்பு பொதுஜன நூல் நிலையத்தில் இவர் நடத்தியுள்ளார். கொழும்பிலுள்ள லயனல் வென்ட் ஓவியத் திடலில் 2000ஆவது ஆண்டில் இவர் கண்காட்சியொன்றையும் நடத்தியுள்ளார். குமிழ் முனைப் பேனாக்களை வைத்து கோட்டோவியங்களை வரைவது எப்படி என்பதற்கு இலக்கணமாக உள்ளன என்றால் அது மிகையாக இருக்கப்போவதில்லை.





“இவரது ஓவியங்கள் தூரிகை ஓவியமல்ல என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. பல வர்ணங்கள் கொண்ட குமிழ்முனைப் போனாக்களையே இவர் தனது தூரிகைகளாகக் கையாள்வது தனித்துவம் பெறுகின்றது. ஆண் பெண் தெய்வங்களை இவரது பேனாக்கள் பல வடிவங்களில் யாரும் இதுவரையில் வரையாத முறையில் எடுத்துக் காட்டுகின்றன. நாம் கோவில்களில் காணும் வழமையான தெய்வங்களின் உருவங்களை விட இவை மாறுபட்டு இருப்பது, இங்கு கவனிக்கத்தக்கது.”











# செல்வமனோகரனின் மூன்று நூல்கள் ஒரே மேடையில் அறிமுகமாயின

கே.தட்ஷாயினி

நூலாசிரியார் தி.செல்வமனோகரனின் எழுதிய மூன்று நூல்கள் ஒரே மேடையில் அறிமுகம் பெற்றுள்ளன. எழுத்தாளர் சோ.பத்மநாதன் தலைமையில் நாவலர் மண்டபத்தில் கடந்த 30ஆம் திகதி இந்த மூன்று நூல்களும் அறிமுகம் பெற்றன.

**தொடர்ச்சியான சிந்தையும் தேடலும் ஆய்வுக்கான அடிப்படை விடயங்கள்**

தலைமையுரையை தொடர்ந்து வெளியீட்டுரையில் தெ.மதுசூதனன், "தொடர் சிந்தனை, தொடர் தேடல், தொடர் கற்றல் ஆகியவற்றின் விளைவுதான் இந்த நூலின் உருவாக்கம்" என்று புகழாரம் சூட்டினார். "சமகால வாசிப்பை பல்வேறு துறை சார்ந்த பன்முறை சார்ந்த அறிவுச் சிந்தனை மரபை தொடர்ச்சியான பயிற்சியை இந்த மூன்று நூல்களும் தருகின்றன. ஒரு மனிதனுடைய செயற்தன்மை என பல்வேறு அம்சங்களை முன்வைப்பதற்கும் அது பற்றி உரையாடுவதற்கும் கருத்தியலை தொகுத்துக் கொள்வதற்கும் வழிசமைக்கின்றன" என்று மேலும் குறிப்பிட்டார் அவர்.

**ஒரே நேரத்தில் மூன்று நூல்கள் கடினமான முயற்சியின் பயன்கள்**

வெளியீட்டுரையில் சி.ரமணராஜா "ஒரே நேரத்தில் ஒரு பிரசவமே கடினமானது. ஆனால் இங்கு மூன்று பிரசவங்கள் என்றால் அதன் வலியைச் சொல்ல வார்த்தையில்லை. ஒவ்வொரு நிலப்பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்ற மக்களினுடைய பண்பாடுகள், நம்பிக்கைகள், அறிவு சார்ந்தவைகள் மரபு சார்ந்தவை என்பன அடிப்படையில் பல்வேறுபட்ட வடிவங்களில் சைவத்தில் மூன்று அம்சங்களைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. வீர சைவம், சைவ சித்தாந்தம், காஷ்மீர சைவம் இந்த மூன்றுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருக்கிறது. சைவம் என்கிற ஒன்று இரண்டு பிரிவுகளினூடாக மெய்யியல் தளத்தை விரிவாக்குகிறது. காஷ்மீரசைவமும் சைவ சித்தாந்தமும் என்கிற நூல் தன்னை நீண்ட புலமை ஊடாக நிறுவி இருக்கிறது. சற்றே கற்பனை ரீதியாகவும் பயணம் அமைந்திருக்கிறது. இடையிடையே, எகிப்திய சைவப் பிரிவுகளிலே இருக்கின்ற ஒவ்வொரு கருத்தையும் வைத்து முன்நோக்கி ஒப்பு நோக்குகின்ற ஆய்வு முறையையும் காணக் கூடியதாக உள்ளது" எனக் குறிப்பிட்டு வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தார்.

**கனதியான கட்டுரைகளைக் கொண்டு ''சொற்களால் அமையும் உலகு'' நூல்**

இரண்டாம் நூலான சொற்களால் அமையும் உலகு பற்றிய கருத்துரைகளை இ.சு.முரளிதரன் தெரிவித்தார். "இந்த நூலில் மொத்தமாக 11 கட்டுரைகள் காணப்படுகின்றன. அதில் தனி உருக்களின் விமர்சன வரைபுகளாக 6 கட்டுரைகளும், கொண்டாட்டங்களுக்குரிய படைப்பாளிகளின் மாறுபட்ட பக்கங்களாக இரு கட்டுரைகளும், இலகுவில் சூழலோடு பொருந்தியதாக ஏனைய 3 கட்டுரைகளும் அமைந்துள்ளன. பன்முகப்பட்ட கதைக்களங்கள், ஈழப் போரைக் குறித்த பௌத்த தர்மங்கள் என பல உயரங்களை நோக்கியுள்ளது. ஒட்டுமொத்தமாக நோக்கின், வலிய எழுத்துக்களால் இந்த நூல் சிறந்து படைக்கப்பட்டுள்ளது." என்றார்.

**மூன்றாவது நூலான தமிழில் மெய்யியல்**

தமிழ் மெய்யியல் செல்நெறியில் சிலப்பதிகாரம், தமிழ் பௌத்தம், ஆசீவகமும் சமணமும், தமிழில் தருக்கவியல், தமிழ்மெய்யியல் மரபில் பரபக்கவியல், திருமுறை வைப்பில் திருமந்திரம், சைவ சித்தாந்த செல்நெறியில் ஞானாமிர்தம், மெய்கண்டார் சோழர் காலம் பற்றிய மறுவாசிப்புக்கான ஒரு முற்குறிப்பு, தமிழர் மெய்யியல், சமயப்பிரிவுகள் பற்றிய ரி.எம்.பி மகாதேவனின் கருத்தியல் ஒரு விமர்சன நோக்கு போன்ற விடயங்கள் உள்ளடக்கங்களாக அமைகின்றன.

இந்தநூல் தொடர்பில் கருத்துரை வழங்கிய ச.முகுந்தன், "தமிழர்களுக்கான மெய்யியலின் களத்தை, நூலில் அமைந்துள்ள 10 நூல்களும் அழகாகக ஆராய்கின்றன. எறியப்படும் எறிகணைகளும் ஏவப்படும் அம்புகளும் இலக்குகளை நோக்கித்தான் செலுத்தப்பட வேண்டும். அதுபோலதான் இங்கு அமைந்துள்ள கட்டுரைகள் அமைவுறுகின்றன" எனக் குறிப்பிட்டார்.

**கேள்விகளை எழுப்புகின்றவனே முழுமையாக இருப்பவனாகிறான்**

இறுதியாக ஏற்புரையை நூலாசிரியர் தி.செல்வமனோகரன் வழங்கியபோது, "எதற்குள் ஒருவன் முழுமையாக இருக்கிறானோ, அவனாலே கேள்விகளை எழுப்ப முடியும் என நம்புகிறேன்" என்று குறிப்பிட்டார். "நான் வளர்ந்த சூழல் என் சார்ந்தவர்களாலே இவ்வாறான நூல் வெளியீடுகளை என்னால் செய்யக்கூடியதாக உள்ளது. நாம் பழகிய அறிமுகங்களும் அவர்களுடனான உலாத்தல்களும்தான் எங்களை ஒரு தளத்திற்கு கொண்டு போகிறது. எவன் கேள்வி கேட்கிறானோ அவன் விஞ்ஞானியாகவும், அறிஞனாகவும் மாறுகிறான். பழந்தமிழ்களை யாரும் தற்போது கவனிப்பதில்லை ஒதுக்கி விடுகிறார்கள். புலமைத்துவங்களுடையதை ஆற்றல்களை அடையாளப்படுத்த வேண்டிய சூழல் இருக்கிறது. ஆனால் இன்று வரை இல்லை. ஈழத்து சூழலில் எழுகின்ற குரல்களை கேட்கவேண்டும். அவற்றை பற்றி விமர்சிக்க வேண்டும். இது எங்களின் மண் இங்கு நாம் வாழ்வதற்கு கை ஏந்தி நிற்கின்ற தேவை எமக்கு இல்லை. இந்த சூழல்களிலே உள்ள நாங்கள் எமது அடையாளங்களை பேணிப் பாதுகாக்க வேண்டும். எங்களுக்காக நாங்கள்தான் போராட வேண்டும்" என்று மேலும் குறிப்பிட்டார் நூலாசிரியர். ஏற்புரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.








# வலம்புரி கவிதா வட்டத்தின் 46ஆவது கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டத்தின் 46 வது கவியரங்கு கொழும்பு அல ஹிக்மா கல்லூரியில் கடந்த மாதம் நடைபெற்றது.

தேசபந்து தெ.ஈஸ்வரன் அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் கொழும்பு விவேகானந்தா கல்லூரி அதிபர் ஆர்.இராமையா சிறப்பதிதியாகக் கலந்து கொண்டார். நிகழ்வுகளுக்கு நஜ்முல் ஹூசைன் தலைமை தாங்கினார். செயலாளர் இளநெஞ்சன் முர்சிதீன் வரவேற்புரை வழங்க ஈழகணேஷ் நன்றியுரை வழங்கினார்.





# நீதியோடு வாழ்வோம் நீதியைப் பெறுவோம்

தான், தன் குடும்பம், தன் இனம் என நீதியை ஒருதலைபட்சமாக வளைத்துக் கொள்ளக்கூடாது. எங்கு நீதி நிலைநாட்டப்படுகிறதோ, அங்கு தீவிரவாதம் இருக்காது.

மனித நேயத்தை வலியுறுத்தும் மார்க்கங்களில் முன்னிலை வகிக்கிறது, இஸ்லாம். மக்களின் உரிமைகளைப் பறிப்பதையும், அவர்களின் உயிர், உடமை, மானம் ஆகியவற்றை சேதப்படுத்துவதையும் அவர்கள் கொடுமைப் படுத்தப்படுவதையும் இஸ்லாம் தடைசெய்கிறது. அதற்கான பாவத்தை குற்றவாளி மீதே சுமத்துகிறது. பிறரை பாதிக்கும்படியான செயலை செய்துவிட்டு, அதற்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டால் அந்தப் பாவம் மன்னிக்கப்படுமா? என்ற கேள்விக்கு, 'மன்னிக்க மாட்டான்' என்ற பதிலே கிடைக்கிறது. 'மனித நேயம்' மட்டுமல்ல, அடுத்தவர் உரிமையை பறிக்கும் அதிகாரம் எவருக்கும் இல்லை என்று இஸ்லாம் ஆணித்தரமாகக் கூறுகிறது.

உலகத்தைப் படைத்துக் காத்துவரும் ஏக இறைவன் அல்லாஹ் ஒருவனே. தான் படைத்த உயிரினங்களின் மீது எல்லையில்லா அதிகாரம் அல்லாஹ்விடம் உள்ளது. இதுபற்றி திருக்குர்ஆனில் "இவ்வேதம் அல்லாஹ்விடம் இருந்து அருளப்பட்டிருக்கின்றது. அவனே வல்லமை மிக்கவன். அனைத்தையும் அறிந்தவன். பாவத்தை மன்னிப்பவன். பாவமன்னிப்புக் கோரி மீள்வதை ஏற்றுக்கொள்பவன். கடும் தண்டனையளிப்பவன். அருட்பேறு உடையவன். அவனைத்தவிர வணக்கத்திற்குரிய இறைவன் எவருமில்லை. அவனிடமே அனைவரும் திரும்பிச் செல்ல வேண்டியிருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


பாவம் செய்தவர்களின் பாவமன்னிப்பை ஏற்று மன்னிப்பை அளிப்பவன் இறைவன். ஆனால், ஒரு மனிதன் பிறருக்கு தீங்கு செய்துவிட்டு இறைவனிடம் பாவமன்னிப்புக் கேட்டால், பாதிக்கப்பட்ட நபர் மன்னிக்காதவரையில், இறைவன் மன்னிப்பதில்லை. தவறு செய்த மனிதன் அழுது புரண்டாலும், நோன்பு நோற்றாலும், தொழுது அழுது மன்னிப்புக் கேட்டாலும், தீங்கு இழைத்த நபரை அல்லாஹ் மன்னிப்பதில்லை. மன்னிக்கும் உரிமை தனக்கு இல்லை என்று இறைவன் கைவிரித்துவிடுகிறான்.


இது எத்தகைய உயரிய பண்பாடு. அகிலத்தை படைத்த இறைவன், அற்பமான மனிதனுக்கு இந்த உரிமையைத் தருகிறான். காரணம், தனது படைப்புக்கு அவன் அளித்துள்ள உரிமை. அடுத்தவரின் உரிமை என்பது, பொருள்களை எடுப்பதோ, தாக்குவதோ, துன்புறுத்துவதோ மட்டுமல்ல. ஒருவரைப் பற்றி பிறரிடம் புறம்பேசுவது, அவதூறு பேசுவது என மன ரீதியாக துன்புறுத்துவது ஆகும். ஒரு மனிதனின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதும் துன்புறுத்தும் செயலாகும்.

இன்று சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட பல விடயங்களில் ஒவ்வொருவரைப் பற்றியும் அவதூறு கருத்துக்கள் சர்வ சாதாரணமாகப் பரப்பப்பட்டு வருகின்றன. மனித உரிமை மீறல்கள் அப்பட்டமாக மீறப்படுகின்றன. தனக்கு தெரியாத அல்லது உறுதிப்படுத்தாத செய்திகளைப் பரிமாறுவதும் நடைபெறுகிறது. இவ்வாறு செய்வது மாபெரும் குற்றமாகும்.

தனி மனித உரிமை என்பது, 'அடுத்தவரின் மூக்கு நுனி வரையில்' என்பது தான் இலக்கணம். என் கையை வீசுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது எனில் அந்த உரிமை, பக்கத்தில் உள்ளவரை பாதிக்காத வரையில் பிரச்சினையில்லை. மாறாக, அடுத்தவரின் மூக்கு நுனியை இடித்துவிட்டால் அது மனித உரிமை மீறல் ஆகும்.


தான், தன் குடும்பம், தன் இனம் என நீதியை ஒருதலைபட்சமாக வளைத்துக் கொள்ளக்கூடாது. எங்கு நீதி நிலைநாட்டப்படுகிறதோ, அங்கு தீவிரவாதம் இருக்காது. திருக்குர்ஆன் கூறும் பல்வேறு வசனங்கள் நீதியை நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன. ஒவ்வொரு உயிருக்கும் அது வாழ்வதற்கான உரிமை உள்ளது. அதைத் தடுப்பதற்கான உரிமை எவருக்கும் வழங்கப்படவில்லை. உலக அமைதி என்பது நீதியை நிலைநாட்டுவதிலும், உரிமையை அளிப்பதிலும்தான் உள்ளது.





## 'வெள்ளியில் ஞாயிறு' கச்சிதமான ஆற்றுகை

தவக்காலத்தில் திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மிகப்பெரும் அரங்க ஆற்றுகையான 'வெள்ளியில் ஞாயிறு' கடந்த 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை இடம் பெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று ஆற்றுகையைப் பார்வையிட்டனர். இந்த் ஆற்றுகையின் ஒலி, ஒளி அமைப்புக்கள், உடைகள் தனித்துவம் வாய்ந்தவை. இந்த வருட ஆற்றுகையும் மிகச் சிறப்பாக அரங்கேற்றப்பட்டது.



# பாடசாலையில் தமிழ்ப்பாட கல்வியின் முக்கியத்துவம்

இரா. நிஷாந்தன்

ஒரு மனிதனுடைய வாழ்க்கையை நல்வழிப்படுத்துவதில் முதன்மை பங்கு வகிப்பது பாடசாலையாகும். ஒரு மாணவனுக்கு நல் ஒழுக்கம், பழக்கவழக்கம், கல்வி என்பவற்றை வழங்கி அவனை உயர்வான நிலைக்கு உயர்த்தி விடுவதும் பாடசாலையேயாகும். அத்தகைய பாடசாலைக் கல்வியில் தமிழ் மொழிக் கல்வி மாணவருக்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. இயல்த் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டது தமிழ்மொழியாகும். இதனையே முத்தமிழ் என்கின்றோம். இவ்வாறு மொழிப் பாடமாக அது விளங்குவதனால் பாடசாலை மாணவர்களுக்கு அவசியமானதாக அமைகிறது. ஆகவே மாணவரின் அடிப்படை அறிவே தமிழ் மொழிப் பாடத்தின் மூலமே வளர்க்கப்படுகின்றது. இன்றைய காலத்தில் ஆங்கிலக் கல்வியின் மோகத்தினால் தமிழ் பாடக் கல்வியின் நிலை வீழ்ச்சியடைந்துள்ளதைக் காணலாம். மாணவர் தமிழ்ப் பாடத்தை அடிப்படையில் இருந்து கற்று வரும் போது அவர்கள் தமிழ் பாடத்தில் உயர்நிலை பெற முடியும்.

**அமிர்த கலசம்**

தமிழ் என்பது பெரும் அமிர்த கலசம் போன்றது. இனிமையானது. இரசனை மிக்கது. நயத்தைத் தருவது. மன மகிழ்ச்சியைத் தருவது. அத்தகைய தமிழ்த் பாடம் தனை மாணவர் தரம் ஒன்றில் இருந்து உயர்தரம் வரைக்கும் கற்று வருகின்றனர். இதில் ஒவ்வொரு மாணவனும் தரம் ஒன்று முதல் தரம் பதினொன்று வரை தமிழ்ப் பாடத்தை கட்டாய பாடமாகக் கற்க வேண்டும். பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடங்களில் முதன்மை மொழிப் பாடமாக விளங்குவதும் தமிழ்ப் பாடமே. இத்தகைய தமிழ்ப் பாடம் இலக்கணம், இலக்கியம் எனும் இரு பிரிவுகளைக் கொண்டது. இலக்கணம் என்பது மாணவருக்கு அடிப்படை எழுத்தறிவினை வழங்குவது. பொதுவாக இலக்கணத் தமிழானது, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐந்து வகைகளில் உள்ளடங்குகின்றது. தமிழ் நெடுங்கணக்கில் சொல்லப்பட்டுள்ள இருநூற்று நாற்பத்து ஏழு தமிழ் எழுத்துக்கள் அடிப்படை எழுத்தறிவினை மாணவருக்கு தெளிய வைக்கின்றன. தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்களாக, உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு, மெய் எழுத்துக்கள் பதினெட்டு, உயிர் மெய் எழுத்துக்கள இருநூற்றி பதினாறு, ஆயுத எழுத்து ஒன்று என பிரிவுபடுகின்றன. உயிர் எழுத்தும், மெய் எழுத்தும் இணைந்து வரும் முப்பது எழுத்துக்கள் முதலெழுத்துக்களாகும். இதைவிட சார்பெழுத்துக்களும் பத்தாக வகைப்படுகின்றன. இவ் எழுத்துக்களை ஆரம்பக் கல்வியில் இருந்து தெளிவான முறையில் கற்று வந்தால் தமிழ் இலக்கணம் இனிக்கத் தொடங்கும். இவ்வாறே எழுத்துக்கள் இணைந்து சொற்கள் உருவாகின்றன அவற்றை அடுத்து யாப்பு மற்றும் பொருள், அத்துடன் அணிகளும் இலக்கணக் கல்வியில் அமைவுறுகின்றன.

**இலகுவானது இலக்கணம்**

குறிப்பாக இன்றைய மாணவர்களுக்கு தமிழ்ப் பாடத்தில் பெரும் கடினமாக உள்ளதே இந்த இலக்கணப் பகுதியேயாகும். இதற்குக் காரணம் மாணவர்கள் சிறிய வகுப்பிலேயே உரிய முறையில் இலக்கணக் கல்வியை பெற்றுக் கொள்ளாமையே யாகும். ஆனால் உண்மையில் இலக்கணப் பகுதி என்பது இலகுவானதே. நாம் அதனை கடினமாக நோக்கும் போதே அது கடினமாகத் தோன்றுகின்றது. நாம் விருப்புடன் இலக்கணத்தை கற்றால் அப்பகுதியும் மனதில் பதிந்து விடும். தமிழில் இலக்கியப் பகுதி இரசனை மிகுந்தது. நயக்கத்தக்கது. அனைவரது விருப்பத்திற்கும் உரியது. இலக்கியம் எனும் போது செய்யுள், சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை, நாவல் எனும் பல பிரிவுகள் உள்ளடங்குகின்றன. ஆனால் அந்த இலக்கியப் பகுதியும் சிலருக்கு கசக்கவே செய்கின்றது. இலக்கியத்தை நன்றாகக் கற்க வேண்டுமெனில் மாணவர் மத்தியில் இரசனை அதிகம் வேண்டும். இலக்கியத்தை ஆழமாக கருத்தூன்றி வாசிக்க வேண்டும். இலக்கியத்தில் உள்ள செய்யுள்களை நயமுற படிக்க வேண்டும். அப்போது தமிழ் இலக்கியப் பகுதியிலும் தேர்ச்சிபெற முடியும்.

சங்க காலம் முதலாக பல்வேறு காலகட்டங்களாக பல்வேறுபட்ட இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றில் பல இலக்கியங்களில் உள்ள பகுதிகள் தற்போதைய மாணவர்களின் பாட அலகுகளாக இணைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் மாணவர்கள் படித்து இன்புறுவதற்கு அடித்தளமாக அமைகின்றன. இவ்வாறு தமிழ் மொழிக் கல்வியில் இடம்பெறும் இலக்கண, இலக்கிக் கூறுகளை மாணவர்கள் விருப்புடன் கற்றுக் கொள்ள வேண்டும். எனவே, எழுத்தாற்றல், வாசித்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட தமிழ் மொழிக்கல்வியை மாணவர்கள் விருப்புடன் கற்ற வேண்டும். ஏனெனில் இன்றைய கல்வித் திட்டத்தில் மொழிப் பாடமான தமிழ்ப் பாடத்தில் மாணவர்கள் சித்தி பெறுவது அவசியமாகி விட்டது.



> இன்றைய மாணவர்களுக்கு தமிழ்ப் பாடத்தில் பெரும் கடினமாக உள்ளதே இவ் இலக்கணப் பகுதியேயாகும். இதற்குக் காரணம் மாணவர்கள் சிறிய வகுப்பிலேயே உரிய முறையில் இலக்கணக் கல்வியை பெற்றுக் கொள்ளாமையேயாகும். ஆனால் உண்மையில் இலக்கணப் பகுதி என்பது இலகுவானதே. நாம் அதனை கடினமாக நோக்கும் போதே அது கடினமாகத் தோன்றுகின்றது, நாம் விருப்புடன் இலக்கணத்தை கற்றால் அப்பகுதியும் மனதில் பதிந்து விடும். தமிழில் இலக்கியப் பகுதி இரசனை மிகுந்தது. நயக்கத்தக்கது. அனைவரது விருப்பத்திற்கும் உரியது. இலக்கியம் எனும் போது செய்யுள், சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை, நாவல் எனும் பல பிரிவுகள் உள்ளடங்குகின்றன. ஆனால் அவ் இலக்கியப் பகுதியும் சிலருக்கு கசக்கவே செய்கின்றது. இலக்கியத்தை நன்றாகக் கற்க வேண்டுமெனில் மாணவர் மத்தியில் இரசனை அதிகம் வேண்டும். இலக்கியத்தை ஆழமாக கருத்தூன்றி வாசிக்க வேண்டும். இலக்கியத்தில் உள்ள செய்யுள்களை நயமுற படிக்க வேண்டும். அப்போது தமிழ் இலக்கியப் பகுதியிலும் தேர்ச்சிபெற முடியும்.

குறிப்பான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் தமிழ்ப் பாடத்தில் சிறப்புச் சித்தி பெற்றாலே உயர்கல்வியைத் தொடர முடியும். எனவே இவற்றின் அடிப்படையில் மாணவர்கள் தம் பள்ளிக்கால கற்றலின் போது தமிழ் மொழிக் கல்வியை நேசித்து கற்க வேண்டியது அவசியமாகும்.

# மேன்மையுறு வாழ்வுக்கு நிரந்தரப் பேறளிக்கும் வாசிப்பு

கே.எஸ். சிவஞானராஜா

அறிவுக்கு மூலாதாரமாய் இருந்து வழிப்படுத்தும் நூல்நிலையங்கள் ஒரு நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. அறிவென்பது ஒரு நாடு உலக மேலாண்மையின் மீது நிமிர்ந்த நடை கொண்டு உலவுவதற்கு ஆணிவேராகத் திகழ்கிறது. கல்வியறிவின்றிய பாமர மக்கள் கூட்டம் பட்டங்கள் பெறாவிட்டாலும், வாசிப்பினால் பூரண அறிவு பெற்றவர்களாக திகழ்கின்றனர். நூல் நிலையங்களில் தெய்வங்கள் குடியிருப்பதனால், அங்கு நுழைந்து அறிவைத் தேடுவோர்க்கு வாழ்க்கை இனிக்கிறது. வாழ்வு வரமாகிறது. நேரம் பொன்னாகிறது. நீள் நிலம் தன் நீண்ட கரங்களை நீட்டுகிறது. எல்லோருமே அந்தக் கரங்களோடு கைகோர்த்திடுவோம். எழுந்து வாருங்கள்.

ஆசிரியம் என்கின்ற வழிப்படுத்தல் இன்றிய பல்கலைகளின் வதிவிடமே நூலகம். அறிவு,ஆற்றல்,ஆளுமை விருத்தி என்கின்ற கோட்பாடுகளின் ஆரம்பமாய்,மூலாதாரமாய் விளங்கும் ஓர் ஆலயமாகவும் விளங்குகிறது. ஆங்கே,

"வகிக்க,வாசிக்க வாழ்வினிக்கும்
நேசிக்க நேசிக்க நெஞ்சினிக்கும்
பூஜிக்க பூஜிக்கப் பொழுதினிக்கும்
யோசிக்க யோசிக்க நீயினிப்பாய்"

ஆம்,கல்விப்புலத்துக்கான முதலீடு என்பது, ஒரு போதும் எவரையுமே தோல்வி நிலை காணச் செய்யாது. அறிவின் ஆழ்நிலை கண்டுகொண்டு வாழ்விக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆகவே வீட்டிலும், பாடசாலையிலும், கிராமத்திலும், பிரதேசத்திலும் வடிவுற அமைவு பெற்றுள்ள நூல்களின் பார்வையுறு காப்பகத்துக்கு உயிர் தருவோம். உயர்வினை அளிப்போம். அறிவுசால் காண்கொண்டு உள்ளொளி தனைப் பெருக்கி உலப்பிலா ஆனந்தம் கொள்வோம்.


### ஆயுதம்

"விடுதலையை வேண்டிப் பயணிக்கும் புரட்சிப் பாதையின் பயணங்களில் துப்பாக்கிகளை விடவும், தாக்கவன்மையுடைய ஆயுதமாக நூல்கள் விளங்குகின்றன." என்று ரஷ்யப் புரட்சியாளர் லெனின் மொழிகிறார். உலகை வெற்றி கொண்டு நாம் தன்னிறைவு கொள்ள கரம் நீட்டுகின்றார். நாமும் இணைந்துகொள்வோம்.

அதேபோன்று ஒப்பற்ற தலைவன் ஆபிரகாம் லிங்கன் குறிப்பிடும் போது, "புத்தகம் என்பது உற்ற துணைவன், ஒப்பற்ற ஆசான், உயர்ந்த வழிகாட்டி, உயிரினும் மேலான உறவு, உன்னை நீயே அறிய உதவும் திறவுகோல், உன்னால் எதுவுமே முடியும்."; என இவை அன்னத்துக்குமான வாலயமான பொக்கிஷத்தை கண்டடைந்து கொள்ள எமை அழைக்கின்றார். நாமும் தாமதமின்றி கூடவே செல்வோமே..!

பேரறிஞர் 'சிசேரோ' என்ற கல்வியியலாளர் கூறுகையில், "நூல்கள் இல்லாத வீடு, உயிர் இல்லாத உடல் போன்றது." என்கிறார்.

கல்வியியலாளர் 'பா.தனபாலன்' இது பற்றி சுட்டுகையில், "தான் படைத்த நூல்களையும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் தந்து பேறளித்தது நூல்நிலையமே" என்று குறிப்பிடுகிறார். சங்கானை நூல்நிலையத்துக்கு தனது நன்றியையும், உபகாரத்தினையும் வழங்கி எமது நெஞ்சங்களில் நிறைகிறார்.



### நூலகம் அறிவின் கூடம்

இலங்கையில் ஏறத்தாழ மூவாயிரம் நூல் நிலையங்கள் வரை அமைவு பெற்றுள்ளதுடன் அவை நல்ல நிலையில் பேணப்பட்டு வருகின்றன. வல்லமையோடு வாசகர்களை வரவழைத்து, அவரவர் வாழ்வுக்கு அறிவின் வரம் சேர்த்து வெற்றியின் வழிகாட்டுதல் தருகின்றன.

"சென்ற இடத்தால் செலவிடாது தீது ஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.." (422)

இங்கு, "மனத்தை அது செல்லும் வழியில் செல்லவிடாது, அப்புலத்தின் கண்ணுள்ள நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதன் பால் நீங்கி, பொருத்தமுற நல்லனவற்றின் பால் செல்ல வழி தருவது அறிவாகும்." இத்தகைய அறிவின் சுரங்கமே நூல் நிலையமாகும்.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.." (423)

இங்கு, "யாதொரு பொருளாயினும், யாவர் வாய் சொல்லக் கேட்பினும், அப்பொருளின் மெய்ப்பொருளை நூல்களோடு ஆராய்ந்து பெற்றுக் கொள்வதற்கான வசதிகளையும் வாய்ப்புக்களையும் அளிப்பவை நூல்களே. நூல்களை வாரிவழங்குபவை நூல் நிலையங்களே.

அறிவுக்கு மூலாதாரமாய் இருந்து வழிப்படுத்தும் நூல்நிலையங்கள் ஒரு நாட்டின் முதுகெலும்பாக திகழ்கின்றன. அறிவென்பது ஒரு நாடு உலக மேலாண்மையின் மீது நிமிர்ந்த நடை கொண்டு உலவுவதற்கு ஆணிவேராகத் திகழ்கிறது.

கல்வியறிவின்றிய பாமர மக்கள் கூட்டம் பட்டங்கள் பெறாவிட்டாலும், வாசிப்பினால் பூரண அறிவு பெற்றவர்களாக திகழ்கின்றனர். நூல் நிலையங்களில் தெய்வங்கள் குடியிருப்பதனால், அங்கு நுழைந்து அறிவைத் தேடுவோர்க்கு வாழ்க்கை இனிக்கிறது. வாழ்வு வரமாகிறது. நேரம் பொன்னாகிறது. நீள் நிலம் தன் நீண்ட கரங்களை நீட்டுகிறது. எல்லோருமே அந்தக் கரங்களோடு கைகோர்த்திடுவோம். எழுந்து வாருங்கள்.

### வலி மேற்கு கண்டு கொண்ட நூலகம்

தேசிய வாசிப்பு மாதம் வருடாந்தோறும் கொண்டாடப்படும் போது, சங்கானை வலிமேற்குப் பிரதேச சபையால் நிர்வகிக்கப்படும் பொது நூலகம், தன்னாலான ஆக்கபூர்வமான ஊக்கமுறு முயற்சிகளை இளைப்பின்றி களையாது ஆற்றி வருகிறது. 2017 ஆம் ஆண்டினைப் போலவே இம்முறையும் செயன்முறைத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளமை சிறப்பு. எல்லோருக்கும் பயனுடைய நூலகசேவையை வடமாகாணத்தின் முன்னணிப் பொது நூலகமாக மாற்றுவதற்கு சங்கானைப் பொதுநூலகம் தன்னை அர்ப்பணித்து வருகிறது.

மனித குலத்தின் மகத்தான விழுமியங்களை உணர்த்தும் வகையில், எழுகின்ற சவால்களை வெற்றிகொண்டு, உன்னத நிலைகளை அடையும் வண்ணம் அறிவினால் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்கும் விதமாக, நூலகக் கட்டமைப்பினை விருத்தியடைய வைப்பதே நூலகத்தின் சங்கானை நூலகம் பொதுமக்களோடு நல்லிணக்கத்தைப் பேணி வளர்த்து வருகிறது.

அத்தோடு நாட்டுக்குத் தேவையான கல்வி மான்களையும், புத்தி ஜீவிகளையும், ஆன்மீகத் தலைவர்களையும் உருவாக்குவது என்பது ஒரு புறமிருக்க, வல்லதோர் ஆளுமை மிக்கநற்குடிமக்களை, வரமாக்குவதும்நூல்நிலையங்களே. வலி மேற்குப் பிரதேச சபை பல கல்விமான்களை இந்த பொது நூலகத்தின் பயன்கொண்டு எமக்குத் தந்துள்ளது.

கலாநிதி.பா. தனபாலன்,வைத்திய கலாநிதி.செ.கண்ணதாசன், வைத்திய கலாநிதி. ஆ.காந்தநேசன், சட்டத்தரணி. சோ.தேவராசா, எந்திரி.ந.ஆனந்தராசா, வைத்திய கலாநிதி. எஸ்.திருமாறன், பண்டிதர்.ம.ந.கடம்பேஸ்வரன், கல்விப் பணிப்பாளர்.சு.சுந்தரசிவம் ஆகியோரையும், இன்னும் பல அறிவாளிகளையும் குறிப்பிடலாம். மேலும் இந்த நூலகத்தின் தற்போதைய நூலகராக பா. விஜயகுமார் நியமிக்கப் பட்டுள்ளார். 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இவருடைய கடமையும்,பொறுப்பும் கவனமும், காத்திரமும் எல்லோரையும் சீர் தூக்கிப் பாராட்ட வைக்கிறது.

திருமதி.பா. செல்வராணி, மா.கணேஸ் செல்வி.சி.விமலா தேவி, எஸ.ஜே. செல்வராசா,பொ. சிவலிங்கம், ஆகியோர் இந்த நூலகத்தின் வளர்ச்சியில் அதீத கரிசனையைக் காட்டி நூல் நிலையத்தில் கடமையாற்றியவர்களாக முன்னிலை பெறுகின்றனர். தற்போது அதிக வாசகர்களைக் கொண்ட புதுப் பொலிவுடைய நூலகமாகப் பரிணமித்துள்ளது. இதன் பேறாக மொத்தமாக 9 ஆயிரத்து 862 புத்தகங்கள் இங்கு வாசம் செய்கின்றன. நல்ல நிலையில் அறிவுக் கண்களுக்கு பார்வை கொடுக்கின்றன. மேலும் இலத்திரனியல் நூலகமாகத் தனது சேவையை முன்னெடுக்க புதிய பரிணாமம் கண்டுள்ளது. வாசிப்பு மாத சிறப்பு நிகழ்வாக, நூலகர் பார்த்தசாரதி விஜயகுமார் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று ஓர் கலந்தரையாடல் சிறப்பாக நடைபெற்றது. இதில் பலர் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்து ஊக்கமளித்தனர்.

### ஆவணம்

சங்கானைப் பொதுநூலகத்தின் ஒரு வரலாற்று ஆவணமாக, 'வாழ்வும் வாசிப்பும்' என்ற நூல் கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்டள்ளமை பாராட்டப்பட வேண்டிய கைங்கரியம். அதேபோன்று வாசகர்களின் அறிவுத் தேவைக்காக ஒரு பட்டியல் எம்மோடு பகிரப்படுகிறது. நல்லதோர் விடயம். வாசிப்புக்காக அழைக்கும் நூல்களின் வகைமாதிரி இவ்வாறு அமைந்துள்ளது. பொது நூல்கள். 205, தத்துவம் 340, சமயம் 720, சமூகவியல் 845, மொழி - 287, விஞ்ஞானம் 655, தொழில்நுட்பவியல் 625, கலைகள்-115, இலக்கியம் 1428,வரலாறு - 988, பரீட்சை வினாவிடை - 62, சிறுவர் நாவல்- 575, நாவல்கள் 1474, ஆங்கில நாவல்கள் -581, நானாவித நூல்கள் - 962 பரீட்சை வினா விடைகளைப் பொறுத்தவரையில் இன்னும் அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவையுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இவையே பரீட்சையின் வழிகாட்டியாக விளங்குகின்றன. தரம்-5, தரம்-9, தரம்-10, தரம்-11, தரம்-12 மற்றும் தரம்-13 வகுப்புக்களுக்குரிய (அனைத்து பாடவிதானங்கள்) வினா விடைகள் தொகுப்பினை கொள்முதல் செய்வதும், அவற்றைப் பேணுவதும் முதன்மையான நடிவடிக்கையாக இடம்பெற வேண்டும். நூலகரின் அனுபவம் இதற்கு துணைபுரியும்.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் கீழ் உள்ள ஐந்து நூலகங்களிலும் மொத்தமாக 2 இலட்சத்து 60 ஆயிரத்து 922 புத்தகங்கள் உள்ளன. இதைவிடவும் பொது நூலகத்தில் மட்டும் 97 ஆயிரத்து 828 புத்தகங்கள் உள்ளன. ஒவ்வொரு வருடமும் 8 ஆயிரம் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அதைவிட நம் நாட்டவர்களுடையதும், நம் நாட்டைப் பற்றியதுமான நூல்கள் 12 ஆயிரத்து 328 என்ற எண்ணிக்கையின் பரம்பலில் உள்ளன.

### வாசிப்பை நேசிப்போம்

ஆக, ஒவ்வொருவருடமும் புதுப்புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட வேண்டும். இது சங்கானை பொது நூலகத்தின் 2018 ஆம் ஆண்டுக்குரிய முதன்மைக் கடமையாக இருக்கட்டுமே. அதே போன்று அதிக எண்ணிக்கையான வாசகர்களை வரவழைத்திட நூலகக் குடும்பம் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பது காலத்தின் வேண்டுகோள். கடந்த ஆண்டு 4 அயிரத்து 353 வாசகர்கள் யாழ் பொது நூலகத்தின் வாசித்தல் பகுதிக்கு வருகை தந்துள்ளனர். இது போதுமானதல்ல.

"வாசிப்பினை நேசிப்பதால், தேசியத்தில் பிரகாசிக்கலாம்...
கலாம் கண்ட கனவுகள் யாவற்றையுமே துலாம் பரமாக வாசிப்பிலே அறியலாம்...
வரந்தரும் வாழ்வுக்கு வாசிப்பே என்று... ய் நிரந்தரப் பேறளிக்கும் என்பதை உணர்ந்திடலாம்....!

# புனித பத்திரிசியார் கல்லூரியின் முத்தமிழ் விழா









யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் 'தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்' முத்தமிழ் மன்றத்தின் முத்தமிழ் விழா கல்லூரி அதிபர் அருட்தந்தை அ.பீ.திருமகன் அடிகளாரின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. விழாவின் முதன்மை விருந்தினராக இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் முதுநிலை விரிவுரையாளரும் பாடசாலையின் பழைய மாணவனுமான கலாநிதி தேவராஜா முகுந்தன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவனு பூபாலசிங்கம் கலந்துகொண்டார்.

## வரலாற்றில் இன்றைய தினம் 04.04.2018


DAWN

BHUTTO HANGED IN 'PINDI JAIL

Ex-PM buried in family graveyard of Nau Dero

Massive attack on Kampala launched

1979 – பாகிஸ்தான் தலைமை அமைச்சர் சுல்பிகார் அலி பூட்டோவுக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1841 – நிமோனியா காரணமாக அமெரிக்க அரச தலைவரான வில்லியம் ஹென்றி ஹலிசன் காலமானார். பதவியிலிருந்த போது உயிரிழந்த அமெரிக்காவின் முதலாவது அரச தலைவர் இவரே.

1905 – இந்தியாவின் கங்ரா பள்ளத்தாக்கில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 20 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

1930 – பனாமாவில் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது.

1939 – ஈராக்கில் இரண்டாம் பைசல் அரசரானார்

1944 – இரண்டாம் உலகப்போரில், ஆங்கில அமெரிக்கப் படைகளால் ஈராக் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து 300 பேர் உயிரிழந்தனர்.

1949 – 12 நாடுகள் இணைந்து வட அத்திலாந்திக் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதையடுத்து நேட்டோ உருவாக்கப்பட்டது.

1997 – சந்திரிகா, ரணில் உடன்பாட்டை இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் வரவேற்பு.






சுவிஸ் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தின், இருபத்தோராவது ஆண்டு நிறைவை ஒட்டி நடைபெற்ற, 'வேரும் விழுதும் 2018' கலைமாலை நிகழ்வானது சுவிட்சர்லாந்தின் சூரிச்சில், மண்டபம் நிறைந்த மக்களுடன் மிகச்சிறப்பாக அண்மையில் நடைபெற்றது.

## மணமகள் தேவை

79. கேட்டை 8 செவ்வாய். 37 பாவம் நியூசிலாந்து சிற்றிசன் மணமகனிற்கு மணமகள் தேவை. சீதனம் தேவை இல்லை.

**077 818 5978/075 011 1122**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி. கெருடாவில் வீரபத்திரர் கோயில் வீதியில் உள்ள 15½ பரப்புக் காணி. 70 தென்னைமரம். 10 பனைமரம். வேப்பமரம். சமண்டலை. மாமரங்கள் உட்பட விற்பனைக்குண்டு.

**076 834 9814**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

ஏழாலை கிழக்கில் 4பேர் கொண்ட குடும்ப வீட்டில் வேலை செய்யப் பணிப்பெண் தேவை. 50 வயதுக்கு மேற்பட்ட குடும்பப் பொறுப்பற்ற-வருக்கு முன்னுரிமை தங்குமிட வசதியுண்டு. (CS 15379) (04.17)

**077 483 6307/071 496 6658**

# 3 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்...

கலாபூஷணம், கலைவாரிதி

## இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை

(பண்ணாகம், சுழிபுரம்)

அன்னை மடியில் 22.09.1944

மண்ணின் மடியில் 08.04.2015

திதி:- சங்கடஹர சதுர்த்தி






தாத்தா தாத்தா
நல்ல தாத்தா
இனிய குறள்
சொல்லும் தாத்தா
நன்மைகளை
செய்யும் தாத்தா
இனிய கதைகள்
சொல்லும் தாத்தா
இனிய பாட்டுப்
பாடும் தாத்தா
எமக்குப் பிடித்த
நல்ல தாத்தா

**பேரன் - குபேரன்**

உங்கள் நினைவில் தவிக்கும்..
அம்மா, மனைவி, சகோதரர்கள்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(CS/15343)(11.17)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





அச்சுவேலி மத்திய கல்லூரி

பிரதி அதிபர்

## பரமநாயகம் பார்த்தீபன்

(Deputy pri.B.Ed)

அவர்கள் 28.03.2018 அன்று கொழும்பு BMICHஇல் **கல்விமாணிப் பட்டம்** பெற்றுக்கொண்டார். இவர் மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று, சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வளமுடன் வாழ மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:
மனைவி, பிள்ளைகள்,
அப்பா, அம்மா, அண்ணா, அக்கா,
தங்கைமார், தம்பிமார், சித்தப்பாமார்,
சித்திமார், மாமாமார், மாமிமார் மற்றும்
மைத்துனர்கள்.

நெல்லியான் வீதி,
பெரியபுலோ,
சுழிபுரம்.

(cs.15385) (13.17)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

(இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காதான் தாழ் வாழ்க)

கடந்த 08.03.2018 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த

## அமரர் தர்மலிங்கம் புஸ்பலதா

அன்னை மடியில் 06 . 11 . 1964



ஆண்டவன் அடியில் 08 . 03 . 2018

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (05.04.2018) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் **கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும்**. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 07.04.2018 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும் சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு **தர்மலிங்கம் புஸ்பலதா** அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு விரைந்து வந்து அனைத்து விதமான உதவிகளையும். வழங்கிய அன்பு உள்ளங்களுக்கு தொலை பேசி. மின்னஞ்சல் வழியாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளை நடத்துவதற்கு உதவிய குருமார்களுக்கும். போசன உதவிகள். சரீர உதவிகள்வழங்கிய. அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவி ஒத்தாசை வழங்கிய அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**15/16, நடுத்தெருலேன், (அன்னை இல்லம்)
அரியாலை, யாழ்ப்பாணம்.
077 910 3392**

(cs.15394) (13.17)

**குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 05.03.2018 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கு

## அமரர் மயில்வாகனம் நிர்ணியநாதன்





அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (04.04.2018) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.*

**குடும்பத்தினர்.**

கண்ணகை அம்மன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(CS 15344) (14.17)

பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!**

ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை, கண்டி. அம்பத்தன்ன.
**077 327 2302/ 076 466 4153**

(10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2017ஆம் வருட க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் எமது பாடசாலையின் வரலாற்றுச் சாதனையாக 8A.C பெறுபேறு பெற்ற

### சிறிஸ்கந்தராசா அனிஸ்ரிகா

அவர்களையும், அவரோடு இணைந்து சிறந்த பெறு பேறுகளைப் பெற்ற மாணவர்களான

- அண்ணாமலை விதுஜா - 2A, 4B, 2C, S
- இலங்கை வேந்தன் சிலோஜினி - A, B, 2C, 4S
- தவபாலன் கோகுலரமணன் - B. 3C. 4S
- செல்வலிங்கம் கௌசிகா - 2B, 2C,2S
- சிறி கீர்த்திகா - B,C,6S
- தயாளன் தனுசிகா - 4C,2S
- சுந்தரலிங்கம் சுகன்ஜா- 3C,3S
- சுகிர்தரஞ்சன் சங்கீதா - 2C,4S

ஆகியோரை பாராட்டி வாழ்த்துகின்றோம்

**பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை சமூகம்,
யா/ கட்டுவன் புலம் மகாவித்தியாலயம்
தெல்லிப்பழை.**

Congratulations

(IN/60777)(13.17)

HARI REAL ESTATE
A TRADITION OF TRUST

வீடு, காணி, வணிக மற்றும் அசையா சொத்துக்கள் விற்க, வாங்க நம்பிக்கையான முகவர் நிறுவனம் இப்பொழுது யாழ்நகரின் கேந்திர அமைவிடத்தில் ...

## "ஹரி றியல் எஸ்டேட்"

வடபுல ஆதன வர்த்தகத்துறையின் நம்பிக்கையான திறவுகோல் ...
உங்களது அனைத்து நிலையான சொத்து பரிமாற்றங்களையும் இலகுவாக மேற்கொள்ள நாம் உதவுகின்றோம் ...

- காணி, வீடு, மனை விற்க வாங்க
- காணி அளவீடு மற்றும் பெறுமதி மதிப்பீடு
- நிலையான சொத்துக்கள் பராமரிப்பு இவற்றுடன் அனைத்து கட்டட நிர்மாண தீர்வுகளும் ஒரே கூரையின் கீழ்

- குறைந்த சேவைக்கட்டணம்
- தேவையற்ற அலைச்சல்களுக்கு முற்றுப்புள்ளி
- வெளிப்படைத்தன்மை மற்றும் நட்புறவான வாடிக்கையாளர் சேவை

**ஹரி றியல் எஸ்டேட்**
இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி +94 021 221 4422
மொபைல் + 94 70 300 4000
முகநூல் harirealestate.lk

POWERED BY HARI




நீர் சுத்திகரிப்புடன் தொடர்புடைய அனைத்து பிரச்சனைகளுக்கும் பொருத்தமான நிபுணத்துவ தீர்வுக்கான ஒரே இடம்.


மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்



★எல்லா அளவிலுமான வீட்டிற்கும் ,தொழிற்சாலைக்கான RO சுத்திகரிப்பு இயந்திரங்கள்.

★நீரின் கல்சியத்தை நீக்கி மென்மையாக்கும் (Water Softener) இயந்திரம்.

★வீடு , தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு.



★நீச்சல் தடாக வடிவமைப்பு மற்றும் பராமரிப்பு.

இலகு தவணைகட்டண முறையிலும் பெற்றுகொள்ளலாம்.
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

WE ACCEPT MasterCard VISA

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
No.341, K.K.S Road, Jaffna.

## யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

**Experts in English Training**
சிறந்த வேலைவாய்ப்பிற்கு...
உள்நாட்டு, வெளிநாட்டு உயர் கல்விக்கு...

## Spoken English

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Hotline - 0777 17 35 17**

## ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

Reading Writing Speaking Listening

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 3.30 p.m. | Mon,Wed,Fri 9:30a.m<br>Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:30 p.m. | Tue, Thu 08.30 a.m.<br>Sat, Sun 7.30 a.m. | Mon,Wed,Fri 11:00 a.m<br>Sat, Sun 3.30 p.m.<br>Tue,Thu 9:00 a.m | Sat, Sun 9.30a.m |

கற்பிக்கப்படும் பாடத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

**Certificate in English**

Foundation ENGLISH — For beginners who want to read and write English

**DIPLOMA IN FLUENT ENGLISH**

Diploma in Fluent English Part - I — For people who are doubtful about their English and want to speak English fluently

Diploma in Fluent English Part - II — For speakers who want to master diction and style.

- அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் Grammar பற்றிய போதிய விளக்க முறைகள் மாணவர்களுக்கு பூரணமாக வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பதற்கான சந்தர்ப்பம்
- கணினி மூலமான Online Listening பயிற்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது .
- அன்றாட நடைமுறை வாழ்க்கைக்கான ஆங்கிலமொழியை பிரதிபலிக்க் கூடிய பாடத்திட்டம்.

புதிய பிரிவுகளுக்கான பதிவுகளினை DMI இனி யாழ்ப்பாணம்,நெல்லியடி,சாவகச்சேரி, சுன்னாகம்,கிளிநொச்சி கிளைகளில் மேற்கொள்ளலாம்

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

**IELTS** •Unique Test Tips •Latest course Materials

**IELTS Life Skills** திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

# DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சவன்ஸ் ஹோட்டல் அருகாமை) | M.M.V. வீதி, | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

# அசத்தலான தள்ளுபடி

**14.04.2018 வரை**

சிறுவர்களுக்கான ஆடை தினுசுகள்
பெண்களுக்கான சாறிகள், சல்வார்கள்,
பிளவுஸ், Top கள் மற்றும்
அனைத்து விதமான
ஆடைகளையும்
ஆண்களுக்கான சேட்டிங், சூட்டிங்
அனைத்து ஆடைகளையும்
ஒரே கூரையின்
கீழ் பெற்றுக் கொள்ளலாம்.



## ஸ்ரீ லலிதா பெஷன்

இல.165, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



## லலிதா ரெக்ஸ்

இல. 5,6 நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

**021 222 5260**

# அன்னை முத்துமாரி பஸ் சேவை

வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்

## கொழும்பு ⇄ யாழ்ப்பாணம்

காலை நேர பஸ் சேவையை ஆரம்பித்துள்ளோம்

Online Booking : www.annaimuthumari.com

கொழும்பில் இருந்து
காலை - 9.00 மணிக்கும்
பருத்தித்துறையில் இருந்து
காலை - 7.00 மணிக்கு புறப்பட்டு
யாழ்ப்பாணம் ஊடாக
காலை - 8.00 மணிக்கும்



தொண்டமனாறு, பருத்தித்துறை, கோப்பாய், சுன்னாகம், கொக்குவில், நல்லூர், யாழ்ப்பாணம்.

இதேபாதை ஊடாக பருத்தித்துறையில் இருந்து இரவு 9.00 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம் ஊடாக 10.00 மணிக்கு இரவுநேர சேவை நடைமுறையில் உள்ளது.

## தொடர்புக்கு : 0775448503

# MODERN City Inn

WiFi Available



Comfortable Air Conditioned Rooms with Attached Toilets and Hot & Cold Water

**Very Moderate Room Charges**

Single or Double Occupancy
and Family Apartment
Wedding / Small Group Conferance
All Kind of Parties

**10 minutes drive from Air Port.**
**You can contact in all Three language**

Adequate Parking
Satalite TV
Beach Tour-Taxi
Internet Facility
Round Tour
Airport Drops/Picks

426, Main Street, Negombo.
(Opposite Cargills Food City - Behind Glitz)
moderncityinn@yahoo.com
moderncityinn1@gmail.com
moderncityinn.com

For inquiries and Reservationes
Contact No:- 031-2233967
031-2231961
moderncityinn@yahoo.com

## யாழ். திருநெல்வேலியில்
## முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

# யாழ் வைத்தியசாலை

**24 மணிநேர சேவை**

### தற்போது அதிநவீன வசதிகளுடன் கூடிய சத்திர சிகிச்சைக் கூடம்



அக்ரகாரா. அரச/ ETF தனியார் நிறுவனங்களின் காப்புறுதி அங்கீகாரம் பெற்றது.

- வெளிநோயாளர் பிரிவு O.P.D
- மருந்தகம் Pharmacy
- ஆய்வுக்கூட சேவை Laboratory



✓ **Laproscopy Surgery** (வீடியோ மூலம் சத்திரசிகிச்சை)
- Hernia (கேணியா)
- Appendectomy (அப்பன்டிஸ் அகற்றல்)
- Hysterectomy (கருப்பை அகற்றல்)
- Cholecystectomy (பித்தப்பை அகற்றல்)
- Dye Examination



✓ **General Surgeries**
- Vericosevein (வெறிகோஸ் சத்திரசிகிச்சை)
- Hernina (கேணியா சிகிச்சை)
- Appendection (அப்பண்டிஸ் அகற்றல்)

✓ **E.N.T சத்திர சிகிச்சை**
- Nasal (மூக்கு)
- Septoplasfy (மூக்கு சீராக்கள்)
- Ear (காது)
- Myringoplasy (காது சௌவு துவாரம் அடைத்தல்)
- Mastoidectomy
- Thyroidectomy (தைரொட்டு சுரபி அகற்றல்)
- Parotidectomy (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்)



✓ **Endocopy** (அதிநவீன என்டர்ஸ்கொப்பி)

315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3533, 021 222 1011, 0777 781 005

மேலதிக தகவல்களுக்கு: **077 310 7685**

**40th Anniversary of Jaffna Medical Faculty**

# YARL

## மருத்துவக் கண்காட்சி - 2018

*"Health towards new horizon"*

# இடம் : யாழ். மருத்துவபீடம்

## திகதி : 04 - 07, சித்திரை, 2018

## நேரம் : காலை 9.00 - மாலை 7.00

**அடிப்படை விஞ்ஞானம்**
முளையியல், மையநரம்புத் தொகுதியும் புலன் அங்கங்களும் இதயமும் சுற்றோட்டத் தொகுதியும், சுவாசத் தொகுதி, உணவுக் கால்வாய்த் தொகுதி, சிறுநீர் சனனித் தொகுதி, அகஞ்சுரக்கும் தொகுதி, தசை மற்றும் வன்கூட்டுத் தொகுதி, ஒட்டுண்ணியியலும் நுண்ணுயிரியலும்

**மருத்துவத் துறையின் அண்மைக்கால முன்னேற்றங்கள்**
நனோ மருத்துவம், மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியலில் புது முன்னேற்றங்கள், முன்னேறிய அறுவைச் சிகிச்சை மற்றும் ரோபோ தொழினுட்பம், சட்டமருத்துவ விசாரணைத் தொழினுட்பத்தின் சமீபத்திய முன்னேற்றங்களும் எதிர்கால வழிகாட்டல்களும், மரபணு மற்றும் அணு (Nuclear) மருத்துவம், e - மருத்துவம், மருத்துவ சேவை வழாங்குதலின் நாளைய வழிகாட்டல்கள். சட்ட மருத்துவத்தில் நவீன தொழில்னுட்பம்.

**சுகாதாரம் தொடர்பாக நிகழ்கால சவால்கள்**
வாகன விபத்துக்களும் முதலுதவியும், (CPR. பாம்புக் கடியும் பாம்பினை இனங்காணலும், அதிர்ச்சி விபத்துக்களும் இரத்தப்போக்கும், சுவாசத் தடை அவசர நிலையும் மாரடைப்பும். நீரில் மூழ்குதல், எரிதல். அதிர்ச்சி மயக்கமும் வலிப்பும், நஞ்சாதல் மற்றும் அளவுக்கதிகமான மருந்து உள்ளெடுத்தல்), சுற்றாடல் ரீதியான பிரச்சினைகள் (மாசாகும் வழிகள், நீர் சுத்திகரிப்பு, கழிவு முகாமைத்துவம். சேதனத் தோட்டம், வாழ்க்கைமுறை (டெங்கு, காசநோய், வாழ்க்கைமுறையை மாற்றி அமைத்தல்), ஏனையவை (கொல்லிகள் எதிர்ப்பு, நோயாளிகளின் உரிமை, நாட்பட்ட சிறுநீரக நோய்)

**தொழில் வழிகாட்டல்**
துறைசார் உப துறைசார் நிபுணத்துவம்
துணைச் சிறப்பம்சங்கள்
தாதியியல் மற்றும் மகப் பேற்றுத் தாதியியல்
பல் வைத்தியம்
இணை மருத்துவக் கல்வியாளர்கள்
நோய் நிர்ணயம்சார் துறைகள்
மருத்துவ நிர்வாகத்தின் & ஆய்வுகளின் வளர்ச்சி
பாரம்பரிய மற்றும் ஏனைய மருத்துவமுறைகள்

**சிறுவர் ஆரோக்கியம்**
குழந்தைகளுக்கான சுகாதாரம், சிசுப் பராமரிப்பு, பிறவிக் குறைபாடுகள், ஊட்டச்சத்து, வளர்ச்சியும் விருத்தியும், தடுப்பு மருந்து வழங்கல், தொற்றுநோய் குழந்தைகளுக்கான அவசர சிகிச்சைகள்.

**கட்டிளமைப் பருவ ஆரோக்கியம்**
பாடசாலைக் கற்கை, சிறுவர் துஷ்பிரயோகம், சிறந்த வகுப்பறை அமைப்பு, ஆரோக்கியமான வீடு மாதிரி, புனர்வாழ்வு நிறுவனங்கள் பற்றிய விழிப் புணர்வு, கட்டிளமைப்பருவ சுகாதாரம், ஊட்டச்சத்தும் உடற்தொழிற்பாடும், குடிப்பழக்கம், புகைப்பிடித்தல் மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் பாலியல் கல்வி, உளச் சுகாதாரமும் நடத்தைப் பிரச்சினைகளும், கட்டிளமைப் பருவத்தினருக்கான வலுவூட்டல்.

**வயது வந்தோர் சுகாதாரம்**
இதய முடியுரு நாடி நோய், உயர் இரத்த அமுத்தம், நீரிழிவு நோய், உடற்பருமன் அதிகரிப்பு, தைரொய்டு நோய், வயிற்றுப்புண் நோய், மூச்சுக் குழாய் ஆஸ்துமா, நீண்டகால சுவாசப்பாதை அடைப்பு நோய்.
கர்ப்பம், இனவிருத்தி குன்றிய தன்மை, குடும்பக் கட்டுப்பாடு, பாலியல் தொற்று நோய்கள் / பால்வினை நோய்கள், தடவியல் மருத்துவம், மாற்றுவலு தொடர்பான விழிப்புணர்வு, தொழில்சார் சுகாதாரம், புற்றுநோய் தடுப்பு, உளவியல் மற்றும் சமூக ஆதரவு.

**முதியோர் சுகாதாரம்**
புலன்செயற்பாட்டுக் குறைபாடு, ஊட்டச்சத்து
முதியோர்கள் தொடர்பான நரம்பியல் நோய்கள்
முதியோர்கள் தொடர்பான தசை மற்றும் வன்கூட்டுத் தொகுதி நோய்கள்
உளவியல் நோய்கள்
முதியோர்கள் தொடர்பான பொதுவான புற்றுநோய்
பேறு பொதுவான நோய்கள்
ஆரோக்கியமான முதுமை, வலிநிவாரண பராமரிப்பு

Evolution Events and Corporate Services
THE ALUMNI FACULTY OF MEDICINE - JAFFNA
AK KAMAL PHOTOGRAPHY

## கூட்டமைப்பின் 10...

வும் உள்ள 10 விடயங்களை எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் அறிவிப்பிற்கு முன்னர் நிறைவேற்றி வழங்குவதாக எழுத்தில் உறுதியளித்தால் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்க்கலாம் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை விதித்துள்ளது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது கூட்டமைப்பு மேற்கொள்ளவேண்டிய நிலைப்பாடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில்கூடியது. நீண்ட வாதப் பிரதிவாதங்களுடன் நடைபெற்ற இந்தக் கூட்டத்தின் இறுதியில் ரணிலுடன் பேரம் பேசுவது என்ற முடிவு எடுக்கப்பட்டது. அதற்கமைய 10 கோரிக்கைகள் அடங்கிய நிபந்தனைப் பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்பட்டு ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது. அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள கோரிக்கைகளாவன

- புதிய அரசமைப்பு முயற்சியை எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாகப் பூர்த்தி செய்து நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன்அதனைநிறைவேற்றுதல்.
- வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் பிரதேசத்தில் படைகள் வசம் தொடர்ந்தும் உள்ள நிலப்பரப்புக் களை விடுவித்தல்.
- இதேகாலத்தில் சிறையில் வாடும்அரசியல் கைதிகளை மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்தல்.
- காணாமற்போனோரின் உறவுகள் கடந்த ஓராண்டாக வீதியில் உள்ள நிலையில் காணாமற்போனோர் செயலகம் என்ற ஒன்றைத் தவிர வேறு எந்த உருப்படியான முன்னேற்றமும் இல்லாதமையினால் அதற்கான பொறுப்புக்கூறலுடன் உரிய தீர்வினைக் கூறுதல்.
- வடக்கு கிழக்குப் பகுதிகளில் தொழில் முயற்சி என்னும் பெயரில் குடியேற்ற முயற்சியோடு அந்தப் பகுதி மக்களின் உரிமை மறுக்கப்படுவ்து தொடர்பில் நீண்டகாலமாகச் சுட்டிக் காட்டும் விடயத்துக்கு உரிய தீர்வு வழங்குதல்.
- வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர். இளம்பெண்கள் வேலை வாய்ப்பின்றியுள்ள நிலையில் விசேடமாக வேலைவாய்ப்பு வழங்கி அதற்கான தீர்வை வழங்குவதோடு வடக்கு கிழக்கு பகுதிக்குத் தெற்கில் இருந்து நியமனம் வழங்குவதனை நிறுத்துதல்.
- வடக்கு கிழக்கு மாகாணத்தின் 8 மாவட்டங்களுக்கும் தமிழ் அரச அதிபரை நியமித்தல்.
- வடக்கு , கிழக்கு மாகாணங்களில் திட்டங்கள் அபிவிருத்திகளின்போது மாகாண அரசின் கொள்கைகள் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதோடு திட்டத்தயாரிப்பின் போதே மாகாண சபையின் கருத்தைப் பெறுதல்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரும் நேற்றுச் சந்தித்துப் பேசியபோது அவரிடம் இந்தக் கோரிக்கைகள் அடங்கிய கடிதம் கொடுக்கப்பட்டது. இதற்கு அவர் எழுத்து மூலம் வழங்கும் பதிலைப் பொறுத்து இன்று கூட்டமைப்பின் முடிவு தெரியும் என்று கூறப் பட்டது. (உ-105)

## பல்கலை...

ணப் பல்கலைக்கழக ஊழியர்கள் உட்பட அனைத்துப் பல்கலைக்கழக சங்கங்களின் சம்மேளனம் சம்மதம் தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டபோதும் அவற்றை 2020 ஆம் ஆண்டுவரை எந்த அடிப்படையில் கொள்கை தயாரிப்பது என்பது பற்றிய பேச்சு நேற்று இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது.

சம்பள அதிகரிப்புப் பற்றிய பரிந்துரைக் கடிதம் உயர் கல்வி அமைச்சரால் திறைசேரிக்குக் கொடுக்கப்படவில்லை. அதனால் சம்பளம் வழங்கப்படுவது பற்றிய சுற்றறிக்கையை திறைசேரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கவில்லை.

உயர் கல்வி அமைச்சர் அந்தக் கடித்தில் கையெழுத்திடவேண்டும். ஆனால் அரசியல் குழப்பங்களால் அவர் சிறிகொத்தாவில் உள்ளார். அதனாலேயே கையெழுத்துப் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. கடிதம் கிடைக்கும்வரை தமது பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்று ஊழியர் சங்கம் தெரிவித்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நடத்தும் 4 நாள்கள் கொண்ட கண்காட்சி இன்று ஆரம்பமாகிறது. அதற்கு அவசர உதவிகளை மட்டும் ஊழியர்கள் வழங்குவர் என்றும் சங்கம் தெரிவித்தது. (ற-4)

## பொது அறிவித்தல்

இத்தால் சகலருமறிய யாழ்ப்பாண மாநகர சபை, யாழ்ப்பாணப் பிரதேச செயலகர் பிரிவு J/88 கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள "கோம்பயன்மணல்" இந்து மயானத்திற்கு அருகில் "தில்லைவயல்" என்ற ஒன்பது பரப்பு விஸ்தீரணமான **ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் கோவிலுக்கு சொந்தமான ஆதனம்** அமைந்துள்ளது. இவ் ஆதனத்தின் எல்லைகள் : கிழக்கு: ஆறுமுகம் பெண் அமிர்தலட்சுமியின் ஆதனம், வடக்கு : மானிப்பாய் வீதி, மேற்கு : மகாதேவா அன்பழகனின் ஆதனம், தெற்கு : ஆறுமுகம் பெண் அமிர்தலட்சுமியின் ஆதனம் என்ற எல்லைகளை கொண்டு அமைந்துள்ளது. இவ் ஆதனத்தை எவரும் உரிமை கோரவோ விற்கவோ வேறு வகையில் உரித்துமாற்றம் செய்யவோ எந்த உரித்துமில்லை.

**ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் கோவில் பரிபாலன சபையின் சார்பில்**

**தலைவர்**

ராசி அதிர்ஷ்டம்

திகதி 03.04.2018 | வெற்றி வாரம் 2275 | வர்ணம் நீலம்

சிம்மம்

வெற்றி இலக்கங்கள் 13 21 44 57

புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 40, 51, 868/=

2018.04.04ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 275

வர்ணம் : இளஞ்சிவப்பு

சீட்டிழுப்பு திகதி: 2018.04.03

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 89,732,577/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்

O 03 48 53 61

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB LOT KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 216

வர்ணம் : நீலம்

சீட்டிழுப்பு திகதி: 2018.04.03

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,539,610/-

வெற்றி இலக்கங்கள் 01 22 23 35

ஆங்கில எழுத்து I

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB LOT A Kஎன டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 788

சீட்டிழுப்பு திகதி 2018.04.02 திங்கட்கிழமை

P 18 49 50 52

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,042,000/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2018.04.05ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## தவறிவிட்டது

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த ஐயாத்துரை திருச்செல்வம் ஆகிய எனது வெளிநாட்டு நாணயத்தாள்கள் உட்பட ஒரு தொகைப் பணமும் தேசிய அடையாளஅட்டை, கடனட்டை உள்ளிட்ட ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் நேற்று முன்தினம் (02.04.2018) மீசாலையிலிருந்து மானிப்பாய்க்கு செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்)

**தொடர்பு - 077 744 5246, 0041786 111489**

## மரண அறிவித்தல்

### திருமதி காமாட்சி பொன்னையா

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி திருநகர் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காமாட்சி பொன்னையா (03.04.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி சின்னாச்சி தம்பதியரின்அன்புமகளும்காலஞ்சென்றவர்களானவேலுப்பிள்ளை பொன்னையாவின் அன்புமனைவியும் ஜெயக்குமாரன் (வவுனியா) காலஞ்சென்றவர்களான கிருஷ்ணகுமாரன் (நெடுந்தீவு தபாலகம்), இந்திரகுமார் (இ.போ.ச. மன்னார்), பரமேஸ்வரகுமாரி, கிருஸ்ணகுமாரி (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புத்தாயும் கலாரஞ்சினி (வறவீர), அனுசியாதேவி (உடுவில் மகளிர் கல்லூரி, ஆசிரியை), சத்தியபாமா (வவுனியா), உலகேஸ்வரன் (பெல்ஜியம்) ஆகியோரின் அன்பு மாமியும் டிலான், கேமானந்த், கோபிநாத், பிரசாத், ஜித்தீஸ், மதுமிதா, பிரியங்கா, சாரங்கா, அருளங்கா, துசாரங்கா, சங்கீத் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரி இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2018) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கச்சேரி 1 ஆம் ஒழுங்கை, திருநகர் வடக்கு, கிளிநொச்சி.**

**தகவல் : பிள்ளைகள் தேவதாசன்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 - 05 - 1929



மறைவு 31 - 03 - 2018

### திருமதி. பரமேஸ்வரி (மணி) மகாதேவா

(இளைப்பாறிய ஆசிரியை - உரும்பிராய் இந்துக் கல்லூரி. யாழ். இந்து மகளிர் கல்லூரி)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், ஊரெழு, திருநெல்வேலி, கொழும்பு, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட, திருமதி பரமேஸ்வரி மகாதேவா (மணி) அவர்கள் 31/03/2018 சனிக்கிழமையன்று சிட்னியில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஊரெழு ராசா தங்கம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான நல்லூர் இளையப்பா, விசாலாட்சி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற மகாதேவா (தேவன்- யாழ்ப்பாணம், ஆசிரியர், யாழ் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், உதயஸ்ரீ, விஜயஸ்ரீ, பத்மஸ்ரீ (பப்பு), குகஸ்ரீ (குக்கு), லயஸ்ரீ ஆகியோரின் பாசமிகு தாயாரும், மதிகுணபாகன், பானு, கலைச்செல்வி, டேவிட் செல்வகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, மகேந்திரன், புவனேந்திரன், ராஜேஸ்வரி, ராஜேந்திரன், ராமச்சந்திரன், பாலகிருஸ்ணன், மற்றும் சிவனேஸ்வரி (குஞ்சு) --கொழும்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிலாஷ், அபிஷான், Dr.அபிஷேக், Dr.அபிராம், அபிசாயினி, அபிதேவ், அபிநயனி, அபிநேஷ் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.04.2018 Thursday - 10.00 AM to 12.30 PM சிட்னி, அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்**

தகவல் - பத்மஸ்ரீ (பப்பு) + 61416102294 / குகஸ்ரீ (குக்கு) + 61403009807

## மரண அறிவித்தல்

மலர்வு 13 - 05 - 1950



உதிர்வு 03 - 04 - 2018

### திரு. இராமலிங்கம் விஸ்வலிங்கம்

(நிர்வாக அதிகாரி (A O) மஸ்கன்ஸ் நிறுவனம், கொழும்பு)

முன்னாள் பணிப்பாளர், தொழிற்துறைத் திணைக்களம் வடமாகாணசபை

முன்னாள் பணிப்பாளர், புனர்வாழ்வு மற்றும் புனருத்தாபன திணைக்களம் வடகிழக்கு மாகாணசபை

புலோலி தெற்கு உபயகதிர்காமத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராமலிங்கம் விஸ்வலிங்கம் அவர்கள் கொழும்பில் இறைபதம் எய்தினார்.

இவர் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், தங்கரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான வேல்முருகு பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், சரோஜினிதேவி அவர்களின் அன்புக் கணவரும், Dr. தயாளினி, Dr. தர்ஷினி (தேசிய வைத்தியசாலை கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. நடராஜா (U.K), Dr. மலர்ராணி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னார் Dr. சசிகுமார் (மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை), Eng.செல்வபாலன் (Idieal Engineering (Pvt) Ltd) ஆகியோரின் அன்பு மாமனாரும் சந்தோஷ், பிருந்தேஷ், ஜிதேஷ், அக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 04.04.2018 புதன்கிழமை பி.ப. 4.00மணி தொடக்கம் 9.00 மணி வரை மற்றும் 05.04.2018 வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணியளவில் இறுதிக்கிரிகைகள் இடம்பெற்று கல்கிசை பொது மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

41-2/6 42nd Lane, Wellawatta.
Tel : 011-2508640, 0777824331, 0777717760

தகவல்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

**யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்**

22.03.2018 ஆம் திகதிய மேற்படி விளம்பரத்தில் விலைக் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித்திகதி 04.04.2018 ஆனது 12.04.2018 ஆம் திகதியாக நீடிக்கப்படுகிறது.

**தலைவர் / பணிப்பாளர்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்** 04.04.2018


## 5 மணி நேரம்...

தீர்மானம் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றே முடிவு எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று 5 மணி நேரம் இரண்டு கட்டங்களாக இடம்பெற்றபோதும், எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் த.சித்தார்த்தன், சிவநேசன், சிவசக்தி ஆனந்தன் ஆகிய மூவரும் பங்கேற்கவில்லை.

சுமார் ஒன்றரை மணி நேரம் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

முடிவில்லாது காரசாரமான விவாதங்களுடன் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து அழைப்பு வந்துள்ளது. அத்னையடுத்து கூட்டத்தை ஒத்தி வைத்து கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வெளியேறினார்.

அரச தலைவருடனான சந்திப்பு முடிவடைந்து வந்த இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டம் மீண்டும் நேற்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமானது.

பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள், ரணிலை ஆதரிக்கக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளனர். வாக்கெடுப்பில் பங்கேற்காமல் விட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், ரணிலுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று உங்களைக் கோரமாட்டேன, எங்களுக்கு இரண்டு கட்சிகளும் இணைந்த ஆட்சி தொடரவேண்டும் என்றார். அரசமைப்பு முயற்சிகளை நிறைவேற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை. அதற்கு இணைந்த ஆட்சி அவசியம். மேலும், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் மகிந்த வெற்றி பெற்றால், அடுத்த பிரச்சினையை தொடங்குவார். மகிந்த மீண்டும் எழுச்சியடைவதை அனுமதிக்க முடியாது என்று குறிப்பிட்டார்.

சுமார் மூன்று மணிநேரம் நடந்த சந்திப்பில் எந்த முடிவும் எடுக்கப்படாமல் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் முடிவுக்கு வந்தது. இன்று காலை 9.30 மணிக்கு மீண்டும் கூடி ஆராயவுள்ளனர். (உ-5-105)

## வாக்குகள்...

காகவே நாம் நடுநிலை வகித்தோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

கரவெட்டிப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவு நேற்று நடைபெற்றது. அதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் வாக்களிக்காது நடுநிலமை வகித்தார்கள். அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாங்கள் நடுநிலை வகிக்கக் காரணம். இந்தச் சபையில் எங்களுக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லை. சபையைக் கைப்பற்ற முடி யாது. அதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்புடனோஅல்லதுவேறு தரப்பினருடனோ கூட்டுச் சேரும் எண்ணமும் இல்லை. கொள்கை ரீதியாக எமக்கும் கூட்டமைப்பினருக்கும் இடையில் இடைவெளி இருப்பது எல்லோருக்கும் தெரியும். எங்களுடைய வாக்குகள் வேறு தரப்புக்குப் போகாத 'வகையில் நாங்கள் நடுநிலை வகித்தோம்." என்று அவர் தெரிவித்தார். (ற-21,37)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes





Congratulations

திரு.
**மத்தியூஸ் கிளென்**
Sp. - Tr. Primary Edu. B.Ed

திருமதி
**இன்பவதனி சக்திவேல்**
Sp. - Tr. Primary Edu. B.Ed.

28.03.2018 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கல்விமாணி பட்டம் பெற்றுக்கொண்ட எமது ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

CongratulationS

**யா /புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், பாடசாலை சமூகம்.**



செவ்வாய்க்கிழமை

அபிவிருத்தி லொத்தர் சபை — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் : 657 | வர்ணம் : மஞ்சள் | திகதி : 2018.04.03

வெற்றி இலக்கங்கள்: 46 35 60 01 | ஆங்கில எழுத்து: P

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 13,343,732/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
**வேலுப்பிள்ளை யோகேஸ்வரன்**
அவர்களின் தந்தை
**நாகமுத்து வேலுப்பிள்ளை**
அவர்கள் 02.04.2018 காலமானார்.
அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



**ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

(CS/15377)(11,17)



# Study in Europe

ஐரோப்பாவில் படிக்க குடியேர ஓர் அரியவாய்ப்பு



Degree → Masters Degree

(G.C.E) A/L → YEAR 1 Degree → YEAR 2 Degree → YEAR 3 Degree → Masters Degree

Admission open for 2018 Intakes

* English medium
* IELTS not required
* No fee / Very low fee
* 20 Hours part time / week

Schengen visa (valid for 26 countries)

iCS DREAM BEYOND BOARDERS Study Abroad

Admissions :- 077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்)
107, B 1/1 Galle Road, Colombo - 06


## மரண அறிவித்தல்

# கணபதிப்பிள்ளை மகாலிங்கம்

*(முன்னாள் ஆசிரியர்)*



அரசகேசரிப் பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகாலிங்கம் நேற்றுமுன்தினம் (02.04.2018) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் மகனும் சின்னத்தம்பி - காமாட்சி தம்பதிகளின் மருமகனும் சிவலட்சுமியின் பாசமிகு கணவரும் ஜசா, காலஞ்சென்ற உஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் மற்றும் கமலாதேவி, சின்னத்துரை, இலட்சுமி பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் க.தர்மலிங்கம் (வலி.கிழக்கு, பிரதேச சபை, உறுப்பினர்), அ.சிவபாதம், நாகேஸ்வரன் (ஜேர்மனி), சிவபாலசிங்கம், க.சிவஞானம் (கனடா), குணமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் முன்பாக, நீர்வேலி மத்தி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# தம்பிப்பிள்ளை பாலச்சந்திரன்



தோற்றம் 26.12.1948 | மறைவு 03.04.2018

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளைபாலச்சந்திரன் நேற்று (03.04.2018) காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - கமலம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - கனகாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற லீலாவதி மற்றும் ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், குமுதினி, அமுதினி, பாமினி, தணிகைக்குமரன், உதயச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ரவிச்சந்திரன் மற்றும் மோகன்ராஜ் (நீதிக்கிளை மாவட்டச் செயலகம்,யாழ்ப்பாணம்), சிவமோகன், சம்மிஹேமந்தி, சுமிதா (ஆசிரியர், தீவகம்) ஆகியோரின் அன்புமாமனாரும், நிஷாந், துஷாரகா, அபிராஜ், நிவேதிகா, கம்ஷா, அசேல், தருஸ், கஜலக்ஷன், திலக்ஷன், தீபிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2018) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் இல. 30, முதலாம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூரில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 4816446, 077 956 2665, 077 2816446**

(CS/15393)(11,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

பரு...
றுடன் முன்னாள் அரச தலைவர் மகிந்தவின் தாமரை மொட்டும் வாக்க ளித்தது.
பருத்தித்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவு நேற்றுப் பி.ப. பிரதேச சபை மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூ ராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ் சன் தலைமையில் நடைபெற்றது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தவிசாளராக அரியரத்தினம் சார்ள்ஸ் அரியகுமார் முன்மொழியப்பட்டார்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கிருஷ்ண பிள்ளை ஜெயபாலன் முன்னெடுக்கப்பட்டார். பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் முன்மொழியப்பட்ட அரியகுமார் 13 வாக்குகளைப் பெற்று தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். கூட்டமைப்பு உறுப்பினர்கள் 8 பேரும், ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் 3 பேரும் ஐ.தே.க. மற்றும் பொதுஜன பெரமுனவின் தலா ஒரு உறுப்பினரும் அரியகுமாருக்கு வாக்களித்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் முன்மொழியப்பட்ட ஜெயபாலன் 4 வாக்குகளைப் பெற்றார்.
தமிழர் விடுதலை கூட்டணி, சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. உப தவி சாளர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன் மொழியப்பட்ட பாலசிங்கம் தினேஷ் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். (ரு-21, 26,173,37)

## வீடு வாடகைக்கு உண்டு

இராசாவின் தோட்ட வீதியில் இரண்டு அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (சிறிய குடும்பம் விரும்பத்தக்கது) - 077 076 0071

## தேவை

யாழ் நகரத்தில் உள்ள எமது நிறுவனத்திற்கு
01. ஆண், பெண் தொழிலாளர்கள் (40 வயதிற்குள்)
02. வெல்டிங் வேலை தெரிந்தவர்கள்
03. வாகன சாரதிகள் (AD)
04. வாகன ரிங்கர், பெயின்ரர்
05. கணினி இயக்குனர் ஆகியோர் தேவை.
075 918 5180/ 076 578 7873

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் இயங்கும் நகை மாளிகைக்கு வேலைக்கு ஆள்கள் தேவை. பெண் - 30 வயதுக்கு மேற்பட்டவர்
ஆண் - 18 வயதுக்கு மேற்பட்டவர்
தொடர்பு - 077 6079 619

## பணிப்பெண் தேவை

நல்லூர் பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றிற்கு தங்கி பணிபுரியக்கூடிய பணிப்பெண் தேவை. (வயது - 40 - 60)
தொடர்பு - 077 3753 503

## வேலையாள்கள் தேவை

யாழில் இயங்கும் பிரபல பற்சிகிச்சை நிலையத்திற்கு வேலைக்கு ஆள்கள் தேவை.
வயது எல்லை 20 - 30
தொடர்பு - 077 716 5935

## பௌசர் சாரதி தேவை

10 WHEELAR லொறிச்சாரதி அனுமதிப் பத்திரத்துடன் முன்னனுபவமுள்ள தங்கி நின்று வேலை செய்யக்கூடிய தண்ணீர் பௌசர் சாரதி தேவை.
தொடர்பு - 077 704 0356

## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு 'வீட்டில் தங்கி நின்று வீட்டுவேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
வயது 45 - 50
சம்பளம் 30,000/= மாதம் ஒன்றுக்கு
(உணவு, தங்குமிட வசதி இலவசம்)
077 639 3782

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
19 . 10 . 1958

ஆண்டவன் அரவணைப்பில்
04 . 04 . 2008

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்
இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் சதாசிவம் இரட்ணபாலா

அன்பு என்னும் அறிவை எமக்கு ஊட்டி வளர்த்த அப்பாவே!
உங்களை இழந்தோம் என்பதை எம்மனம் ஏற்க மறுக்கின்றது
ஏனோ தெரியவில்லை? அப்பா! இமை மூடித் திறப்பதற்குள்
வருடங்கள் பத்து ஓடி மறைந்தாலும் மாறாது எம் மனம்
உங்கள் நினைவுகள் எம்முடன் என்றென்றும் வாழும் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

தங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
(cs.15173-13) குடும்பத்தினர்

## பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
11 . 03 . 1977

விண்ணில்
04 . 04 . 2007

### அமரர் செல்வன் நிர்மலன் நிர்மலதாஸ்

[நீர்வேலியம்பனை, மல்லாகம்]

"பிறப்பவர் எல்லாம் இறப்பர் எனினும்
சிறப்புயர்வுற்றோர் சிந்தையில் இருப்பர்"

ஆண்டுகள் பதினொன்று கடந்தாலும் ஆறுமோ நினைவுகள்
கண்ணெதிரில் நிற்கின்றன. பாசத்தின் இருப்பிடமாய்த் திகழ்ந்தீர்கள்
அன்பினால் அனைவரையும் கவர்ந்தீர்கள்
உங்களை உருக்கி எங்களுக்காக உழைத்தீர்கள்
உங்கள் அழியாத நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சினில்
அணையாத் தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
அம்மா, சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள்

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் பேரின்பநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியர் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி)



பிறப்பு: 18.11.1930 இறப்பு: 01.04.2018

யாழ்.சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், லண்டனைத் தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பேரின்பநாயகம் 01.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாபதி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகம்மாவின் (ஓய்வுநிலை ஆசிரியர் - சாவகச்சேரி மகளிர் கல்லூரி)அன்புக் கணவரும், இன்பக்கலாயினி (UK), இன்பதாஸ் (UK), இன்பராஜ் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான காமாட்சி, சதாசிவம் (நுணாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், லோகநாதன் (UK), ஹம்சாந்தி (UK), தனுஜா (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், கணேசன் (ஆஸ்திரேலியா), அற்புதமலர் (ஆஸ்திரேலியா), சோதிமலர் (ஆஸ்திரேலியா), சிறீமலர், நடேசன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், மயூரதன், ஹரிசன், விதுசா, நீரிஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

044 208 554 9003 (நாகம்மா).
077 151 1835 - இலங்கை

தகவல்:
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/அராலி இந்துக்கல்லூரி



எமது பாடசாலையின் பிரதி அதிபர்
**திரு.நித்தியானந்தன் முருகானந்தன்**
28.03.2018 புதன்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
**கல்விமாணி (விசேடகல்வி)** பட்டத்தை பெற்றமையையிட்டு வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களையும் பதவியுயர்வுகளையும் பெற்று நீடூழி வாழவும் வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிசங்கம் :- யா/அராலி இந்துக்கல்லூரி

## நீங்கள் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் சித்தியடையவில்லையா ? அடுத்த படிக்கு முன்னேறிச்செல்லுங்கள்

**வெற்றியாளர்கள் ஒரு நாளும் தோல்வியை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் தோல்வியாளர்கள் ஒருநாளும் வெற்றியடையமாட்டார்கள்!**

நீங்கள் க.பொ.த சாதாரணதர பரீட்சையில் சித்தியடையவில்லை என்றால் அது உலகத்தின் முடிவு அல்ல Dr.ஸ்டீபன் பத்மராஜா முதற்தடவையில் 3 பாடங்களே சித்தியடைந்தார் இரண்டாம் தடவையில் 4 பாடங்கள் சித்தியடைந்தார் அத்துடன் விடவில்லை மீண்டும் க.பொ.த சாதாரணதர பரீட்சை எழுதினார். தற்பொழுது அவரிடம் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் 1 ஆம் தரச்சான்றிதழ் உள்ளது. தெர்மோடைனமிக்ஸ் மற்றும் ஃப்ளுயிட் மெக்கானிக்ஸ் முழுமையாக்கப்பட்டு எலக்ரானிக்ஸ்ஸில் Msc பொறியியல்துறையில் Phd 'யும் முடித்து பொறியிலாளராகவும் தற்பொழுது Dr.சாம் கல்வி நிலையத்தினை நடத்திச் செல்கின்றவராகவும் உள்ளார்.
எதிர்காலம் பற்றி கனவு காண்கின்ற மற்றும் க.பொ.த சாதாரணதர பரீட்சையை மீண்டும் செய்ய முயற்சித்து அவர்களது வாழ்க்கையை சிறப்பாக்க முயற்சிக்கும் யாருக்கும் கற்பிக்க அவர் தயாராக இருக்கின்றார்.

**சிறந்த கல்வியையும் கல்வி நுட்பங்களையும் பெற்றுக் கொள்ள விரும்பினால் தொடர்பு கொள்ளுங்கள்.**
**தொடர்பு - 021 3900 190 ( Dr.சாம் கல்வி நிலையம்)**

## ஓராண்டு திவச அழைப்பு

கடந்த 17.03.2017 சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### திருமதி செல்லப்பாக்கியம் சின்னத்துரை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஆண்டுத் திவசக் கிரியைகள் நாளை (05.04.2018) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலாநிதி வீதி,
கட்டுவன் தெற்கு, ஏழாலை. குடும்பத்தினர்.
(CS/15336)(11,17)

## முதலாம் ஆண்டு சிராத்த தின நினைவு

தாயுமானவள்...



அன்னையின் மடியில்
16 . 03 . 1957

ஆண்டவன் அடியில்
16 . 03 . 2017

திதி:-
பங்குனி மாத தேய்பிறை சதுர்த்தி (04.04.2018)

### திருமதி யோகராணி சிவானந்தராசா (வவி)

(குடும்பநல சேவை உத்தியோகத்தர்- சாவகச்சேரி)

அம்மா ஓய்வு காலத்தில் எம்முடன்
இருப்பீர்கள் என நாம் நினைத்திருக்கையில்
நிரந்தரமாக ஓய்வு எடுத்து சென்றீர்களோ!
என்றும் உங்கள் நினைவுடன் நாம் இருக்க
நீங்கள் எமக்கு துணையாக இருப்பீர்களாக

கல்வயல் வீதி, முதலாம் ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

# செந்தமிழ் வி.கழக கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 4

வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கள்ளப்பாடு உதயா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மாமுலை விண்ணொளி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கள்ளப்பாடு உதயா விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் முள்ளியவளை வித்தியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதியது. இந்த ஆட்டத்தில உதயசூரியன் அணி 3:0 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முள்ளியவளை வளர்மதி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

பிறிதொரு ஆட்டத்தில் முள்ளியவளை விநாயகர் அணியை எதிர்த்து செல்வபுரம் சந்திரன் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் செல்வபுரம் சந்திரன் அணி 1:0 கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# கருணாகரன் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 4

குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கருணாகரன் அணி வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.



கொலின்ஸின்மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கருணாகரன் அணியை எதிர்த்து ஒற்றுமை அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பதியாட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் கருணாகரன் அணியின் யோகானந் ஒரு கோலைப் பதிவு செய்ய அதுவே ஆட்டத்தின் இறுதித் கோலாகவும் அமைந்தது. ஆட்ட நாயகனாக ஒற்றுமை அணியைச் சேர்ந்த கயரூபன் தெரிவு செய்யப்பட்டார். (ம-422)

# தென்னாபிரிக்கா இமாலய வெற்றி



ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில், நேற்று நிறைவுக்கு வந்த நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் 492 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்று, தொடரை 3:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது தென்னாபிரிக்க அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி சகல இலக்குகளையும் இழந்து 488 ஓட்டங்களைக் குவித்தது. அதிக பட்சமாக மார்க்ரம் 152 ஓட்டங்களையும், பவுமா ஆட்டமிழக்காமல் 95 ஓட்டங்களையும், வில்லியர்ஸ் 69 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கம்மின்ஸ் 5 இலக்குகளையும், லையன் 3 இலக்குகளையும், ஸ்ரேயார்ஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 221 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அணித்தலைவர் பெய்ன் அதிகபட்சமாக 62 ஓட்டங்களையும், கவாயா 53 ஓட்டங்களையும், கம்மின்ஸ் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிளன்டர், ரபாடா, மகராஜ் மூவரும் தலா 3 இலக்குகளையும், மோர்கல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

267 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, 6 இலக்குகளை இழந்து 344 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக பிளாசிஸ் 120 ஓட்டங்களையும், எல்கர் 81 ஓட்டங்களையும், மார்க்ரம் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கம்மின்ஸ் 4 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும் பெற்றனர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமையும் தென்னாபிரிக்காவுக்குக் கைகொடுக்க, ஆஸ்திரேலிய அணிக்கு 612 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. நேற்று முன்தின நான்காம் நாள் முடிவில் அந்த அணி 3 இலக்குகளை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹான்ஸ்கொம் 23 ஓட்டங்களுடனும், ஷோன் மார்ஸ் 7 ஓட்டங்களுடனும் இறுதி நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். ஆஸ்திரேலிய அணியின் எஞ்சிய 7 இலக்குகளையும் சாய்ப்பதற்கு தென்னாபிரிக்க அணிக்கு நேற்று 16.4 பந்துப்பரிமாற்றங்களே தேவைப்பட்டன. பிளன்டரின் வேகத்தில் அடுத்தடுத்து இலக்குகளைப் பறிகொடுத்து வெறும் 119 ஓட்டங்களில் சுருண்டது ஆஸ்திரேலியா. 492 ஓட்டங்களால் வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா.

பிளன்டர் 6 இலக்குகளையும், மோர்கல் 2 இலக்குகளையும், மகாராஜ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)



## இன்றைய மோதல்கள்

**கொலின்ஸின் கால்பந்தாட்டம்**

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள்குறித்தகழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வரணி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மகாத்மா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**அரியாலையின் கரப்பந்தாட்டம்**

அரியாலையின் 99 ஆவது சுதேசிய விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

**செந்தமிழின் கால்பந்தாட்டம்**

வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# நியூசிலாந்து – இங்கிலாந்து ஆட்டம் சமநிலை



நியூசிலாந்தின் கிறைஸ்ட்சேர்ச் நகரில் நடைபெற்ற இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையுடன் நேற்று நிறைவுக்கு வந்தது.

நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நியூசிலாந்தின் கிடைஸ்சேர்ச் ஆடுகளத்தில் கடந்த 30ஆம் திகதி முதல் நேற்று வரை நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 307 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பரிஸ்ரௌவ் 101 ஓட்டங்களையும், வூட் 52 ஓட்டங்களையும், ரூட் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சவுத்தி 6 இலக்குகளையும், போல்ட் 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 278 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக வற்லிங் 85 ஓட்டங்களையும், கிராண்ட்கோம் 72 ஓட்டங்களையும், சவுத்தி 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் புரோட் 6 இலக்குகளையும் அன்டர்சன் 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 9 இலக்குகளை இழந்து 352 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக வின்ஸ் 76 ஓட்டங்களையும், ஸ்ரோன்மன் 60 ஓட்டங்களையும், ரூட் 54 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிராண்ட்ஹோம் 4 இலக்குகளையும், வாக்நெர், போல்ட் இருவரும் தலா 2 இலக்குகளையும், சவுத்தி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

382 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய நியூசிலாந்து அணி, நேற்று முன்தின நான்காம் நாள் முடிவில் இலக்குகள் எதையும் இழக்காமல் 42 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நியூசிலாந்தின் வெற்றிக்கு 340 ஓட்டங்களும், இங்கிலாந்தின் வெற்றிக்கு 10 இலக்குகளும் தேவைப்பட்டன. அந்த அணி 8 இலக்குகளை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நாள் முடிவுக்கு வர ஆட்டம் சமநிலையானது. நியூசிலாந்து அணி தோல்வியடையக்கூடிய வாய்ப்பு ஒரு கட்டத்தில் இருந்தது. எட்டாவது இலக்குக்காக ஜோடி சேர்ந்த வாக்னர், சொட்கி இருவரும் 30 பந்துப் பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்ததை அடுத்து போராடிச் சமன்செய்தது நியூசிலாந்து. (ம)



# பெண்கள் கரப்பந்தாட்டத்தில் தெல்லிப்பழை சம்பியனானது

யாழ்ப்பாணம், ஏப். 4
யாழ்ப்பாண மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேசசெயலக அணி மோதியது. முதலாவது செற்றில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 25:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. இரண்டாவது செற்றை 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தது பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி. ஆட்டத்தின் மூன்றாவதும் இறுதியானதுமான செற்றில் 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது தெல்லிப்பழை பிரதேச செயலக அணி.

(ம-422)

# கிளி. இந்து இளைஞர் முன்னேற்றம் கண்டது



யாழ்ப்பாணம், ஏப். 4
இலங்கை கிரிக்கெட் சங்கம் நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், கிளிநொச்சி இந்து இள்ைஞர் அணி 8 இலக்குகளால் வெற்றிபெற்று முன்னேறியது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி இந்து இளைஞர் அணியை எதிர்த்து கிளிநொச்சி தூய தமிழ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய தூய தமிழ் அணி 18.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் அகிலன் 6, அனுக்சன் 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்து இளைஞர் அணி 11 பந்துப் பரிமாற்றங்களில் இரு இலக்கை மாத்திரம் இழந்து 8 இலக்குகளால் வெற்றிபெற்றது. அதிகபட்சமாக பிரதீசன் 57 ஓட்டங்களையும், றொஸ்கோ 10 ஓட்டங்களையும் அனுஸ்கன் ஆட்டம் இழக்காமல் 6 ஓட்டங்களையும் பெற்றனர்.

(ம-422)

# விக்டோரி வென்றது

யாழ்ப்பாணம், ஏப். 4
கொக்குவில் சனசமூக நிலையம் நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மூளாய் விக்டோரி அணி வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் மூளாய் விக்டோரி அணியை எதிர்த்து அரியாலை சென்றல் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் அணி 29.3 பந்துப் பரிமாற்றங் களில் சகல இலக்குகளையும் இழந்து 181 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அதிக பட்சமாக திரிசங்கர் 51 ஓட்டங்களையும், சதீஸ் ஆட்டம் இழக்காமல் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கிரி 3 இலக்குகளையும், சுஜீதரன் மற்றும் பிரதீஸ் ஆகியோர் இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்டோரி அணி 29.1 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றிபெற்றது. பிரசாந் 35 ஓட்டங்களையும், கவியோன் 33 ஓட்டங்களையும், பிரணவன் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சதீஸ் 3 இலக்குகளையும், டிலான், லிதுர்ஜன் மற்றும் ஜெனன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் இலக்குகளையும் கைப்பற்றினர்.

(ம-422)



# விநாயகர் அசத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 4
மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், அளவெட்டி விநாயகர் அணி வெற்றி பெற்றது.

சிறிமுருகனின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மானிப்பாய் பிறைற் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மானிப்பாய் பிறைற் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது. இதன்படி அந்த அணி 6.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தனேஸ் 6 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் கட்சன். யுவசாந் இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். 43 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழக அணி 2.5 பந்துப்பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து வெற்றிபெற்றது. (ம-23)




ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நேற்று நிறைவுக்கு வந்த டெஸ்ட் ஆட்டத்துடன், பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெற்றார் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் மோர்கல். (ம)

# சம்பியனானது பரிஸ் செயின்ட் ஜேர்மன்




பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில், பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி கிண்ணம் வென்றது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில், பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியை எதிர்த்து மொனாக்கோ மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் கம்பீரமான வெற்றியுடன் கிண்ணம் வென்றது பரிஸ் செயின்ட் ஜேர்மன். (ம)

# துடுப்பாட்ட வரிசையில் பெரும் பலமாக டோனி

## பயிற்சியாளர் பிளெமிங் புகழாரம்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில், சென்னை சுப்பர் கிங்ஸின் துடுப்பாட்ட வரிசையில் டோனி பெரும் பலமாக அமைவார் என்று தெரிவித்தார் சென்னை அணியின் பயிற்சியாளர் பிளெமிங்.

ஐ.பி.எல். தொடரின் முதலாவது ஆட்டத்தில் சென்னை, மும்பை அணிகள் எதிர்வரும் 7ஆம் திகதி மோதவுள்ளன. வான்கடேயில் நடைபெறும் இந்த ஆட்டத்துக்காக மும்பைக்கு நேற்றுச் சென்றது சென்னை அணி.

சென்னை அணி தொடர்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார் பிளெமிங்.

'அணித் தலைவர் டோனி, முன்வரிசையில்தான் பெரும்பாலும் களமிறங்குவார். டோனி எந்த வரிசையிலும் ளைமிறங்கி விளையாடக் கூடியவர் என்பதால், சூழ்நிலைகளைப் பொறுத்தும் அவரின் இடம் தீர்மானிக்கப்படும். அதில் டோனியும் உறுதியாகவுள்ளார். பிராவோ, ஜடேயா, ஹர்பஜன் மூவரும் துடுப்பாட்டத்திலும் ஈடுபடக்கூடியவர்கள். அவர்களை வைத்து சிறப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன' என்று பிளெமிங் மேலும் தெரிவித்தார். (ம)

# தொடரை வென்றது பாகிஸ்தான் அணி




மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதிசெய்தது பாகிஸ்தான் அணி.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில் முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்ற காரணத்தால் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாய நிலை மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 205 ஓட்டங்ளைப் பெற்றது. அதிகபட்சமாக அசாம் ஆட்டமிழக்காமல் 97 ஓட்டங்களையும், திலட் 63 ஓட்டங் களையும், மலிக் ஆட்ட மிழக்காமல் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் எம்ரிட், வில்லியம்ஸ், சிமித் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 123 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 82 ஓட்டங்களால் வெற்றி பெற்றது பாகிஸ்தான்.

பந்துவீச்சில் அமீர் 3 இலக்குகளையும், சடப் கான், திலட் இருவரும் தலா 2 இலக்குகளையும், நவாஸ், ஹசனலி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

# டோனியும் கோக்லியும் எனது முக்கிய இலக்கு

## குல்தீப் சபதம்

இந்திய அணியின் தற்போதைய தலைவர் கோக்லி, முன்னாள் தல்லவர் டோனி இருவரும்நடப்புவருட ஐ.பி.எல். தொடரில் எனது முக்கிய இலக்கு என்று தெரிவித்தார் இந்திய அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளரான குல்தீப் யாதவ்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் பெங்களூரின் தலைவராக விளையாடுகிறார் கோக்லி. சென்னை சுப்பர்கிங்ஸின் தலைவராக விளையாடுகிறார் டோனி. கொல்கத்தாவின் சுழல்பந்து வீச்சாளராகவும் அந்த அணியின் முக்கிய துருப்புச் சீட்டாகவும் குல்தீப் இருப்பார் என்று சொல்லப்படுகிறது. இதையடுத்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர்.

"இந்த வருட ஐ.பி.எல். தொடரில் சில அடைவுகளை எனக்கு நானே நிர்ணயித்துள்ளேன். அதேபோல் நான் வீழ்த்த விரும்பும் இலக்குகளையும் நிர்ணயித்துள்ளேன். அவர்களில் டோனி, கோக்லி இருவரும் முக்கியமானவர்கள். அவர்கள் இருவரையும் வீழ்த்துவது எனக்கு இன்றியமையாதது" என்று குல்தீப் மேலும் தெரிவித்தார். (ம)




**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

O/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக நுழைவு மாணவர்கள், தொழில்புரிவோர்
வெளிநாடு செல்வோர், இல்லத்தரசிகள், பட்டதாரிகள்
விற்பனை மற்றும் வியாபார பிரதிநிதிகள் இணையமுழயும்

பாடப்புத்தகங்கள், DVDகள் மற்றும் சான்றிதழ் இலவசம்

முதல்நாள் வகுப்பு இலவசம் - 07.04.2018 காலை 08:00

1. காலை 08-10
2. காலை 10-12
3. மதியம் 01-03
4. மாலை 03-05

வாரநாள் பிரிவுகள் (திங்கள், புதன்) ஆரம்பம் - 09.04.2018
1. காலை 08-10 2. காலை 10-12

அனைவருக்குமான தொடக்கவகுப்பு சனி காலை 08:00

SAAMSON Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்,
021 320 3313 077 1570 486


## மரண அறிவித்தல்

### கனகசபாபதி சின்னம்மா



மண்ணில்: 10.06.1932
விண்ணில்: 01.04.2018

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி சின்னம்மா 01.04.2018 ஞாயிற்றுக் கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-வள்ளிமுத்துதம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபாபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கம், மார்க்கண்டு, அன்னம்மா மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலகிருஷ்ணன், சிவபாக்கியம், விஜயலட்சுமி, துரைசிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மல்லிகாதேவி, இராசேந்திரம், நவரத்தினராஜா, அருள்நந்தினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2018) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதேச செயலக வீதி,
உடுவில், சுன்னாகம்.

தகவல்: பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

(CS/16376)(6.17)


**காணி விற்பனைக்கு உண்டு**

அரியாலை கிழக்கில் கட்டியில் (விசுவநாதன் தோட்டம்) விற்பனைக்கு உண்டு. நான்கு பக்கமும் வேலி உண்டு. தென்னங்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களை தொலைபேசி ஊடாக அறியலாம். தரகர் தேவையில்லை.

077 323 8235
மோ.சஜித் - 078 303 6311 (Viber)

**விற்பனைக்கு**

யாழ்.பிறவுண் வீதிக்கு முன்பாக சிவகுருநாதன் வீதியில் 4பரப்பு வெற்றுக் காணியும் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகில் 10 பரப்பில் அமைந்த இரு வீடுகளும் யாழ். வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 5 பரப்புக் காணியும், 10 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

(AKN 420)(04.17)

077 723 2535


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.